
உ
சிவமயம்

# ஆதிமயிலிட்டி
# திருவருள்மிகு
# பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்



# மஹா கும்பாபிஷேக மலர்

## 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆதிமயிலிட்டி
# அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்
# மஹா கும்பாபிஷேக மலர் - 2022



**வெளியீடு:**

**பரிபாலன சபை**

**அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்**

**ஆதிமயிலிட்டி**

23-05-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

நூல் : ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்
புனராவர்த்தன நூதனப் பிரதிஷ்டா அஷ்டபந்தன
மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் –2022
ஆலயத்தின் முதலாவது ஆவணப்பதிப்பு

முதற்பதிப்பு : 23. 05. 2022

மலர்க்குழு : திரு. இரா. கேதீசன்
திருமதி. ஜெ. திரிலோஜினி
திருமதி. சு. இந்திரை

வெளியீடு : பரிபாலன சபை,
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்.

பதிப்புரிமை : பரிபாலன சபை,
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்.

அச்சுப்பதிப்பு : திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மயிலை விநாயகஸ்துதி

## வெண்பா

சீர்த்தியணி மாவைச் சிவசுப் பிரமணிய
மூர்த்திபதம் பாட முழுதுலகும் - ஏத்துச்
சிதமா மயிலைத் திருப்பதிவா ழானே
வதனா வென் னுள்ளத்தில் வா

## கீர்த்தனை

இராகம்:- சங்கராபுரணம் தாளம்:- மிஸ்ரம்

பல்லவி

மயிலையம்பதி வாழ்ந்திடும்
மதகயமுக மாமு கேஸ்வரா
மயிலையம்பதி வாழ்ந்திடும்.

அனுபல்லவி

கயிலையங்கிரிக் கடவுளினானைக்
கன்றன்பர்க் கொன்றுங்கன்
மம் பொன்றத் தன்மஞ் செய் மயிலை

சரணங்கள்

ஆலடியினி லைங்கரன்
அகமகிழ்ந்தெமக் கருள்செய்யும்பரன்
ஆலடியினி லைங்கரன்
ஏலுமூஷிக மேறிவருநாதன்
ஏரம்பன் மாதங்கற்
கூரம் பென் றோர்கொம்பன் மயிலை

அண்டர்க்கரும் பராபரன்
அடைந்தவர்க்குமுன் வருங்கிர்பாகரன்
அண்டர்க்கரும் பராபரன்
தொண்டர்க்கனந்த சுகஞ்செய்விநாயகன்
துங்கக்கண பதியார்தரு
கங்கைக்கொரு புதல்வாதிரு மயிலை

மன்றினிருத்தம் புரிந்தவன்
மதிக்கரதமச் சரிந்தவன்தங்க
மன்றினிருத்தம் புரிந்தவன்
சென்றெவைகட்குமு னின்றிடுநாயகன்
சீரிந்த்ரற் காறுந்தச்
சேறும்புட் கோலங்கொள் மயிலை

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த
திரு. சி. வேலுப்பிள்ளை (உபாத்தியார்) அவர்களால்
இயற்றி இசையமைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


அ. ஆசிச் செய்திகள்

இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் ........ 01
மஹாராஜஸ்ரீ து. ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் ........ 02
சிவஸ்ரீ. சு. செந்தில்ராஜ சிவாசாரியார் ........ 03
சிவசக்திஸ்ரீ. ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள் ........ 04
ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ. க. ச. சோமாஸ்கந்தக் குருக்கள் ........ 05
சிவஸ்ரீ. சிவ.சோம. தீபதர்சனக் குருக்கள் ........ 06
ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ........ 07
செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகன் ........ 08
ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ........ 09
சுவாமி அக்ஷராத்மானந்தா ........ 10
சுவாமி குணாதீதானந்த சரஸ்வதி ........ 11
தவத்திரு. வேலன் சுவாமிகள் ........ 12
மஹா கர்த்த தாஸ் ........ 13

ஆ. வாழ்த்துச் செய்திகள்

அகில இலங்கை இந்து மாமன்றம் ........ 14
வட மாகாண ஆளுநர் ........ 15
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ........ 16
யாழ் மாவட்ட முன்னாள் அரசா அதிபர் ........ 18
தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ........ 19
வலி வடக்கு பிரதேச சபை, தவிசாளர் ........ 20
கம்பவாரிதி இ.ஜெயராஜ் ........ 21
பரிபாலன சபை தலைவர் ........ 22
பரிபாலன சபை உப தலைவர் ........ 23
பரிபாலன சபை செயலாளர் ........ 24
பரிபாலன சபை பொருளாளர் ........ 26
சிற்பாசாரியர் ........ 27

இ. ஆலய வரலாறு ........ 28

ஈ. கட்டுரைகள்

ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் பற்றிய என் நினைவலைகள் ........ 36
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் ........ 38
மஹாகும்பாபிஷேக மகிமை ........ 39
எனது குலதெய்வம் ........ 41
பெரும்பரப்பு விநாயகரும் நானும் ........ 42
பரிவாரமூர்த்தி சண்டேஸ்வரப் பெருமான் பிரதிஸ்டை ........ 45




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குலதெய்வம் பெரும்பரப்புப் பிள்ளையார் .............................. 46
பிள்ளையாரின் பஞ்சாமிர்தமும் நானும் .............................. 47
கோயில் கருவறையும் அதன் இரகசியங்களும் .............................. 48
விநாயகப் பெருமானை வழிபட்டு நாம் எல்லோரும் இன்பம் அடைவோம் .............. 50
இந்துசமயிகள் வாழ்வில் அறச்சிந்தனைகள் .............................. 52
ஆலயங்களின் அவசியம் .............................. 55
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் .............................. 57
விநாயகர் வழிபாட்டின் முதன்மையும் பழமையும் .............................. 58
விநாயகரும் அறுகம்புல்லும் .............................. 61
விநாயகவழிபாடும் விநாயகவிரதங்களும் .............................. 62
'மேன்மைகொள் சைவநீதி' .............................. 64
என் பார்வையில் ஆன்மிகம் 2022 .............................. 70
அபிஷேக பலன் .............................. 74
கண்கண்ட தெய்வம் பெரும்பரப்புப் பிள்ளையார் .............................. 75
ஐங்கரன் அடிபணிந்தெழுந்திடுவீர் .............................. 76
'கண்ணிற் பணிமின் கனிந்து' .............................. 77
21ஆம் நூற்றாண்டில் ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயத்தின் தோற்றப் பொலிவு .............................. 80
கோயில்களில் மணி அடிப்பதும் சங்கு ஊதுவதும் ஏன்? .............................. 84
வைரவர் வழிபாடு .............................. 86
யாழ்ப்பாண இந்துசமய செல்நெறியில் இளைஞர்களின் பங்கும், பணியும் .............. 88

உ. ஆலய பரிபாலன விபரம்
1988ஆம் ஆண்டு நிர்வாகம் .............................. 97
தற்போதைய நிர்வாகம் .............................. 101
பிரதேச செயலகப் பதிவு .............................. 102
பொலிஸ் பதிவு .............................. 103
வலி வடக்கு பிரதேச சபை .............................. 104
கட்டிட ஒப்பந்தம் .............................. 105
மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் .............................. 111

ஊ. கணக்கு விபரமும் பொருட்களின் விபரமும் (06-04-2022) .............................. 112

எ. மலர்க் குழுவின் உள்ளத்திலிருந்து .............................. 122

ஏ. பின்னிணைப்பு
ஊஞ்சல் பாட்டு .............................. 123



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலை நகுலேஸ்வரம்

**ஸ்ரீ நகுலாம்பிகாசமேத நகுலேஸ்வரஸ்வாமி கோவில்**

KEERIMALAI

**SRI NAGULAMBIKASAMETHA NAGULESWARASWAMY KOVIL**




சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்
'ஆதீன கர்த்தா'
நகுலேஸ்வரம்,
கீரிமலை,
காங்கேசன்துறை - P.O.
இலங்கை.

Sivasri K. Naguleswarakkurukkal
'Adeena Karththa'
Naguleswaram,
Keerimalai,
Kankesanturai - P.O.
Sri Lanka.


# கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தா அவர்களின் ஆசிச்செய்தி

பழம்பெரும் ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயத்தில் பஞ்சகுண்ட அஷ்டபந்தன புனராவர்த்தன நூதனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது, என்பதை அறிந்து மிக மகிழ்வடைந்தேன். 1968ஆம் ஆண்டில் பூதப்பிள்ளை உடையார் தலைமையில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை பிரதம குருவாக இருந்து நான் நிறைவேற்றியமையும் பின்னர் 1988 ஆம் ஆண்டு பாலஸ்தாபனத்தை செய்துவைத்தமையும் நினைவில் இருக்கிறது.

நீண்ட கால இடப்பெயர்வின் பின் ஆதிமயிலிட்டியில் மக்கள் மீளக் குடியேறி, பழம்பெருமை வாய்ந்த பெரும்பரப்பு பிள்ளையாருக்கு முற்று முழுதாக புனருத்தாபனம் செய்து, கும்பாபிஷேகம் செய்வதற்கு பிள்ளையாரின் அருட்கடாட்சம் அம்மக்களுக்கு கிட்டியுள்ளமை பெரும்பேறே. கும்பாபிஷேகத்தில் பங்குபற்றும் சிவாசாரியார்கள், கும்பாபிஷேக உபயகாரர்கள், ஊர்மக்கள் அனைவரும் நீடூழி வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானினதும் நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானினதும் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

"சர்வே ஜனகா சுகினோ பவந்து"

சுபம்

**இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்,**
ஆதீனகர்த்தா,
ஸ்ரீ நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரசுவாமி கோயில்,
கீரிமலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்



# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
# MAVIDDAPURAM SRI KANTHASWAMY TEMPLE



மஹாராஜஸ்ரீ
**து. ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்**
ஆதீன கர்த்தா - பிரதமகுரு
மாவையாதீனம், மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.

*Maharajasri:*
D. S. Ratnasabapathy Kurukkal
*Governing Authority & Chief High Priest*
*Mavai Aadheenam, Maviddapuram,*
*Tellippalai, Sri Lanka.*

## மாவை ஆதீனப் பேரரசின் ஆசிச்செய்தி

இலங்கையில் யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ கந்தசுவாமியார் கோவில் ஆரியர், இயக்கர், நாகர் காலத்திற்கு முற்பட்ட வரலாறுகளுடன் எழுச்சிபெற்றுக் கொண்டுள்ளது.


மாவைக்கந்தன் ஆலயத்தைச் சுற்றியுள்ள இரண்டு கிலோமீற்றர் சுற்றுக் கிராமங்களில் பல கோவில்கள் அமைந்துள்ளன. இவற்றுள் மாவைக் கந்தன் ஆலயத்துக்கு கிழக்குத் திசையில் ஆதி மயிலிட்டி என்னும் பெயருடைய கிராமத்தின் பெரும் பரப்பு நிலத்தில் சுமார் இருநூறு வருடத்தின் முன் ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு விநாயகர் என்னும் கோவிலை ஸ்தாபித்து வழிபாடியற்றப்பட்டு வந்தது. பல இன்னல்களின் மத்தியில் சேதமடைவிக்கப்பட்ட கோயிலில் கும்பாபிஷேகம் ஒன்று 1968 ஆம் ஆண்டு பூதப்பிள்ளை உடையார் தலைமையில் (கீரிமலை நகுலேஸ்வர ஆதீனம்) நடைபெற்றதாக வரலாறு உண்டு.

இதன் பின் 1988 ம் ஆண்டு பாலஸ்தானம் அப்போதைய பரிபாலன சபையால் செய்யப்பட்டது. தற்போது புனருத்தாரணம் நடைபெற்று திருப்பணி வேலைகளை தொடர்ந்து நடாத்தி முடித்து மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எந்தவித தடையும் இன்றி நடைபெற்று, எல்லாம் வல்ல ஸ்ரீ விநாயகப் பெருமானின் திருவருளால் சகல ஜீவராசிகளும் எல்லா நலமும் பெற்று இன்புற்று வாழ பிரார்த்தித்து ஆசிர்வதிக்கிறேன்.

**மஹாராஜஸ்ரீ து. ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்,**
ஆதீனகர்த்தா - பிரதமகுரு,
மாவையாதீனம், மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரம்மஸ்ரீ சுந்தர செந்தில்ராஜ சிவாச்சாரியர்
துர்க்கா தேவஸ்தானம் துர்க்காபுரம், தெல்லிப்பளை.
*Piramasri Sunthara Senthilraja sivachchariyar,*
*Arch priest.*

077-8911898
021-2059821
071-8678856
Senthilr755@gmail.com

Thurkka devi thevasthanam
Thurkkapuram, Tellippalai.



## ஆசிச்செய்தி

இந்து சமயத்தில் மட்டுமல்ல பௌத்தம், சமணம், வைணவம் போன்ற சமயங்களிலும் முதன்மை வணக்கத்திற்குரிய தெய்வம் கணபதி. இந்து மதத்தின் ஆறு பிரிவுகளிலும் பொதுவான கடவுள் விநாயகப் பெருமான். சமயங்களில் மட்டுமன்றி தமிழ் நூல்களில் விநாயகப் பெருமானின் கடவுள் வாழ்த்து இல்லாத நூல்களே இல்லை எனலாம். அப்படியான முதன்மை வணக்கத்திற்குரிய ஐங்கரப் பெருமானுக்கு ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பதியில் ஆலயம் அமைத்து பெரும் சாந்தி விழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். அந்தக் குடமுழுக்கு வைபவத்தை நடாத்தும் சிவாசாரியார்கள், ஆலயம் அமைத்த பெருமக்கள், தர்மகர்த்தாக்கள், பரிபாலன சபையினர், அடியவர்கள், ஊரவர் எல்லோருக்கும் விநாயக பெருமானின் திருவருளும் எனது ஆசிகளும் உரித்தாகுக.

இவ்வண்ணம்,
**சிவஸ்ரீ. சு. செந்தில்ராஜ சிவாசாரியார்,**
பிரதமகுரு,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீரஸ்த்து

**சாரதாபீடம் ஜோதிட நிலையம்**
**SARATHA PEEDAM HOROSCOPE CENTER**

"செஞ்சொற்கவிதா சிரோமணி" "ஜோதிஷ வித்வ சிரோமணி"
"சக்தி உபாசக சங்கரர்"
கலாநிதி சிவசக்திஸ்ரீ. ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்
(இந்துமதக்குரு, ஜோதிடர், கவிஞர், எழுத்தாளர்)
(கரவெட்டி நுணுவில் குளக்கட்டு விநாயகர் ஆலய பிரதமகுரு)

"Sensot Kavitha Siromani" Jothisa Vidhwa Siromani
"Shakthi Ubasaga Sankarar"
Dr. Sivashakthysri Ram. Thevalogeswara Kurukkal
(Hindupriest - Astrologist - Poet Writer)



## ஆதி மயிலிட்டி ஐங்கரனுக்கு அழகு குடமுழுக்கு விழா .......

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு தனித்துவமான சிறப்புகள் பல உண்டு. அந்த வகையில் விவசாயம் எனும் வாழ்வாதாரம் பூரணமான செழிப்பு நிலை பெறும் ஆதிமயிலிட்டிப்பதி பன்னெடுங்காலமாக உன்னதமான திருப்பணிகளின் மூலம் கம்பீரமாக காட்சி தருகின்றது.

இந்த பணிக்கு தம்மை அர்ப்பணித்து செயற்பட்ட ஆலய தலைவர், நிர்வாக சபை அங்கத்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஒரு ஊர் எல்லா பூரணத்துவமும் நிறைந்து விளங்க வேண்டும் என்றால் அவ்வூரின் ஆலயத்தில் நித்திய நைமித்தியங்கள் மிகவும் சிறப்பாக ஆகம நியமங்களோடு நடைபெற வேண்டும்.

இதையுணர்ந்து நற்செயலான ஆலய திருப்பணி செய்த அனைவரும் பெரும் போற்றுதலுக்குரியவர்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இந்த ஆலய தலைவரான திரு. மகேசன் சுகுமாரன் சிறந்த சைவ பாரம்பரிய குடும்ப மரபில் வந்தவர். இவர்களின் அற்புதமான பணியாக அமைந்த மூலஸ்தான கருங்கற் திருப்பணி காலத்தால் அழியாத அற்புதமான செயல்பாடாகும். மயிலிட்டி கிராமம் நாட்டின் போர் சூழலில் பெரிதும் பாதிக்கப்பட்ட ஊராகும். இன்னும் அந்த போர் சூழலில் அமைந்த வடுக்கள் நீங்காத ஒரு இடமாகவும் இராணுவம் முற்று முழுதாக விட்டு அகலாத இடமாகவும் பதிவு கொண்டுள்ளது.

இவ்வாலயம், பெரும்பரப்புப் பிள்ளையாரின் பெரும் கருணையால் பூரணமான அருட் பொழிவோடு மிக அழகுற காட்சி தருகின்றது. ஆலயத்தின் இந்த திருப்பணிகள் ஆலயம் சார்ந்த வழிபடுவோர், உபயதாரர் குடும்பங்களின் திருப்பணி மூலமாக நிறைவாக அமைந்துள்ளது. ஆகம மரபிற்கான கட்டிடங்கள் சிறப்பாக நிறைவாக அமையப் பெற்றதும் சிறப்பு நிலையே. ஆலயத்தை மிகச் சிறப்பாக, நிறைவாக கட்டியது போலவே ஆலய நித்திய பூஜைகள் மிக சிறப்பாக அமைய வேண்டும்.

மீண்டும் ஆதி மயிலிட்டி ஊரின் அனைத்து வளங்களும் மேன்மையுற்று ஊர் மக்கள் பூரணமாக தமது இருப்பிடம் வந்து வாழ்வை தொடர பெரும் பரப்புப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகம், கட்டிய நிகழ்வாக அமைய வேண்டும் என விநாயக பெருமானை மனதார பிரார்த்தனை செய்து, ஆலயம் சார்ந்த குருமார், நிர்வாக சபையினர். உபயதாரர்கள், திருப்பணியாளர்கள், சிற்பாசாரிகள், மங்கல வாத்திய கலைஞர்கள் அனைவருக்கும் எமது மனமுவந்த நல்லாசிகள், வாழ்த்துக்கள் நிறைவாகட்டும்.

அரும்பதி மயிலிட்டி பெரும் பரப்புப் பதி
விரும்பி அமர்ந்த நாத பெரும் கணபதி போற்றி ...

இவ்வண்ணம்,
**சிவசக்திஸ்ரீ. ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்,**
பிரதம குரு,
கரவெட்டி, நுணுவில் குளக்கட்டு விநாயகர் ஆலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீராம ஜெயம்
Srirama Jeyam

**வேதாகமகிரியா கலாபூஷணம் பிரதிஷ்டா கிரியாபானு**

**ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ. க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**

**பிரதமகுரு. பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்**

**Vedakama Kiriya Kalapusanam, Pirathisda Kiriyabanu**

**Sri Vishnu Sri K.S. Somaaskanthakurukkal**

*Chief Priest, Ponnalai Sri Varatharajapperumal Thevasthanam*

பொன்னாலை,
சுழிபுரம்.

Ponnalai,
Chulipuram.




# ஆசிச்செய்தி

ஓம் கணபதி துணை

ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் கோவில் பெரும் சாந்தி விழா 06.04.2022 புதன்கிழமை வரும் சுபமுகூர்த்தத்தில் நிகழத் திருவருள் பொலிந்துள்ளது. மேலும் இவ்வாலயம் இருநூறு வருடம் பழமை வாய்ந்தது. யுத்தம் காரணமாக சிதைவடைந்த இவ்வாலயம் மீள் குடியேற்றத்திற்கு பின்பு ஆலய பரிபாலனசபை, அடியவர்கள், தலைவர் மகேசன் சுகுமாரன் இவர்களின் சிவப்பணி, உள் நாட்டு, வெளிநாட்டு பக்தர்களின் தர்மநிதி கொண்டு மூலஸ்தானம் கருங்கல்லினால் அமைக்கப்பட்டது. மற்றும் பரிவாரதேவர்கள், வசந்த மண்டபம், சுற்றுமதில்கள், கொட்டகைகள் கொரோனா எனும் கொடிய நோய் பரவிய காலத்திலும் அமைக்கப் பெற்றது.

அராலியூர் சிற்பாசாரி திரு. சசிதரன், அடியேனை பரிபாலனசபை தலைவருக்கு அறிமுகம் செய்து எனது ஆலோசனைகளுடன் தனது பொறுமை, லாவண்ணியத்தினாலும்; சிற்பசாஸ்திர முறைப்படி ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்து ஓர் பூரணமான ஆலயமாக இன்று பெரும் சாந்தி விழா காணுகிறது. இந்த வகையில் சபை தலைவர், உறுப்பினர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு அடியவருக்கும் விநாயகப் பெருமானுடைய திருவருட் கடாட்சம் வேண்டி ஆசிகூறி அமைகிறேன்.

இத்துடன் முற்றுப்பெறாத திருப்பணிகளும், இராஜகோபுரம், சித்திரத்தேர் மிக விரைவில் அமைய பெருமானின் திருவருள் கிடைப்பதாக.

**ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ க. ச. சோமாஸ்கந்தக் குருக்கள்,**
பிரதமகுரு,
வரதராஜபெருமாள் தேவஸ்தானம்,
பொன்னாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை**
**ATHI MYLIDDY PERUMPARAPPU PILLAIYAR ALLYA PARIPALANA SABAI**

**Athimyliddy**
**Myliddy North**
**Kankesanthurai**

ஆதிமயிலிட்டி
மயிலிட்டி வடக்கு
காங்கேசன்துறை



## ஆசியுரை

ஆதிமயிலிட்டியிலே கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் பெரும்பரப்பு பிள்ளையார் குடமுழுக்குக் காணும் அருமருந்தன்ன நன்நாளில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

எனது பேரனார் சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்களைத் தெடர்ந்து தந்தையார் பிரம்ம ஸ்ரீ. சோமசுந்தரசர்மா அவர்கள் இந்த ஆலயத்தில் நித்திய பூசைகளை நடத்தி வந்துள்ளார். சிறுவனாக இருந்தவேளை நான் எனது தந்தையாருடன் ஆலயத்துக்கு வந்து எம்பெருமானை வழிபட்டிருக்கிறேன். ஆலயக் கிரியைகளுக்கு சிறு சிறு உதவிகளைச் செய்திருக்கிறேன்.

ஆயினும் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து, சந்ததி சந்ததியாக வாழ்ந்த இந்த ஆதிமயிலிட்டி மண்ணை விட்டு எல்லோரும் இடம்பெயர நேரிட்டது. இதற்குச் சற்று முன்னர் சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயப் பூசைப் பொறுப்பினையும் எனது தந்தையார் ஏற்றமையால், நாங்கள் சுன்னாகத்தில் வாழ ஆரம்பித்திருந்தோம். மக்கள் தமது சொத்துக்களையும், மண்ணையும் விட்டு விட்டு ஓடித் தப்பிய வேளையில் ஆலய விக்கிரகங்களையும் கைவிட்டுச் செல்ல நேர்ந்தது. பல ஆலயங்களது விக்கிரகங்களை எடுத்து வழிபாடாற்ற முடியாமற்போனது.

ஆனால் பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய விக்கிரகம், எம்பெருமானது திருவருளும், எனது தந்தையாரினது விடாமுயற்சியும் கைகூடியதால், பாதுகாப்பாக பக்த அடியார்களால் எடுத்து வரப்பட்டு, சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்தில் வைக்கப்பட்டு, பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. அடியார்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றவும் வழியேற்பட்டது. நீண்ட மூன்று தசாப்தங்களின் பின்னர் சொந்த இடங்களுக்குத் திரும்பக்கூடிய சூழல் கனிந்தது. மக்கள் மீளக் குடியமர்ந்து, தமது வாழ்வாதாரத் தொழில்களை ஆரம்பித்தவேளை, தமது குலதெய்வத்துக்கு மீளவும் கோவில் அமைத்து, கும்பாபிஷேகம் செய்ய எண்ணித் துணிந்தனர். அந்தத் துணிவும், செயலும் காரணமாக கம்பீரமாக நிமிர்ந்த ஆலயத்தினை நாம் தரிசிக்க முடிகிறது. எம்பெருமானுக்கு குடமுழுக்கு நடைபெறும் இந்நாளில், சகல அடியார்களுக்கும் வாழ்வில் மேன்மையும், செழிப்பும் கிடைக்க இறையாசியை வேண்டுகிறேன். இந்தப் பெருங்கைங்கரியத்தை நிறைவேற்றிய அனைவருக்கும் எம்பெருமானுடைய அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி, ஆசி கூறுகிறேன்.

"சர்வே ஜனகா சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ சிவ.சோம. தீபதர்சனக் குருக்கள்,**
பிரதமகுரு,
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயம் இராணுவத்திடம் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில்...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்


ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.




## நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

விநாயகர் அடியார்களுக்கு,

ஆதிமயிலிட்டி பெரும்பரப்பில் எழுந்தருளி ஆட்சிபுரியும் விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவது ஊருக்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். நீண்ட பழமையான இவ்வாலயம், நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக பல சிதைவுகளைக் கண்டு, இங்கு கும்பாபிஷேகம் நடைபெறுவது வரலாற்று எழுச்சியாகும். சைவ மக்களின் வரலாற்றுப்பெருமையுடைய பல சிறப்புக்களைக் கொண்ட இந்த ஊர் மீண்டும் புத்துணர்ச்சி பெற்றிருப்பது சைவமக்களின் மனதை தெய்வீக நிலைக்கு உருவாக்கியுள்ளது.

கோயில்களே சமூகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டும் வாயில்களாகும். மக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகிய அனைத்தும் கோயில்களை மையமாக வைத்தே வளர்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

200 ஆண்டு பழமை வாய்ந்த ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் கோயில் கருங்கல்லாலான மூலஸ்தானத்துடன் புதுபொழிவு பெற்று நடைபெறும் கும்பாபிஷேகத்தை தரிசித்து இறையாசி எல்லோருக்கும் கிடைக்க பிராத்திக்கின்றோம்.

**'என்றும் வேண்டும் இன்ப அன்பு'**

**ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,**
ஆதீன குரு முதல்வர்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka.
T.P. No.:-021 321 3151
பதிவிலக்கம்:- HA/5/JA/193
E.Mail:- thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com
Fax:- 021 224 1909
திகதி...../...../20....



# செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகனின் ஆசிச்செய்தி

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு விநாயகப்பெருமான் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் குறித்து நல்லாசி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். பழம்பெரும் திருக்கோயில் எம் மண்ணில் நடைபெற்ற போர் அனர்த்தத்தினால் முற்றாக கீலமடைந்து பக்தர்கள் பெருங்கவலை கொண்டார்கள். சுமார் 30 ஆண்டுகள் ஆதிமயிலிட்டி பகுதிக்கு மக்கள் போகமுடியாது அல்லற்பட்டனர். தங்கள் குலதெய்வத்தை நெஞ்சிலே இருத்தி வழிபாடு செய்து வந்தனர். தங்கள் ஊரையும் கோயிலையும் மீட்டெடுப்பதற்காக இவ்வூர் மக்கள் பட்ட அவலம் சொல்லில் வடிக்க முடியாதது. விநாயகப்பெருமானின் திருவருளால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இவ் ஆலயச்சுற்றாடலில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டது. அவ்வேளை தங்கள் குலதெய்வ கோயிலின் சுற்றாடல் முற்றாக அழிக்கப்பட்டு கோவில் உடமைகள் எதுவும் இல்லாத நிலை காணப்பட்டது.

தங்கள் பாரம்பரியமான ஆலயத்தை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும் என்று ஆலய குடும்பத்தவர்கள் முயற்சி எடுக்க தொடங்கினர். கருவறை முதல் வசந்த மண்டபம், பரிவாரக் கோவில்கள், மணிக்கூட்டுக் கோபுரம், யாகசாலை, ஸ்தம்பமண்டபம் அனைத்தையும் புதிதாகக் கட்டியெழுப்பி இன்று கோவில் பெரு எழுச்சி கண்டு விட்டது. இத் திருக்கோயில் மூலஸ்தானத்திற்கு அடிக்கல் நாட்ட வருமாறு திரு. இலங்கைநாயகம் மகேசன் சுகுமாரன் குடும்பத்தவர்கள் என்னை அழைத்தார்கள். சிறியேன் அடிக்கல் நாட்டும் வாய்ப்பைப் பெற்றேன். கட்டிட நிர்மாணம் நடைபெறும்போது ஆலோசனை வழங்குவதற்கும் என்னை அழைத்திருந்தார்கள். விநாயகரின் திருவருளால் குறுகிய காலத்தில் கட்டுமானப்பணி நிறைவேறியுள்ளது. ஆலயச் சுற்றாடல் புனிதம் பெற்று விட்டது. ஊர்மக்கள் நம்பிக்கையோடு குடியேறத் தொடங்கி விட்டனர்.

இவ்வாலயத்தில் நடைபெற்ற பாரிய திருப்பணி சொல்லில் வடிக்க முடியாதது. முற்று முழுதாக ஒரு புதிய கோயில் உருவாகியுள்ளது. தங்கள் குலதெய்வத்தை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும் என அறங்காவலர்கள் பாடுபட்டனர். தங்கள் சொந்தச் செலவில் பெரும் பகுதியை தாராளமாகக் கொடுத்து திருப்பணியை நிறைவேற்றியுள்ளனர். இவ் உயர்ந்த திருத்தொண்டிற்காக தங்களை அர்ப்பணித்து செயற்பட்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். குறிப்பாக திரு. இலங்கைநாயகம் மகேசன் சுகுமாரன் அவர்கள் கொழும்பில் இருந்து அடிக்கடி வருகை தந்து இப்பாரிய பொறுப்பை நிறைவேற்றுவதில் மிகவும் அக்கறை செலுத்தினார். புதிய விக்கிரகங்கள், ஆலய பூசை உபகரணங்கள் உள்நாட்டிலும், இந்தியாவிலும் இருந்து கொண்டு வந்து சிறப்பு செய்துள்ளனர். இப்பாரிய திருக்கோயிலை எதிர்கால சந்ததி மிகக் கவனமாக பாதுகாக்க வேண்டும் என வேண்டி எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன்,**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Subramuniya Kottam

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்

*God Siva is Immanent Love and Transcendent Reality*

*அன்பே சிவமயம் சத்தியமே பரசிவம்*

Phone : 022 223 0233
thondunathan@hotmail.com

Old Road,
Kopay, SriLanka.




## ஆன்மிகச்சுடர். ரிஷி தொண்டுநாத சுவாமிகள் வழங்கிய ஆசிச்செய்தி

விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமான் திருவருள் நிலவட்டும். ஆதிமயிலிட்டி கிராமத்தில் ஆதிதிருக்கோவிலாக விளங்கிய ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் கோவில் மீள கட்டியெழுப்பப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். போர்தின்ற ஊர்களில் மயிலிட்டி முக்கியமானது. வீடுகள் மட்டுமன்றி, அழகிய கோயில்கள் அனைத்தும் அழிந்தொழிந்தது. மயிலிட்டி வாழ் மக்கள் பிரிந்து பிரிந்து வேறு ஊர்களில் வாழ்ந்தனர். சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பின் தங்கள் குலதெய்வங்களின் சந்நிதானங்கள் முற்றாக அழிந்துபோன காட்சியைக்கண்டு வெதும்பினர். ஊர்ப்பற்றும் தம் குலதெய்வப் பற்றும் கொண்ட பக்தர்கள் மீளப் பெருங்கோயில்கள் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மிகப்பெரும் சாதனையாக அடி அத்திவாரத்தில் இருந்து புதுக்கோவில் எழுந்து நிக்கிறது. இப்பாரிய திருப்பணியில் ஈடுபட்ட அனைவரையும் இதயபூர்வமாக வாழ்த்துகிறேன். இத்திருக்கோயில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற இறையருளை வேண்டுகிறேன். ஆதிமயிலிட்டி ஆனைமுகப் பெருமானின் திருவருளால் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ எனது நல்லாசிகளை சமர்ப்பித்து அமைகிறேன்.

**ஆன்மிகச்சுடர். ரிஷி தொண்டுநாத சுவாமிகள்,**
ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
*(Ceylon Branch)*
40, Ramakrishna Road, Colombo 6.
Email - rkmcey@gmail.com

*Phone - 2588253*
*5013805*
*Fax - 2361438*

## ஆசிச்செய்தி

ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதாக அறிந்தேன். பலவிதமான சேதங்களுக்கு உட்பட்ட இந்த ஆலயத்தை புனர் நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்வது மிகவும் பாராட்டுக்குரியது. இத்திருப்பணியை எவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் செய்தார்கள் என்பதை நினைத்தால் அதிசயமாக இருக்கிறது. அவர்களுக்கு பெரும்பரப்புப் பிள்ளையாரது ஆசிகள் எப்போதும் உண்டாகட்டும்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஒரு சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது. சிறப்பு மலரில் ஆலய வரலாறுகள், சிறப்புகள் பற்றிய கட்டுரைகள் இடம்பெறுகின்றன. இவை அடியவர்களுக்கும் வருங்கால சந்ததியினருக்கும் உதவியாக இருக்கும். இத்தகைய மலர்கள் பேணிப் பாதுகாக்கப் படவேண்டியவை.

கும்பாபிஷேகம் எப்போதும் நடக்கும் நிகழ்வு அல்ல. ஆலயத்துடன் தொடர்புள்ள எல்லோரும் இதைக் கண்டு அருள் பெறவேண்டும். கும்பாபிஷேகத்திற்கு முன்பாக நடக்கும் எண்ணைக்காப்பு என்ற கிரியையில் அடியவர்கள் எல்லோரும் பங்குபற்ற முடியும். அடியவர்கள் பிள்ளையாரது திருவுருவத்தைத் தொட்டு வழிபட இது ஒரு அரிய வாய்ப்பு. மேலும் அபிஷேகத்தின் போது பலவிதமான கும்ப பூஜைகள், ஹோமங்கள் என்பன நிகழ்வதால் கோவிலில் தெய்வ சாந்நித்தியம் நிலைபெறுகிறது. இதனால் ஊர் முழுவதும் சிறப்படையும் என்பதில் சந்தேகமேயில்லை.

கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், சிறப்பு மலர் நன்றாக அமையவும் விநாயகப்பெருமான் அருள்புரிவாராக! ஆலய நிர்வாகிகளுக்கு அவரது அருள் என்றும் நிலவுவதாக!

**சுவாமி அக்ஷராத்மானந்தா,**
தலைவர்,
ராமகிருஷ்ண மிஷன்,
இலங்கைக் கிளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRI LANKA

# CHINMAYA MISSION OF SRI LANKA

(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, Chinmaya Lane, Colombo 03, 00300, Sri Lanka
Phone: +94-11-2591344 Email: info@chinmayalanka.org

## ஆசிச்செய்தி

வணக்கம், ஹரி ஓம்

யாழ்ப்பாணம் ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலயம் எதிர்வரும் 06-04-2022 அன்று மகா கும்பாபிஷேக விழாவைக் காணவுள்ளது. சுமார் மூன்று தசாப்தகால யுத்ததின் போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் இருந்ததன் காரணமாகச் செயற்படாமல் இருந்த இந்த ஆலயம் இறைவனின் திருவருளினாலும் பக்தர்களது விடாமுயற்சியினாலும் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது. கருங்கற்களினால் அமைக்கப்பட்ட கர்ப்பக்கிரகம் புனரமைக்கப்பட்ட இவ்வாலயத்தின் சிறப்பாகும்.

இந்து மக்களுக்கு ஆன்மிக, கலாசார மற்றும் சமுக வழிகாட்டலில் பெரும் பங்கு வகிப்பவை ஆலயங்கள். நீண்ட கால யுத்தத்தின் காரணமாக ஆலயங்கள் அழிவடைந்தோ செயற்படாமலோ இருந்ததன் காரணமாக வழிகாட்டல் இன்றி தவித்த நம் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழும் மக்களுக்கு இந்த ஆலயப் புனரமைப்பு ஒரு நற்செய்தி என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த மகா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடந்தேறவும், ஆலயப் புனரமைப்பின் நோக்கம் நிறைவேறவும், ஆதிமயிலிட்டி பெரும்பரப்புப் பிள்ளையாரின் ஆசிகள் பக்தர்களுக்குக் கிடைக்கவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

ஹரி ஓம், வணக்கம்

அன்புடன்
**சுவாமி குணாதீதானந்த சரஸ்வதி,**
இலங்கை சின்மயா மிஷன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன சுவாமிகளின் ஆசிச்செய்தி

**'ஜந்தூனாம் நரஜன்ம துலபமத'**

பகவான் ஆதிசங்கரர் (விவேக சூடாமணி) ஜீவராசிகளில் மனிதப்பிறவி கிடைப்பது மிகவும் அரிதாகும். எத்தனையோ கோடி பிறவிகளில் செய்த புண்ணிய பலனால் கிடைப்பதே இந்த மனிதப்பிறவி. இத்தகைய அரிதான பிறவியின் இலக்கு தன்னைத் தானறிதல் ஆகும். இந்நிலையை எட்டுவதற்கு மன ஒருமைப்பாடு அவசியமாகின்றது. பல்வேறு ஆசைகளால் அலைக்கழிக்கப்பட்டு அலைந்து திரியும் மனத்தை ஒரு நிலைப்படுத்துவதற்கு இறைவழிபாடு முக்கியமான வழியாக அமைகின்றது. மனம் ஒரு நிலைப்பட்டு இறைவழிபாடு செய்வதற்கு ஆலயம், அங்கு நடைபெறும் கிரியைகள், பூஜைகள், உற்சவங்கள் அவசியமாகின்றன.

இறைவனால் அருளிச் செய்யப்பட்ட வேதங்கள் மற்றும் ஆகமங்களில் கூறப்பட்ட நியமங்களின் படி ஆலயத்தை அமைக்கின்ற பணியில் கும்பாபிஷேகம் மிக முக்கியமான கிரியையாகும். பிரபஞ்ச சக்தியை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்யும் நிகழ்வே கும்பாபிஷேகமாகும்.

எமது ஈழத்தில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையால் பல்லாண்டு காலமாக சில ஆலயங்கள், அரசால் மக்களின் வழிபாட்டுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலயம் 1989 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 30 வருடங்கள் பாரமரித்து வழிபாடற்ற முடியாத நிலையில் பாதுகாப்பு, வலயத்துக்குள் உட்படுத்தப்பட்டிருந்தது.

2018 இல் விடுவிக்கப்பட்ட பின்னர் புனருத்தராணப் பணிகள் இடம்பெற்று இன்று 06.04.2022 புதன்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கின்றது. இரு நூறு வருடங்கள் பழமை வாய்ந்த இவ் ஆலயம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து 2 கி.மீ கிழக்கே அமைந்துள்ளது. அவ்வூர் மக்களின் பொருளாதாரத்துக்கு வழிவகுக்கும் விவசாய நிலங்களின் நடுவே அமைந்துள்ளமை அழகாகும்.

கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், இந்நிகழ்வை முன்னிட்டு வெளிவரும் மலர் சிறப்பாக அமையவும், இப்பணிகளில் ஈடுபடும் தொண்டர்கள், வழிபடும் அடியார்கள் யாவரும் இலக்கை நோக்கிய பயணத்தை சிறப்பாக மேற்கொள்ளவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும் பரப்பு பிள்ளையாரை பிராத்திக்கின்றோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

இறைபணியில்,
**தவத்திரு. வேலன் சுவாமிகள்,**
சிவகுரு ஆதீனம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# International Society for Krishna Consciousness

Founder Acharya : His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada
(Incorporated by Act of Parliament No. 69 of 1992)

## ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலயம் மஹா கும்பாபிஷேகம்

06.04.2022 புதன்கிழமை அன்று ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதையிட்டு அனைவரும் உவகையுடன் வாழ்த்துக்கள் கூறி பிரார்த்திக்கிறோம்.

இக்கட்டான சூழ்நிலைகளின் மத்தியில் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற, இறை அருள், ஆலய தலைவர் திரு. மகேசன் சுகுமாரன் அவர்களின் விடாமுயற்சி, பரிபாலன சபையின் ஒத்துழைப்பு, உள்நாட்டு, வெளிநாட்டு பக்தர்களின் பெரும் பங்களிப்பு என்பவற்றினாலேயே சாத்தியமாயிற்று. என்று கூறினால் மிகையாகாது.

இவ்வாறு இனிவரும் காலங்களிலும் ஆலயத்தை பராமரித்து சிறப்பாக ஆலய நிகழ்வுகளை நடாத்துவதற்கும், ஆலய மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதற்கும் பகவான் ஸ்ரீ ராதா கிருஷ்ணனை பிரார்த்திக்கின்றோம்.

ஹரே கிருஷ்ணா

என்றும் கிருஷ்ண சேவையில்,
**மஹா கர்த்த தாஸ்**
(ஆலய தலைவர்),
சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்,
இலங்கை கிளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்துமாமன்றம்

(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைப்பொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் பெருமை பெற்ற ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் பெருமகிழ்ச்சி அடைகிறது. சிதைந்த நிலையில் காணப்பட்ட சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த இவ்வாலயத்தைப் புனரமைப்பதற்கு ஆலயபரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி பாராட்டத்தக்கதாகும். இக்கோவிலைப் போன்று ஈழத்தின் பல பாகங்களிலும் பரவலாகக் காணப்படும் சிதைந்த இந்து ஆலயங்களைப் புனரமைப்பதற்கு இவ்வாறான திருப்பணிகன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறான ஆலயத் திருப்பணிகள் மென்மேலும் தொடர எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி
இறைபணியில்,

**மா. தவயோகராஜா**
தலைவர்

**வே. கந்தசாமி**
பொதுச் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலாலய நிகழ்வுகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதிமயிலிட்டி

அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் முன்னைனாள் ஆலய பூசகர்,

ஸ்வர்க்கிய ஸ்ரீ. சி. சோமசுந்தர சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No:
அலுவலகம் / [illegible] / Office — 021 221 9375
தொலைநகல் / [illegible] / Fax — 021 221 9374
இணையத்தளம் / [illegible] / Website — www.np.gov.lk
எமது இல / [illegible] / Our Ref. — HG/NP/CBO/LTR/2022/98
உமது இல / [illegible] / Your Ref.

ஜீவன் தியாகராஜா
ජීවන් තියාගරාජා
Jeevan Thiagarajah
ஆளுநர்-வட மாகாணம்
ආණ්ඩුකාර-උතුරු පළාත
Governor-Northern Province

செயலகம்
කාර්යාලය
Secretariat
[illegible]
Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka
திகதி / [illegible] / Date — 05/04/2022



# வடமாகாண ஆளுநர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஓங்காரப் பொருளாக, பிரணவ வடிவாக இருந்து ஞான அருளையும் நல்வாழ்வையும் அடியவர்களுக்கு அகத்தேயும், புறத்தேயும் அள்ளி வழங்கிக்கொண்டிருக்கும் ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையாருக்கு இன்று குடமுழுக்கு நன்நாளாகும். இத் திருநாளில் கருங்கற்களாலான கர்ப்பக்கிரகத்துடன் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் அழகுக்கலை ததும்ப பரிணமிக்கின்றது. சைவமும் முத்தமிழ்க் கலைகளும் செழித்தோங்கி விளங்கும் ஆதிமயிலிட்டிப்பதி சமய வாழ்விற்கும் ஒழுக்கத்திற்கும் பெயர்பெற்ற ஊராகும். அத்தகைய ஊரின் பெருமைக்கும் வரலாற்றுச்சிறப்புக்கும் அடிநாதமாக அமைந்திருப்பது இவ்வாலயம் எனக்கூறினால் மிகையாகாது.

இவற்றுக்கெல்லாம் காரணமாக அமைந்தது எதுவெனில் இவ்வாலயத்தை சேர்ந்த குருமார்களுடன் இணைந்த பரிபாலன சபையின் முயற்சிகளும் மற்றும் கிராம அடியவர்களின் மாபெரும் ஒத்துழைப்பும், என்பதை அறியும் போது மனமகிழ்வைத் தருகின்றது. அன்பு, பொறுமை, சாந்தி, சமாதானம், கருணை, போன்ற பண்புகள் மனித குலத்தை வளம் பெறச்செய்யும் உயர்சக்திகளாகும். ஆனால் இவற்றை விலை கொடுத்து வாங்க இயலாது. ஏனெனில் அவை மனிதனின் புறதேயல்லாது அவனது அகத்தேயுள்ளன. இவ் அகத்தேயுள்ள அச்சக்திகளை வெளிப்படுத்த வழிகாட்டுதலே சமயத்தின் நோக்கம் ஆகும். அவ்வகையில் தெய்வ உணர்வைப் பதிய வைத்து மக்களை மக்கட் பண்புகளுடன் வாழ வைப்பதற்கு வழிகாட்டியாக இருப்பவை ஆலயங்களாகும். அதனால் தான் நம் முன்னோர்னேர்கள் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனக்கூறினர்.

இன்று புதுப்பொலிவுடன் விளங்கும் இவ்வாலயம் குடமுழுக்குச் செய்யப் படுவதையிட்டு மனமார வணங்கி வாழ்த்தி சூழமைவின் விக்கினங்களை விலக்கி அனைத்து மக்களும் சந்தோசமிக்க பெருவாழ்வும் மன அமைதியையும் தர வேண்டும் என விநாயகனை வேண்டுகிறேன்.

**இயம்பு மொழிகள் புகழ்மறை யாகும் எடுத்த வினை**
**பயன்படும் தேவர் இருபோதும் வந்து பதந்தருவார்**
**அயன்பதி முன்னோன் கணபதி சூரியன் ஆனைமுகன்**
**வியன்புகழ் பாடிப் பணிவார் தமக்குறும் மேன்மைகளே!** - பாரதி

இம்மலரினை வெளியிடும் பரிபாலன சபையின் திருப்பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**ஜீவன் தியாகராஜா,**
கௌரவ ஆளுனர்,
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்**
**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - යාපනය**
**DISTRICT SECRETARIAT – JAFFNA**

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண ஆதி மயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவில் மலரும் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருமூலரால் **'சிவபூமி'** என அழைக்கப்பெற்ற இலங்கைத்திரு நாட்டில் சைவமும் தமிழும் சிறப்புற விளங்கும் யாழ்ப்பாண நன்நகரின் வடபால் எழுந்தருளியிருக்கும் ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலயம் கருங்கல்லினாலான கர்ப்ப கிரகத்துடன் அமைக்கப் பெற்று அழகிய தோற்றத்துடன் மிளிர்வது அடியவர்களுக்கு ஆனந்தத்தினைத் தரும். இப்பணியை திறம்பட நிறைவு செய்திருக்கும் பரிபாலன சபையினரது முயற்சியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

**'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'** என்னும் ஔவையாரின் மூதுரைக்கு அமைய ஆலயம் அமைத்து மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது சமூகத்தில் ஆன்மிக பலத்தை அள்ளி வழங்கும் என்பதில் ஐயமில்லை.

விநாயகப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற அருளாசிகளை வழங்கியிருக்கும் அந்தண சிவாசாரியார்களை வணங்கி, ஆலயம் அழகுற அமைத்த சிற்பாச்சாரியர் பணிக்குழுவினரையும் பாராட்டி, பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் புதுப்பொலிவுடன் வெளிவர அயராது உழைத்த மலர்க்குழுவினரையும் பாராட்டி, என் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**க. மகேசன்,**
மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேக பெருவிழாவிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆதிமயிலிட்டிப் பிரதேசம் கடந்த காலயுத்தத்தினாலே மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். 1990 ஆண்டு இப்பிரதேசமக்களும் தமது வீடுகள், உடமைகள் எல்லாவற்றையும்விட்டு இடம்பெயர்ந்தார்கள். நீண்ட காலமாக இப்பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. மக்கள் தொடர்ந்து நீண்டகாலமாக மாறி மாறி பலதடவைகள் இடம் பெயர்ந்து சொல்லில் விபரிக்கமுடியாத இடம்பெயர்வுகளை சந்திக்கவேண்டி இருந்தது. இதனால் பலர் வெளிநாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்று விட்டார்கள். பலர் வெளி மாவட்டங்களுக்கு சென்றார்கள். குறைவானவர்கள் யாழ்மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வந்தார்கள்.

இப்பிரதேசம் 2018ஆம் ஆண்டு இராணுவத்தினரால் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது. இங்கு உள்ள அனைத்து வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தன. இங்குள்ள கோயில்களைக் கூட விட்டுவைக்கவில்லை. அவையும் முற்றாக அழிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தன. 2018 ஆண்டு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட நிலையில் இடம் பெயர்ந்தவர்களில் சிறிய தொகையினரே மீண்டும் மீளக்குடியமரத் தொடங்கினர். இந்த நிலையிலேயே மீளக்குடியமர்ந்த மக்கள் அழிக்கப்பட்ட ஆலயங்களை புனரமைக்கத் தொடங்கினார்கள். எவ்வித உதவியும் இன்றி தாங்களாகவே புலம்பெயர்ந்து சென்ற மக்களின் துணையுடன் ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயத்தையும் புனரமைப்புச் செய்து இன்று கும்பாபிஷேகத்தை நடாத்துகின்றனர்.

ஆலயங்களை புனரமைப்புச் செய்வதென்பது மிகக்கடினமான காரியமாகும். புனரமைப்புக்கு பெருந்தொகைப்பணம் தேவையாகும். இவற்றையெல்லாம் அப்பிரதேச மக்களே தங்கள் சொந்த முயற்சியால் மீளப்புனரமைப்புச் செய்துள்ளார்கள். தங்களுடைய வீட்டைப் புனரமைப்பு செய்வதற்கு முதலேயே இவ்வாலயத்தைப் புனரமைப்புச் செய்வதை எவரும் பாராட்டமல் இருக்கமுடியாது. எனவே இவ்வாலய பரிபாலன சபையினரையும் இப்பகுதி மக்களையும் பாராட்டுவதில் மிக்க மகிழ்சியடைகின்றேன்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழிக்கு இணங்க இக்கோயிலை மீண்டும் புனரைமைப்புச்செய்து தங்களுக்கு எல்லாம் வல்ல பெரும்பரப்பு பிள்ளையாரின் திருவருள் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதற்காக இவ்வாலயத்தைப் புதுப்பொலிவுடன் உருவாக்கி இருக்கிறார்கள். எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பேரருள் ஆலய பரிபரலன சபையினருக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இறைவன் எங்கும் இருப்பவன் நாம் கஷ்டப்பட்ட மக்களுக்கு செய்யும் பணிகள் இறைவனுக்குச் செய்யும் பணிகளாகும். "மக்கள் சேவையே மகேசன் சேவையாகும்" நாம் தூய நோக்கோடு, நல்ல சிந்தனையுடன் செயற்படுகின்ற எந்த செயற்பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமாக நடைபெறுவதை காணமுடியும். மற்றவர்கள் நன்றாக வாழவேண்டுகின்ற நோக்கோடு அவர்களுக்கு நாம் செய்கின்ற உதவிகள் எமக்கு வேறுவிதமாக வந்து கிடைக்கின்றன.

நாம் தூய எண்ணத்துடன் செய்கின்ற நல்ல பணிகள் எமக்கே ஆச்சரியமாக இருக்கத்தக்க வகையிலே வெற்றிகரமாக நடைபெற்று முடிந்து விடுகின்றன. எமக்குத் தெரியாமல் இறைவனின் அருள் எங்களுக்கு கிடைத்த வண்ணம் இருக்கின்றன.

நாம் தீயவினைகள் செய்யின் எமக்கு தீயவினை தொடர்ந்து நடைபெறும். நாம் நினைப்பவை ஒரு போதும் நடை பெறமாட்டாது. மற்றவர்கள் நன்றாக வாழவேண்டும். அவர்களுக்கு நல்லது கிடைக்கவேண்டும். அவர்களுக்கு எம்மாலான உதவிகள் செய்யவேண்டும். மற்றவர்கள்படும் துன்பங்களைக் கண்டு மனமிரங்க வேண்டும். எக்கருமங்களையும் நேர்மையோடு செய்யவேண்டும். நங்கள் நல்லது செய்யின் எமக்கு நல்லவையே கிடைக்கும். நாம் தீயன செய்யின் தீயனவே எமக்கு கிடைக்கும்

எனவே எல்லாம் வல்ல இறைவனை வழிபடுவதன் மூலம் எமது மனம் தூய்மையடைகின்றது. நாம் மற்றவர்களுக்கு செய்யும் உதவிகள் எமக்கு வேறொருவர் மூலம் எம்மையறியாமல் கிடைக்கின்றது.

இன்றைய சூழலில் களவும், நேர்மையீனமும், கொலைகளும் கூடியநிலைக்கு காரணம் உண்மையாக இறைவழிபாட்டில் ஈடுபடாமையாகும். எனவே தான், ஆலயங்கள் அப்பிரதேச மக்களை நல்லவழியில் செல்வதற்கும் திருவருளைப் பெறுவதற்கும் காரணமாக உள்ளன.

எனவே நாம் ஆலயங்களை புனரமைப்போம், ஆலயவழிபாட்டில் ஈடுபடுவோம், மற்றவர்களுக்கு இரங்குவோம், உதவிசெய்வோம். தேவை உள்ளோர்க்கு கொடுத்து வாழ்வோம் இவைதான் நாம் இறைவனுக்கு செய்கின்ற பணியாகும்.

**திரு. நாகலிங்கம் வேதநாயகன்,**
முன்னாள் அரச அதிபர்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, වලිකාමම් උතුර, තෙල්ලිප්පලේය
DIVISIONAL SECRETARIAT, VALI NORTH, TELLIPPALAI

Divisional Secretary | Asst. Divisional Secretary | Accountant | Assistant Director of Planning



# வலிவடக்கு பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பழை ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். வழிவந்த ஆன்றோர்களையும் சான்றோர்களையும் கொண்டு விளங்கும் தெல்லிப்பழை பிரதேசத்தின் ஆதிமயிலிட்டி பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் பெரும்பரப்புப் பிள்ளையாருக்கு பிலவ வருஷம் பங்குனித்திங்கள் 23ம் நாள் புதன்கிழமை ரோகினி நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற விநாயகப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளமை சிறப்பிற்குரியது.

சுமார் இருநூறு வருடங்கள் பழமை வாய்ந்த இப்பெருமானை ஆதியில் அரசமரத்தடியில் வைத்து வழிபாடாற்றினர். ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டு பரிபாலனசபை உருவாக்கப்பட்டு இவ்வாலயம் பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றமை சிறப்பிற்குரியது. பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளினை தடத்த நிலையில் கொண்டு வந்து ஆலயம் அமைத்து எழுந்தருளச் செய்து வழிபாடு ஆற்றும் இடமே ஆலயமாகும். சிவாகமங்களும் அவற்றின் வழிவந்த பத்ததிகளும் பன்னிரண்டு வருடங்களிற்கு ஒருமுறை புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறவேண்டும் எனக்கூறுகின்றன. இந்துசமய வழிபாட்டு நெறியிலே முதல் வழிபாட்டிற்குரியவர், விநாயகர். நாம் அவரை முதலில் வழிபாடாற்றியே எந்தக் காரியத்தையும் செய்யத்தொடங்குகின்றோம். விநாயகரை தினமும் மனதார வழிபாடாற்றுபவர்க்கு

**'வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு**
**துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமற் சார்வார் தமக்கு'**

என ஔவையார் மூதுரையிலே விநாயகரை வழிபடுவதனால் ஏற்படும் சிறப்பை கூறுகின்றார்.

இந்த வகையில் மகாகும்பாபிஷேகம் காணும் இவ்வாலயம் இளம் தலைமுறையினர்க்கு அறநெறியினையும் சைவவிழுமியங்களினையும் ஒழுக்க நெறிகளினையும் புகட்டும் நிறுவனமாக திகழ வேண்டும். இவ்விடயத்தில் ஆலய பரிபாலனத்தாரின் பணிமிகவும் வேண்டப்படுகின்றது. அவ்வாறு பணிசெய்தாலே மனதில் மாற்றம் வரும். இளம் தலைமுறை வழிதவறாது நல்வழியைப் பின்பற்றுவர் எனக்கூறி இத் தெய்வீகப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் பெரும்பரப்புப் பிள்ளையாரின் திருவருள் நிறைவாக கிடைக்க வேண்டுவதோடு மகாகும்பாபிஷேக கிரியைகள் சிறப்பாக நிகழ்ந்தேற எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் கூறிநிற்கின்றேன்.

**திரு. ச. சிவஸ்ரீ,**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

சைவ ஆதாரப் புருசர்களால் தேவாரம், திருமந்திரம், திருப்புகழ்களால் வியந்து பாடப்பெற்ற இலங்கைத் திருநாட்டின் முக்கிய நகரங்கள் வரிசையில் கலை, கலாசாரம், வரலாறு, இலக்கியம், பண்பாடு இப்படி பல்வேறுபட்ட சிறப்பம்சங்களோடு முன்னிற்கின்ற யாழ்ப்பாண மாவட்டத்தில் செம்மண்ணின் செழுமையும் அழகும் வளமும் தன்னகத்தே கொண்ட மயிலிட்டி மண்ணிலே குடிகொண்டு எழுந்தருளியிருக்கும் ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகத்தை இட்டு நான் அக மகிழ்வதோடு, மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் பெரு உவகை அடைகின்றேன்.

சைவமும், தமிழும் தழைத்தோங்கும் யாழ் மண்ணில் இந்து மத பாரம்பரியத்தை வளர்தெடுப்பதில் அடி நாதமாக விளங்குவது ஆலய வழிபாடாகும். அந்த வகையில் பல ஆண்டுகளாக இவ் ஆலயம் சிதலமுற்றிருந்த போதும், தேவகணங்களிற்கு தலைவனாக விளங்கும் கணபதி பெருமான் திருமேனி திறந்த வெளியில் அருள்பாலித்து வந்துள்ளார். தற்போது பக்தர்களின் பெருமுயற்சியாலும் விநாயகப்பெருமாளின் அருளாலும் பேரனுக்கிரகத்தாலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புனருத்தாபனம் நிறைவடைந்து புதுப்பொலிவுடன் கற்றளியுடன் கூடிய அழகுடன் இவ்வாலயம் எழுந்துள்ளதை இட்டு பெருமிதம் கொள்கின்றேன்.

விக்கினங்களை தீர்க்கும் ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையாரின் அருளாசி இக்கிராமத்து மக்களிற்கு கிடைப்பதோடு, பக்தர்கள் மத்தியில் பக்தி உணர்வும், ஆன்மிக எண்ணமும் சிந்தனைகளும் நிறையப் பெற்று பல்லாண்டு காலம் சைவ சமயத்தின் புனிதத்தை பேண வேண்டும் என்பதுடன், இவ் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புற அமைவதோடு மலர் வெளியீடும் சிறப்புற அமைய "ஓம் கணேசாய நமஹ" எனும் மந்திரத்தை கூறிக்கொண்டு எல்லாம் வல்ல அருள்மிகு ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் பாதம் பணிவோமாக.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பாபிஷேக தரிசனம் கோடிபுண்ணியம்

உலகை உய்விக்கப் பிறந்தது நம் சைவசமயம்.
இலங்கைத் திருநாட்டின் சிரமென நிலைத்து நிற்கும்,
வடபகுதியில் அமைந்த யாழ்ப்பாணம்,
அச்சைவத்தைக் கண்ணெனப் போற்றி வருகிறது.
காணும் இடந்தோறும் ஆலயங்கள் அமைத்து,
நம் மூதாதையர்கள் இறைவழிபாடு நோக்கி நம்மை நெறிப்படுத்தினர்.
அத்தகைய பெரியோர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்கள் பல,
நடந்து முடிந்த கொடும்போரால் சிதைந்தும் அழிந்தும் போயின.
அங்ஙனம் அழிவுற்ற ஆலயங்களில் ஒன்றாய்,
**ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார்** ஆலயமும்,
அமைந்து போயிற்று.

ஆனாலும் பக்தர்கள் சோர்ந்தார்கள் இல்லை.
போர் முடிந்த இன்றைய சூழ்நிலையில் அனைவரும் ஒன்றிணைந்து,
மீண்டும் ஆலயத்தைப் புதுக்கி அமைத்துக் கும்பாபிஷேகம் காணும் செய்தி,
சைவர்கள் அனைவரையும் தலைநிமிரச் செய்யும் செய்தியாம்.
அம்முயற்சியில் ஈடுபட்ட அனைவரையும்
இறையடி பணிந்து வாழ்த்துகிறேன்.

உலகை உய்விக்க தத்துவங்கடந்த பரம்பொருளை,
சொரூபநிலையில் நின்று தடத்தநிலைக்கு இறங்கிவரச் செய்து,
மந்திர தந்திரங்களால் கும்பவிம்பங்களுக்குள் அதனை உட்படுத்துவதே
கும்பாபிஷேகமாம்.

கும்பாபிஷேக நிகழ்வில் எங்கும் சிவ வியாபகம் ஏற்படுகின்றது.
அதைநோக்கியே நம் ஆன்றோர் கும்பாபிஷேக தரிசனம் கோடிபுண்ணியம் என்றனர்.
விநாயகரின் அருட்கருணையை இவ்வவனிக்கு ஆக்க,

அந்தணசிவாசாரியர்கள் அருமறை ஓதி,
அற்புதக் கும்பாபிஷேகத்தினை நிகழ்த்த உள்ளனர்.
இவ்வருட்காட்சியைக் காண்பதும், போற்றுவதும், தரிசிப்பதும்,
பிறவிப்பெருங்கடல் நீந்தப் பெருந்துணை செய்யும்.
அன்பர்கள் பயன் எய்தவேண்டும் எனப்பிரார்த்திக்கிறேன்.
இவ்வரிய நிகழ்வு சிறப்புற வேண்டுமென,
என்னை வாழ்விக்கும், கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன்
பாடிப்பரவும் பரம்பொருளை வேண்டிப் பணிகிறேன்.
"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

**- கம்பவாரிதி இ.ஜெயராஜ்-**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஆதிமயிலிட்டி

**அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை**

**ATHIMYLIDDY ARULMIKU PERUMPARAPPU PILLAYAR ALLYA PARIPALANA SAPAI**

Athimyliddy,
Myliddy north,
Kankesanthurai.

ஆதிமயிலிட்டி,
மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை.



# ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

ஆன்மிக அன்பர்கள் அனைவருக்கும் அடியேனின் அன்பு வணக்கம். விநாயகர் அருளால் கவலைகள் தீர்ந்து நல்லதே நடக்கும். இந்தக் கும்பாபிஷேகமலர் வழி உங்களைச்சந்திப்பதில் பெருமகிழ்வு. நமது சமயம் இதர சமயங்களை விட மிகப் பழைமையானது. உலகில் தோன்றிய முதற்சமயமாகக் கூறலாம். முன்பு அரசர்கள் மிகப்பெரிய ஆலயங்களைக்கட்டிப் பராமரிக்க நிதி வசதிகளைச்செய்து கொடுத்தனர். தற்போது பக்தர்கள் அப்பணிகளைச் செய்து வருகின்றனர்.

**'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'** என்ற முதுமொழிக்கு ஏற்ப நமது ஊரில் எமது மூதாதையர்களால் விளக்கேற்றி வழிபாடாற்றி பராமரிக்கப்பட்டு வந்த இக்கோயிலை, இன்று மிகப் பெரிய அளவில் அழகுடன் மரபு மாறாமலும் ஆகமம் குறைவுபடாமலும் உருவாக்கியுள்ளமைக்கு தெய்வ சித்தமே காரணம்.

பிள்ளையார்தான் எங்கள் முதல்வன், அவர்தான் எங்களை வழிநடத்துகின்றார், என்ற ஆணித்தரமான பக்தி, அனுபவம், சிந்தனைதான் இந்தக் கோயில் மீண்டும் புதிய பரிணாமம் காண்பதற்கு ஊற்றாக இருந்திருக்கிறது என்றால் மிகையல்ல. இக்கோயிலை ஆரம்பத்தில் ஆதரித்து வந்த திரு. தம்பிப்பிள்ளை இராமநாதரின் தம்பியாகிய திரு. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியத்தின் மகனான இலங்கைநாயகத்தினதும் திரு. நன்னித்தம்பி பூதப்பிள்ளையினதும் வழித்தோன்றலாக பிள்ளையரை ஆதரிக்கவேண்டும் என்ற எம்பெருமானின் விருப்பத்திற்கு இணங்க, இவ்வாலய வளர்ச்சிக்கு அடியேனும் பங்குகொள்ள வாய்ப்புக்கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

ஆலயம் அழகுற அமைந்தால் மட்டும் போதாது, ஆலயத்தை நமது சகோதர சகோதரிகளும் குழந்தைகளும் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆலயத்திற்கு தினந்தோறும் வந்து வழிபாடு செய்யவேண்டும். விசேட காலங்களில் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ளவேண்டும். இதன் மூலம் நமது சமயப் பண்பாடுகளையும், சமய வாழ்க்கை முறைகளையும் நன்கு அறிந்து கொள்ளமுடியும். "இந்து சமயம் வாழ்க்கையின் வழிகாட்டி" என்று வாயளவில் சொன்னால் போதாது அதைக்கடைப் பிடிப்பதற்கு ஆலயம் களமாக அமையும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

நன்றி! நன்றி! நன்றி!

**'மேன்மை கொள் சைவ நீதி, விளங்குக உலகமெல்லாம்'**

அன்புடன்,

**திரு. மகேசன் சுகுமாரன்,**
ஒய்வு நிலை விமானப் பொறியியலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஆதிமயிலிட்டி

**அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை**

**ATHIMYLIDDY ARULMIKU PERUMPARAPPU PILLAYAR ALLYA PARIPALANA SAPAI**

Athimyliddy,
Myliddy north,
Kankesanthurai.

ஆதிமயிலிட்டி,
மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை.



# எங்கள் பெரும்பரப்பு விநாயகரை வாழ்த்துவோம்

நாம் யாரை விரும்பி வழிபட்டாலும் விநாயகப்பெருமானை முதலில் வழிபடுதல் வேண்டும். இவ்வாறு முதலில் வழிபடும் தெய்வமாகவும், தீராத வினை தீர்ப்பவராகவும், வெற்றியைத் தருபவராகவும், ஓங்கார வடிவினனாகவுமுள்ளவருக்கு கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் காண்பது, மனத்திற்கு மகிழ்ச்சியளிக்கிறது. கும்பிடுவதற்குப் பிள்ளையார் கோயில் இல்லையே என்னும் குறை நீக்கி ஆதிமயிலிட்டி கிராமத்திற்கே பெருமை சேர்க்கும் வகையில் எங்கள் பெரும்பரப்பு பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. சிற்பங்கள் நிறைந்து அதை வர்ணங்களால் அழகு செய்து கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் காட்சி எம்மையெல்லாம் உயர்ந்து நிற்க வைத்துள்ளது போன்ற உணர்வளிக்க வைக்கிறது.

எப்பாடுபட்டாவது பிள்ளையார் கோயிலைக் கட்டி முடிக்க வேண்டும் எனும் குறிக்கோளுடன் மனதாலும், உடலாலும் ஓய்வுறக்கமின்றி உழைத்த திரு. மகேசன் சுகுமாரன் அண்ணர் குடும்பத்திற்கு என்றும், பெரும்பரப்புப் பிள்ளையார் பக்கதுணையாக இருந்து காத்தருள வேண்டி நிற்கிறேன். நான் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தேன். அன்றிலிருந்து அம்மா அப்பா பெரும்பரப்புப் பிள்ளையாருக்கு திருவெம்பாவை கடைசிக்குப் பூசை கட்டுவது வழக்கம். நாம் சிறுவராகக் கூடி விளையாடிய கோயில் வீதியில் இப்போது நிற்கும் போது புது அழகுடன் மிடுக்காகப் பிள்ளையார் நிமிர்ந்து நிற்கிறார். இது மனதிற்குள் ஒரு மகிழ்ச்சியைத் தருகிறது.

"பிள்ளையார் சுழி போட்டு நீ நல்லதை தொடங்கிவிடு" என்பது ஒருபக்திப்பாடல் எதைத் தொடங்குவதற்கு முன்னரும் பிள்ளையாரைக் கும்பிட்டு ஆரம்பிப்பதை பார்க்கலாம். கல்வியில், ஆலயப்பூசைகளில், வீட்டில் இடம்பெறும் சடங்குகளில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், கம்பராமாயணம், அபிராமியந்தாதி எனப்பல நூல்களின் ஆரம்பங்களைப் பார்க்கும் போதும் விநாயகர் வணக்கம் அவற்றில் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. எந்தத் தடையுமின்றி எடுத்த காரியம் இனிதே நிறைவேற்றும் வல்லமை பொருந்தியவர் பிள்ளையார்.

சர்வவல்லமை பொருந்திய பெருமானை நாம் வாழ்த்தி வணங்கி நிற்போம். அவரது நாமங்களைப், புகழை எல்லோர் வாய்களிலும் உச்சரிப்போம், அவரை வாழ்த்தி வணங்கிப் பணி செய்வோம்.

**கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை**
**கணபதி என்றிடக் காலனும் கைதொழும்**
**கணபதி என்றிடக் கருமம் ஆதலால்**
**கணபதி என்றிடக் கவலை தீருமே.**

**திரு. செல்லத்துரை ஜெயக்குமார்,**
உபதலைவர்.
பரிபாலனசபை,
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஆதிமயிலிட்டி
**அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை**
**ATHIMYLIDDY ARULMIKU PERUMPARAPPU PILLAYAR ALLYA PARIPALANA SAPAI**

Athimyliddy,
Myliddy north,
Kankesanthurai.

ஆதிமயிலிட்டி,
மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை.



# செயலாளரின் நன்றிச் செய்தி

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகவும் எங்கள் குல தெய்வமாகவும் விளங்குகின்ற பெரும்பரப்பு பிள்ளையாரின் திருப்பாதங்களை பணிந்து வணங்குகிறேன். “கோயில் இல்லாத ஊரில் குடியிருக்காதே” என்பது முதுமொழி. ஆலயங்களோடு எமது வாழ்வியல் எவ்வாறு பின்னிப்பிணைந்துள்ளது என்பதை இது காட்டுகிறது. 200 வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட எமது ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் இடப்பெயர்வுகளுக்கு பிறகு மீள கடந்த 06.04.2022 இல் மகாகும்பாபிஷேகம் கண்டுள்ள மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு பகிர்வதில் ஆனந்தம் அடைகிறேன்.

எமது பிள்ளையாரை இவ்விடத்தில் எழுந்தருளச் செய்து காலங்காலமாக வழிபாடுகளை கிரமமாக நடத்தி வந்த எமது முன்னோர்களுக்கு எமது முதற்கண் நன்றிகள். நாட்டில் நடந்த கொடூர யுத்தத்தால் ஊரை விட்டு இடம்பெயர வேண்டிய சூழலில் தமது உயிரையும் துச்சமாக மதித்து எமது ஆலய விக்கிரகங்களையும் பூசைப் பொருட்களையும் பாதுகாப்பாக தம்முடன் எடுத்துச்சென்ற நல்லுள்ளங்களுக்கும், இடம்பெயர்ந்து வந்த எமது ஆலய சொத்துக்களை தாராள மனதுடன் ஏற்று இத்தனை ஆண்டுகளாக பாதுகாத்து, உரிய முறையில் பூசை அனுட்டானங்கள் செய்து வழிபட்ட சுன்னாகம் தெற்கு பூதராயர் ஆலயத்தினருக்கும் என்றென்றும் நன்றியுடையவர்களாவோம்.

ஆலய நிர்மாணத்திற்கான அத்திபாரக் கிரியைகள் தொடங்கி, கும்பாபிஷேக மற்றும் மண்டாலாபிஷேக கிரியைகள் வரை சிறப்பாக நடைபெற குருவருளோடு உடனிருந்து கிரியைகளை பக்தி பூர்வமாக செய்த அந்தண சிரேஷ்டர்களுக்கும், உதவி ஐயாமாருக்கும், கிரமமாக வருகைதந்து கிரியைகளில் கலந்து கொண்ட அன்பர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். மீள ஆலயம் அமைக்கவென திருவருள் கைகூடிய வேளை அதற்கான பணிகளை முன்னின்று செயற்படுத்திய தொண்டர்களுக்கும், அன்பர்களுக்கும், தேவையான நிதியுதவிகளையும் பொருளுதவிகளையும் வழங்கிய பக்தர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். ஆலயத்திற்கான கட்டிட நிர்மாண வேலைகளையும், கருங்கல் கருவறை மற்றும் விக்கிரக வேலைகளையும், வர்ணப் பூச்சு வேலைகளையும் கலைநயம் ததும்ப செய்துதந்த கலைஞர்களுக்கும் அன்பு நிறைந்த நன்றிகள். அதேபோல இசையோடு ஆலய சூழலை பக்திமயமாக்கிய நாதஸ்வர தவில் வித்துவான்களுக்கும், சாத்துப்படி வேலைகள் செய்தவர்களுக்கும், ஆலயத்திற்கான நீர் மற்றும் மின் விநியோக வேலைகளை செய்தவர்களுக்கும், வீதியுலா வருவதற்கான வாகனங்கள் செய்தவர்களுக்கும், ஒலி மற்றும் ஒளி வழங்கல் வேலைகளையும், கும்பாபிஷேக தின இணைய ஒளிபரப்பு வேலைகளையும் செய்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் கும்பாபிஷேக மலருக்கு ஆசிச்செய்திகளும், வாழ்த்துச் செய்திகளும், தரமான ஆக்கங்களையும் தந்த நல்லுள்ளங்களுக்கும் மற்றும் இத்த மலரை அழகுற அச்சிட்டு தந்த அச்சகத்தாருக்கும் மனமார்ந்த நன்றிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக முக்கியமாக, இந்த சுருக்கமான செய்தியில் யாருக்காவது நன்றி கூற மறந்திருப்பின் அடியேனை மன்னித்து, எமது விசேட நன்றிகளை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறோம். மேலும் எமது பிள்ளையார் மீள தனது இருப்பிடத்தை அடைந்து அருளாட்சி புரியும் இந்த புண்ணிய கைங்கரியம் கைகூட பல வழிகளிலும் கைகொடுத்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். ஞாலம் உள்ளவரை எமது ஆலயத்தில் பூசைகள் ஒழுங்காக பக்தி பூர்வமாக நடைபெற பிள்ளையாரை வேண்டி அவர் அருள் அனைவருக்கும் கிடைத்து அனைவரது வாழ்க்கையும் பரிபூரணமான மகிழ்ச்சி நிலவ பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

**திரு. சிவபாதசுந்தரம் சண்முகானந்தன்,**
செயலாளர்,
பரிபாலனசபை,
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஆதிமயிலிட்டி

**அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை**

**ATHIMYLIDDY ARULMIKU PERUMPARAPPU PILLAYAR ALLYA PARIPALANA SAPAI**

Athimyliddy,
Myliddy north,
Kankesanthurai.

ஆதிமயிலிட்டி,
மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை.



# திருப்பணியின் சிறப்பு

"சிவபுரத்தைச் சிறக்க செய்தார் இனிப் பிறவியை எய்தமாட்டார்" என்பது சான்றோரின் வாக்கு. ஆதிமயிலிட்டியில் பெரும்பரப்பில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் விநாயகர் பெருமானுக்கு திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாலயம் எனது தந்தையாரின் மூதாதையினரால் குலதெய்வமாக வணங்கி வழிபட்டு வந்த ஓர் ஆலயம்.

இவ்வாலயமானது 1968ம் ஆண்டு பூதப்பிள்ளை உடையார் பாட்டனாரால் புனர்நிர்மானம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாக பெரியோர்கள் கூறுகின்றார்கள். எனினும் எமக்குத் தெரிந்த வகையில் 1989 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலய திருத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தார்கள். மக்கள் தாம் இடம்பெயரும் போது ஐம்பொன் விநாயகப்பெருமானையும் சுமந்து கொண்டு சென்று சுன்னாகம் பெரிய மதவடியில் உள்ள பூதவராயர் கோவிலில் வைத்து வழிபட்டார்கள். எமது ஆலய சிவாசாரியாரினால் பூசைகள் நடைபெற்று வந்தன.

எனினும் மீள்குடியேற்றத்தின் பின்பு ஆலய சூழலில் மக்கள் மீள்குடியேறிய பின் ஆலயத்தை புனரமைக்க வேண்டுமென்று, அடியார்களின் உதவியுடன் கட்டுமானப் பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு ஆலயத்தின் பரிபாலனசபையின் பொருளாளர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சுபம்

**இராமநாதன் பிரபாகரன்,**
பொருளாளர்,
பரிபாலனசபை,
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ நாராயணன்

சிற்பக் கலையகம்

உரிமையாளர்: திரு.சி.சசிகரன்

தொலைபேசி: 077 132 1788, 077 369 8841

அராலி தெற்கு.
அராலி.




## வாழ்த்துரை

**அருள்மிகு ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்**

மேற்படி ஆலயத்தினுடைய அத்திவாரத்திலிருந்து என்னுடைய குழுவினருடைய பங்களிப்போடு கருங்கல்லு வேலை, சீமெந்து, சுதை வேலை என்பன பூரணமாக நிறைவு செய்யப்பட்டு 06.04.2022 புதன்கிழமை மகா கும்பாபிஷேகம் நிகழ இருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

மேலும் ஆலய பரிபாலன சபை தலைவர் திரு. மகேசன் சுகுமாரன் ஐயா தரும் ஆக்கம், ஊக்கம் மற்றும் அவ்வப்போது வழங்கும் ஆலோசனைகளும் மற்றும் பரிபாலனசபை அங்கத்தவர்களுடைய ஒத்துழைப்பும் இந்த திருப்பணியை செவ்வனே மிகக் குறுகிய காலத்தில் நிறைவு செய்ய உதவியது என்றால் மிகையல்ல. அனைவருடைய இறைபணி தொடர பிள்ளையாரை வணங்குகின்றேன். இத்துடன் முற்றுப்பெறாத திருப்பணிகளும், இராஜகோபுரம், சித்திரதேர், சப்பறம் மிக விரைவில் அமைவதற்கு விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்கவேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்
**சி. சசிகரன்,**
சிற்பாசாரியார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய வரலாறு

சிவபூமி, வீணாகானபுரம், ஈழம், இரத்தினதுவீபம், லங்காதுவீபம், தாமிரபரணி எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் எமது வளம்மிக்க இலங்கைத் திருநாட்டில் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் செம்மண் வளம் கொண்ட விவசாய நிலப்பரப்புடைய இடமே மயிலிட்டி என்னும் ஊராகும். இக்கிராமம் வடக்கே இந்தியப் பெருங்கடலையும் கிழக்கே பலாலி, தெற்கே கட்டுவன், மேற்கே மாவிட்டபுரம் ஆகிய கிராமங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மயிலிட்டி கிராமம் பண்டு தொட்டுக் கலை, கலாசாரம், கல்வி முதலிய சகல துறைகளிலும் புகழ் பூத்து விளங்குவது யாவருமறிந்ததே. தத்துவஞானிகளுக்கும் உறைவிடமாக இருந்ததும் மயிலிட்டித் திருப்பதியாகும்.

இக்கிராமத்தின் திலகமாகத் திகழ்வதே ஆதிமயிலிட்டி என்னும் குறிச்சியாகும். இந்த ஆதிமயிலிட்டி என்னும் இடத்தில் சங்கத்தமிழ் மூன்றையும் அள்ளித்தரும் துங்கக் கரிமுகத்து தூமணியாகிய விநாயகப்பெருமான் விரும்பி உறையும் இடமே அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் கோயில் ஆகும்.

ஒரு கிராமம் சிறப்புப் பெறுவதற்கு அது கொண்டிருக்கும் ஆலயங்கள், கல்வி நிறுவனங்கள், கலை கலாசார நிறுவனங்கள், சமூக மேம்பாட்டு நிறுவனங்கள் என்பன முக்கிய காரணிகளாக அமைகின்றன. அந்தவகையில் **'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'** என்பது பெரியவர்களின் அறிவுரை. ஏனென்றால் கோயில்களே சமூகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டும் வாயில்களாகும். கலை, பண்பாடு, கலாசாரம் என்பன அனைத்தும் கோயில்களை மையமாக வைத்தே வளர்ந்து வந்தன. அதனால் தான் அப்பர் சுவாமிகள் **'திருக்கோயில்கள் இல்லாத ஊரெல்லாம் ஊரல்ல அடவி'** காடே எனக் குறிப்பிட்டார். அந்தவகையில் ஆதிமயிலிட்டி வாழ் சைவப்பெருமக்கள் இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் தமது ஊரில் அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் திருக்கோயிலையும் அருள்மிகு காசிப்பூதராயர் திருக்கோயிலையும் நிறுவி தாமும் வழிபாடு செய்து வந்தனர் என அறியமுடிகின்றது.


200 ஆண்டு பழமை வாய்ந்த அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் திருக்கோயிலின் வரலாற்றை நோக்குமிடத்து, எங்களுடைய பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய வரலாற்றை எழுத்து மூலமாக பதிவு செய்ய முற்படுகின்றோம். ஆனாலும் ஆலயத்தினுடைய தொடக்க காலம் எது என்பதையோ அதைத் தொடர்ந்து வந்தகால ஆலய வரலாற்றுப் பதிவுகளையோ எம்மால் திட்டவட்டமாக கூறமுடியாத துன்பநிலை உள்ளது. காரணம் ஆலயம் தொடர்ந்து கண்ட அசாதாரண சூழல், மற்றும் அவ்வப்போது நடைபெற்ற ஆலய நிகழ்வுகள் பற்றிய வரலாற்றுப் பதிவுகள் எம்மால் பேணப்படாமை போன்ற பல காரணங்களைக் குறிப்பிடலாம்.


ஆலய வரலாற்றைப் பதிவு செய்ய முற்படுகின்றபொழுது எமக்கு எழுத்து மூலமான ஆதாரங்கள் தெளிவாக இல்லாத நிலையில், மூத்த அடியார்களான திருமதி. புவனேஸ்வரி சண்முகலிங்கம், திருமதி. மகேஸ்வரி சிவசுப்பிரமணியம், திரு. சபாபதி சின்னத்துரை, திரு. சுப்பிரமணியம் பொன்மயிலைநாதன் ஆகியோரின் வாய்மொழி மூலமான தரவுகளையும், ஆலயத்தில் கிடைக்கப்பெற்ற 1926 ஆம் ஆண்டு செய்யப்பட்ட காண்டாமணி, 1926 ஆம் ஆண்டுக்கு முன் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த திரு. சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புதிய ஆலயத்தின் அடிக்கல் நாட்டுதல்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுப்பிள்ளை உபாத்தியாரால் இயற்றப்பட்ட விநாயகர் ஸ்துதி, 1932 ஆம் ஆண்டு தொல்காப்பியக்கடலான வருத்தலைவிளான் வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களினால் இயற்றப்பட்ட ஊஞ்சல் பாட்டு போன்றவற்றையும் வைத்துக் கொண்டு ஆலயத்தின் பழமையை நாம் பதிவு செய்ய முனைந்துள்ளோம்.

ஆதிமயிலிட்டி வாழ் மூதாதைகள் பெரும்பரப்பு (காணியின் பெயர்) என்ற இடத்தில் சிறு ஆலயத்தை அமைத்து விநாயகரை வழிபாடு செய்து வந்தனர். என்ன காரியம் தொடங்குவதாக இருந்தாலும் இந்த விநாயகரை முதற்கண் வழிபாடு செய்து தொடங்குவது இவ்வூர் மரபாகும். வெள்ளி, செவ்வாய்களிலும் வேறு விசேட தினங்களிலும் மானசிகமாக வழிபாடு இயற்றும் மரபு இக்கோயிலில் இடம்பெற்றுள்ளது.

எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி அவ்வூரில் வாழ்ந்த திரு. தம்பிப்பிள்ளை இராமநாதன் என்ற அன்பரின் பெருமுயற்சியினாலும் அவ்வூர் மக்களினாலும் பெரும்பரப்புப் பிள்ளையார் கோவில் பராமரிக்கப்பட்டு வந்தது என அறியமுடிகிறது. மானசிக வழிபாடு செய்யப்பட்டு வந்த பிள்ளையார் கோவிலை ஆகமவிதிப்படி பூசைகள் நடாத்தி அலங்கார உற்சவங்கள் நடக்கும்படியான திருக்கோயிலாக, அவ்வூரில் வாழ்ந்த திரு. தம்பிப்பிள்ளை இராமநாதரின் முயற்சியினாலும் அவ்வூர் மக்களின் ஒத்துழைப்பினாலும் மலர்ந்து கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

இத்திருக்கோயிலுக்கு காண்டாமணியுடன் கூடிய மணிக்கோபுரம் அமைக்க வேண்டும் என்ற விருப்பத்தின் பிரகாரம் திரு. தம்பிப்பிள்ளை இராமநாதரால் 1926 ஆம் ஆண்டு வெள்ளைப்பளிங்குக் கற்களினாலான மணிக் கோபுரமும், நல்லூரில் செய்யப்பட்ட காண்டாமணியும் நிர்மாணிக்கப்பட்டு, சுற்று பரிவார மூர்த்தியான வைரவர் சந்நிதானமும் அமைக்கப்பட்டு, 1926ஆம் ஆண்டு புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இதற்குச் சான்றாக இந்த காண்டாமணி எமது புதிய ஆலயத்தில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. விநாயகப்பெருமான் வலம் வருவதற்கான முதலாவது மூஷிக வாகனம் திரு. இராமநாதன் சின்னத்தம்பியால் அப்போது செய்து வைக்கப்பட்டது.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு பின்பு சுற்றுப்பரிவார நாகதம்பிரான் சந்நிதானம் திரு. திருமதி. ஆறுமுகசாமி சின்னத்தங்கம் தம்பதியினரால் கட்டப்பட்டு ஆலயம் புதுப்பிக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இதனைத்தொடர்ந்து இத்திருக்கோயிலில் வெள்ளிக்கிழமை கூட்டுப்பிரார்த்தனைகளும் சனிக்கிழமைகளில் சமயபாட வகுப்புக்களும் நடைபெற்றன. இச்சமய பாட வகுப்புக்களில் பங்குபற்றி தேர்ச்சி உடைய மாணவர்கள், கொழும்பு விவேகானந்த சபையினரால் நடாத்தப்பட்ட சமயப்பாடப் பரீட்சைகளில் பங்குபற்றி பரிசில்களும் பெற்றுள்ளனர். இதற்கு ஆதாரமாக திருமதி. சுலோஜனா ஜெயதாசன் அவர்களைக் குறிப்பிடலாம். இந்தக் கூட்டுப்பிரார்த்தனையை வழிநடத்தியவர் மதிப்புக்குரிய திரு. இ. சின்னத்தம்பி உபாத்தியார் ஆவார். இவரைத் தொடர்ந்து இக்கூட்டுப்பிரார்த்தனையை திரு. கதிரேசு விதானையார், திரு. காசித்தம்பி உபாத்தியாயர் நடாத்தி வந்தனர் என்று அறிய முடிகிறது. பின்னாளில் திரு. இ. திருநாவுக்கரசு இத்தொண்டை இடம்பெயரும்வரை தொடர்ந்தார்.

இத்திருக்கோயிலின் நித்திய பூசகராக பிரம்மஸ்ரீ. குமாரசுவாமி ஐயா அவர்கள் கடமையாற்றியுள்ளார் என அறியமுடிகின்றது. குமாரசுவாமி ஐயாவினால் மடப்பள்ளியில் செய்து கொடுக்கப்பட்ட மோதகம் அவ்வளவு சுவையானது என்பதை எமது மூத்த அடியார்கள் இன்றும் நினைவு கூருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் சித்திரைப் புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் மயிலிட்டிவாழ் பக்த அடியார்கள் எல்லோரும் இக்கோயிலுக்கு வந்து, பூசை வழிபாட்டில் கலந்து கொண்டு, தாங்கள் வீட்டிலிருந்து தேங்காய் கொண்டு வந்து பிள்ளையாருக்கு உடைப்பது வழமையாக இருந்துள்ளது. ஊர் பக்தர்களும் தாம் மண்ணை விட்டு இடம்பெயரும் மட்டும் இதனைத் தொடர்ந்தனர்.

ஆதிகாலத்திலிருந்தே சித்திரைப் பௌர்ணமி அன்று சித்திராக்கஞ்சி வார்க்கும் வழக்கம் இருந்துள்ளது என்பதையும் மூத்த அடியார்கள் ஆதாரபூர்வத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள். ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த திரு. அம்பலவாணர் எனும் பெரியவர் அக்கைங்காரியத்தைச் செய்து வந்துள்ளார். பின்னர் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த பொன். சுப்பிரமணியம் தங்கமுத்துப்பிள்ளையினர் செய்து வந்த இக்கைங்காரியத்தை, அவர்களின் புத்திரன் திரு. சு. பொன்மயிலைநாதன் அவர்கள் இவ்வருடத்திலிருந்து தொடரவுள்ளார்.

ஒவ்வொரு மாதமும் வரும் சதுர்த்தி தினத்தை அடியார்கள் சிறப்பாக செய்துவந்தனர். அன்றைய தினம் பிள்ளையார் உள்வீதி வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். பங்குனியில் நடைபெறும் 10 நாட்கள் அலங்கார உற்சவத் திருவிழாவும் ஒவ்வொரு அடியவர்களுடைய உபயமாக நடைபெற்றது. அவர்கள் தம்தம் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, ஊர் மக்கள் இவ்வாலயத்தோடு நெருக்கமாவதற்கு வழிசமைத்தனர். காலையிலிருந்து தோட்டவேலைகளில் ஈடுபட்டிருந்த அக்காலச் சமூகத்திற்கு இவ்வாறான கோயில் திருவிழாக்கள் மனதிற்கு இதமளித்தன. கடைசிநாள் பூங்காவனம் வானவேடிக்கைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழா ஊர்மக்களின் ஒத்துழைப்புடனும் பங்களிப்புடனும் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது என அறியமுடிகின்றது.

ஆவணி மாதத்தில் வரும் விநாயகர் சதுர்த்தி விரதம் மிக விசேடமாக இக்கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. எம்பெருமான் மேளதாளத்துடன் உள், வெளி வீதியுலாவரும் காட்சியை அடியவர்கள் கண்டு இன்புற்றுள்ளனர். மார்கழி மாதத்தில் வரும் விநாயக சஷ்டி விரதமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இக்காலத்தில் விநாயகபுராணம் படிப்பதை வழமையாகக் கொண்டிருந்ததாக அடியார்கள் கூறுகின்றார்கள். விநாயக சஷ்டி இறுதி நாளன்று விநாயகருக்கு சந்தனக்காப்பு மற்றும் 21 வகையான பலகாரங்கள் படைத்து, பூசை வழிபாடாற்றப்படும். அத்துடன் எம்பெருமான் அலங்காரரூபராக வீதியுலா வருவார். இவ்விரு விழாக்களையும் திரு. ந. பூதப்பிள்ளை அவர்கள் செய்து வந்தார். பின்னர் அவரின் மூத்த மகள் தொடர்ந்து இடம்பெயர்வு ஏற்படும்வரை அப்பணியை தொடர்ந்தார். இவ்விரு விரதங்களையும் இவ்வருடத்திலிருந்து திருமதி. ம. நகுலேஸ்வரியின் இரு புத்திரர்களும் தொடர்ந்து செய்ய உள்ளார்கள்.

சொக்கப்பனை எரிக்கும் கார்த்திகை விளக்கீடும் மிகச் சிறப்பாக அக்காலத்திலேயே நடைபெற்றுள்ளது என்பதுடன் அதனை திரு. நன்னித்தம்பி வைத்தியநாதர் உபயமாக செய்துள்ளார் என்பதும் அறியக்கிடக்கின்றது.

நவராத்திரி விழாவையும், திருவெம்பாவையையும் சிறப்பாகக் கொண்டாடியுள்ளார்கள். திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலையில் பஜனை படிக்கும் வழக்கம் இருந்துள்ளது. பின்நாட்களில் ஊர் இளைஞர்கள் பிள்ளையார் கோயிலில் பஜனையை ஆரம்பித்து இராஜேஸ்வரி அம்மன் கோவிலில் முடிப்பதாக அதில் பங்கு பற்றியவர்கள் நினைவு கூருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ 1945 க்கும் 1948 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற மகாகும்பாபிடேகத்தின் பின் ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த திரு. நன்னித்தம்பி பூதப்பிள்ளை (உடையார்) அவர்கள் ஆலய பரிபாலனத்தை மேற்கொள்ளத் தொடங்கினார். 1965 ஆம் ஆண்டளவில் ஆலயத்திற்குரிய மின்சார இணைப்பு திருமதி. பூ. பொன்னுப்பிள்ளையினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு, மின்கட்டணம் தொடர்ந்து இடம்பெயர்வு ஏற்படும் வரை அவர்களின் மூத்த புதல்வியால் செலுத்திவரப்பட்டது.

இக்காலத்தில் நடைபெற்ற வருடாந்த திருவிழாவில், ஒரு திருவிழா இந்திரவிழாவாக, நாலு கூட்டம் இந்திய நாதஸ்வர தவில் வித்துவான்கள், சின்னமேளக் கலைஞர்கள், விசேட கர்நாடக சங்கீத வித்துவான்கள், பிரபல நாட்டியக்கலைஞர்கள் என்பவர்களின் பங்களிப்போடு நடைபெற்றதாக அறியமுடிகின்றது.

மீண்டும் ஏறக்குறைய 20 வருடங்களின் பின் 1968 ஆம் ஆண்டு இக்கோயில் திரு. நன்னித்தம்பி பூதப்பிள்ளை அவர்களின் பெரும்பங்களிப்போடும் ஊர் மக்களின் ஒத்துழைப்போடும் புதிதாக வடிவமைக்கப்பட்டு திரு. சிதம்பரநாதன் சுவாமிநாதனின் (அதிபர், சைவ ஆசிரியர் கலாசாலை) தலைமையில் மகாகும்பாபிடேகம் நடைபெற்றதோடு அதனைத்தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்று அலங்கார உற்சவங்கள், நித்திய பூசைகள் என்பன சிறப்பாக நடைபெற்றன. இக்கும்பாபிடேக நிகழ்வுகளின்போது ஆலய அர்ச்சகராக பிரம்மஸ்ரீ. சி. சோமசுந்தரசர்மா அவர்கள் பூசை வழிபாடுகளை தொடர்ந்தார். இவர் மிக நீண்ட காலம் எங்கள் பெரும்பரப்புப் பிள்ளையாருக்கு அர்ப்பணிப்புடன் பூசை செய்தார். இக்கும்பாபிடேக நிகழ்வுகள் மாவை ஆதீன குருமாரின் வழிகாட்டலின் கீழ் கீரிமலை சிவஸ்ரீ. நகுலேஸ்வரக்குருக்கள் பிரதம குருவாக இருந்து நடாத்தி வைத்ததாக அறியக் கூடியதாகயுள்ளது.

1971ஆம் ஆண்டில் திரு. ந. பூதப்பிள்ளை அவர்களின் மறைவின் பின், ஆலயத்தினுடைய இதர வேலைகளான ஆலயத்தின் சுற்றுப்பரிவார சுற்று மதில் அவரின் துணைவியார் பொன்னுப்பிள்ளையினால் புதுப்பொலிவு செய்யப்பட்டது. அவரின் மூத்த மகள் தந்தையாரின் ஞாபகார்த்தமாக கோவிலுக்கு கொடுத்த பெரிய தூண்டாமணி விளக்கு, தற்போது ஆலயத்திற்கு கிடைத்த பொருட்களில் ஒன்று என்பதையும் இத்தருணத்தில் பதிவிடுவதில் மகிழ்ச்சி. இதே ஆண்டு விநாயகப் பெருமானுக்குரிய இரண்டாவது மூஷிக வாகனம் கலைநயத்தோடு திருமதி. நகுலேஸ்வரி மகேசனால் தந்தையாரின் ஞாபகார்த்தமாக செய்து வைக்கப்பட்டது.

விநாயகப் பெருமான் வலம் வருவதற்கான முதற் சகடையை 1972 இல் திருமதி. புவனேஸ்வரி நடராஜா அவர்கள் தந்தையின் ஞாபகார்த்த உபயமாக செய்து வைத்துள்ளார்.

திரு. ந. பூதப்பிள்ளையின் மறைவின் பின் அவரின் மூத்த மகள் திருமதி. ம. நகுலேஸ்வரி ஆலயத்திற்கு தேவையானவற்றை பார்த்து பார்த்து செய்து வந்தார். ஆலயத்திற்கு அருகிலிருந்த பக்தர்களும் மயிலிட்டி வாழ் மக்களும் ஆலயத்தை திரு.சின்னப்பு கதிரேசு, திரு.காசித்தம்பி உபாத்தியாயர் அவர்களின் உதவியோடு இக்கோயிலை திறம்பட நடாத்தி வந்தார்கள் என அறியக்கிடக்கின்றது.

1986 ஆம் ஆண்டளவில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஆலயத்தின் நித்திய நைமித்திய பூசைகள் தடைப்பட்டன. இதை நிவர்த்தி செய்வதற்கும் ஆலயத்தை புதுப்பொலிவு செய்வதற்கும் 21/11/1988 இல் ஒரு திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு தைமாதமளவில் ஆலயம் பாலஸ்தாபனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டது. ஆலயத்தின் சுற்றுப்பரிவார மூர்த்தியான லக்ஷ்மி சந்நிதி திரு. இளையதம்பி திருநாவுக்கரசுவின் உபயத்தில் கட்டி முடிக்கப்பட்டது. தொடர்ந்து ஆலயத்திருப்பணிகள் திரு. சரவணமுத்து அருணாச்சலத்தின் மேற்பார்வையில் சிறப்பாக நடைபெற்றவண்ணம் இருந்தது. மகாகும்பாபிஷேகத்துக்கான நாளும் குறிக்கப்பட்டது. எனினும் எதிர்பாராதவிதமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை நிமித்தம் 1990 ஆம் ஆண்டு வைகாசி மாதம் மயிலிட்டியில் இருந்து சகல மக்களும் இடம்பெயர வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. தாம் நித்தம் சென்று வழிபாடு செய்த விநாயகப் பெருமானை அங்கேயே விட்டுவிட்டு வந்தோம் என்ற மனக்கவலை அம்மக்களின் மனதை வாட்டிய வண்ணம் இருந்தது. எப்படியாவது எழுந்தருளிப் பிள்ளையாரையும் ஆலயத்தின் முக்கிய பொருட்களையும் எடுத்து வந்து பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் இருந்தது. அதனால் திருப்பணிச் சபையில் இருந்த திரு. செ. அன்னராசா அவர்களும் ஏனைய உறுப்பினர்களும் ஆலய பூசகருமாகிய சோமசுந்தர சர்மா அவர்களும் தருணம் பார்த்து ஆலயத்திற்குச் சென்று எழுந்தருளி விக்கிரகம் மற்றும் ஆலயத்தின் முக்கிய பொருட்களையும் எடுத்து வந்து சுன்னாகம் சிவபூதராயர் திருக்கோயிலில் வைத்து வழிபாடு செய்து வந்தனர்.

இவ்வாறாக 30 வருடங்கள் தமது ஊரையும் ஆலயத்தையும் விட்டு இவ்வூர் மக்கள் நாலாபக்கங்களிலும் சென்று வாழ்ந்து வந்தனர். எப்பொழுது தமது சொந்த இடத்திற்குச் சென்று விநாயகப் பெருமானுக்கு திருவிழாக் காண்போம் என்று ஏங்கிய மக்களுக்கு, விநாயகப் பெருமானின் திருவருளால் 2018 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் மீண்டும் தமது சொந்த மண்ணிற்கு போக முடிந்தது. அங்கு சென்ற மக்கள் தமது வீடுகளையும் தாம் குலதெய்வமாக வழிபாடு செய்த திருக்கோயிலையும் பார்த்து விட்டு மனம் நொந்தனர். எனினும் பிள்ளையாரின் அருளினால் பாலாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார் விக்கிரகம், மூஷிகம் பலிபீடம், நாகதம்பிரான் விக்கிரகம், வைரவரின் சூலம் என்பவற்றுடன் கட்டி முடிக்கப்பட்ட புதிய ஒரு சந்நிதியும் அடர் பற்றைக்காட்டுக்கு மத்தியில் மூலஸ்தானமும் காட்சியளித்ததை கண்டு மக்கள் சிறிது மனம் ஆறினர்.

மணியோசை எமது ஊரில் திரும்பக்கேட்க வேண்டும் என்று சித்தம் கொண்ட பிள்ளையார், ஆலயத்தின் பழைய காண்டாமணியை மணிக்கோபுர இடிபாடுகளுக்கிடையில் பாதுகாப்பாக வைத்திருந்தமையை எண்ணி பக்தர்கள் மனச் சந்தோசமடைந்தனர். இந்நிலையில் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட இருந்த காண்டாமணியை திரு. செல்லத்துரை ஜெயக்குமார் எடுத்துச் சென்று பாதுகாப்பாக அவரது வீட்டில் வைத்திருந்தார். கும்பாபிஷேகத்தின் போது அம்மணி மீண்டும் கணீர் கணீர் என கம்பீரமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

எம்மை வாழவைக்கும் விநாயகருக்கு மீண்டும் புதுக்கோயில் கட்டி மகாகும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன், பழைய பாலாலயத்தில் இருந்த சுவாமிகளுக்கு கோயிலுக்கு வெளியே பாலாலயம் அமைத்து, அவர்களை அங்கு ஆவாஹனம் செய்து, பிள்ளையாரின் அருளோடு ஆரம்பிக்க ஊர்மக்கள் திட்டம் போட்டனர். இதன்படி 02/09/2019 ஆவணி சதுர்த்தி நாளில் விநாயகப் பெருமானுக்குரிய பாலாலய அத்திவாரம் இடப்பட்டு 12/09/2019 இல் விநாயகப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு பாலாலய கும்பாபிஷேகம் நடைபெற்றது. பாலாலய கட்டுமான உபயத்தை சிவபாதசுந்தரம் பரமேஸ்வரி குடும்பத்தினர் பொறுப்பேற்றனர். எமது பூசகராகிய சோமசுந்தர சர்மா அவர்களின் இளைய புதல்வனாகிய தீபதர்சனக் குருக்கள் ஆலய நித்திய நைமித்திய பூசைகளைப் பொறுப்பேற்று நடாத்தத் தொடங்கினார். இவ்வாறாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது 07/12/2019 இல் கோயில் திருப்பணி வேலைகளை ஆரம்பிப்பதற்காக திரு. மகேசன் சுகுமாரன் தலைமையில் ஒருநிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

பல சிற்பக்கலை வல்லுநர்களிடம் இருந்து ஆலய கட்டுமானப்பணிக்கான செலவு விபரங்கள் பெறப்பட்டு, அவற்றிலிருந்து யாழ்ப்பாணம், அராலி ஸ்ரீநாராயணன் சிற்பக்கலையகச் சிற்பி, விஷ்வகர்மா சிவபாதசுந்தரம் சசிகரன் அவர்கள் எமது ஆலயத்தை அமைக்கும் திருப்பணிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

எம்பெருமானுக்குரிய பாரிய கற்கோயில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா அரசியல் கலப்பற்றதாக இடம்பெற்றது. ஆன்மிக ஈடுபாட்டுடன் கூடிய தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களினால் 02/07/2020 ஆனிச்சதுர்த்தியில் முலஸ்தானத்திற்கு அத்திவாரம் இடப்பட்டு, ஆலயத் திருப்பணிகள் ஊர்மக்களின் ஒத்துழைப்போடும், வெளிநாட்டில் வாழும் பக்தர்களின் உதவியோடும் மிகவிரைவாக முன்னெடுக்கப்பட்டது.

எம்பெருமானுக்குரிய கலையம்சம் பொருந்திய வானுயர்ந்த ஸ்தூபியுடன் கூடிய உத்தரமட்ட வேலைக்கமைவாக கருங்கல்கட்டுமான மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், சபை, தரிசன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், மூஷிகம், பலிபீடம் ஆகியவற்றை நிர்மாணிக்கும் பொறுப்பை ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த O/A இலங்கைநாயகம் (CCS) குடும்பத்தினர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

ஆலயத்தின் சுற்றுப் பரவார மூர்த்திகளான லஷ்மி, சந்தானகோபாலர், நாகதம்பிரான், முருகப்பெருமானுக்குரிய சந்நிதிகளுக்கான அத்திவாரம் 22/08/2020 ஆவணிச்சதுர்த்தியில் இடப்பட்டது. சுற்றுப்பரிவார லஷ்மிக்குரிய உபயத்தை மயிலிட்டி வடக்கு சிவபாதசுந்தரம்-பரமேஸ்வரி குடும்பத்தினர் ஏற்றுக்கொண்டனர். சுற்றுப்பரிவார மூர்த்தியான சந்தானகோபாலருக்குரிய உபயத்தை ஆதிமயிலிட்டி வேலுப்பிள்ளை செல்லத்துரை குடும்பத்தினர் பொறுப்பேற்றனர். நாகதம்பிரானுடைய சுற்றாலய உபயத்தை சுவிற்சலாந்தில் வசிக்கும் திரு. கமலாகரன் செந்துஜன் ஏற்றுக்கொண்டார். சுற்றாலயமாக இருக்கும் வள்ளி தெய்வயானை சமேதராகிய முருகப்பெருமான் சந்நிதிதானத்துக்குரிய உபயத்தை மயிலிட்டி வடக்கு சரவணமுத்து அருணாச்சலம் குடும்பத்தினர் ஏற்றுக்கொண்டனர்.

எம்பெருமானுக்குரிய பஞ்சகலச வசந்தமண்டபத்திற்குரிய அத்திவாரம் 25/10/2020 விஜயதசமியன்று இடப்பட்டதோடு, அதன் உபயத்தை மயிலிட்டி வடக்கு பொன். சுப்பிரமணியம் தங்கமுத்துப்பிள்ளை குடும்பத்தினர் பொறுப்பெற்றுக் கொண்டனர். 18/11/2020 கார்த்திகை சதுர்த்தியன்று மணிக்கோபுர அத்திவாரம் இடப்பட்டு, அதன் உபயத்தை கொழும்பில் வசிக்கும் Dr. சுவாமிநாதன் மகேந்திரன் குடும்பத்தினர் பொறுப்பேற்றனர். ஆதிகாலத்தில் கட்டப்பட்ட வெள்ளைப்பளிங்குக்கற்களைப் பயன்படுத்தியே மீண்டும் மணிக்கோபுரம் கட்டப்பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

ஆலயத்திற்குரிய வைரவர் சந்நிதானம், ஆலயத்தினுடைய மடைப்பள்ளி, காரியாலயம், களஞ்சியறை, வாகனசாலை, யாகசாலை என்பவற்றிற்கான அத்திவாரம் தைமாதச் சதுர்த்தியில் 16/01/2021 இடப்பட்டது. வைரவர் சந்நிதானத்தை ஆதிமயிலிட்டி நிற்சிங்கம் சின்னத்தம்பி குடும்பத்தினரும், ஆலயத்தினையுடைய மடைப்பள்ளி, காரியாலயம், களஞ்சிய அறை ஆகியவற்றை ஆதிமயிலிட்டி செல்லையா-பொன்னுப்பிள்ளை குடும்பத்தினரும், வாகனசாலை உபயத்தை மயிலிட்டி வடக்கு திருமதி. மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் குடும்பத்தினரும் பொறுப்பேற்றுள்ளனர். யாகசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுமான உபயத்தை பொறுப்பேற்றுக் கொண்டவர்கள் ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த கந்தப்பிள்ளை திருநாவுக்கரசு குடும்பம், சரவனை கந்தசாமி குடும்பம், வல்லிபுரம் அருளானந்தகுமாரசாமி குடும்பம் ஆகும்.

சண்டேஸ்வரருக்குரிய அத்திவாரம் 28/01/2021 தைப்பூசத்தில் இடப்பட்டு அதற்குரிய கட்டுமான உபயத்தை ஆதிமயிலிட்டி சரவனை சங்கரப்பிள்ளை குடும்பத்தினர் ஏற்றுக் கொண்டனர்.

ஆலயத்தின் முன்றலில் உள்ள அரசமரத்துடன் கூடிய அலங்கார விநாயகப் பெருமானின் கட்டுமான உபயத்தை ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த திரு. சின்னையா சிவானந்தன் அவர்கள் ஏற்றதுடன் அதற்குரிய அத்திவாரமும் 28/01/2021 தைப்பூசத் தினத்தன்று இடப்பட்டது.

ஆலயத்தின் சுற்றுப்பிரகார மதில் மாசிமாதச் சதுர்த்தியில் 15/02/2021 இல் அத்திவாரம் இடப்பட்டு எம்மூர் மக்களின் பொது உபயமாக கட்டப்பட்டது.

ஆலயத்திற்குரிய நீர்த்தாங்கி, நீர்விநியோக உபயத்தை பிரான்சில் வசிக்கும் திரு.சங்கரப்பிள்ளை பரராஜசிங்கம் அவர்கள் பொறுப்பேற்றார்.

ஆலயத்தில் அமைக்கப்பட்ட சுற்றுக்கொட்டகைக்கும் நில அமைப்புக்குமான உபயத்தை ஆதிமயிலிட்டி O/A இலங்கைநாயகம் (CCS) குடும்பத்தினரும் அவ்வூரைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத விநாயகப் பெருமான் அன்பரும் ஏற்றுக்கொண்டனர்.

இவ்வாறாக ஆலய பரிபாலன நிர்வாகத்தினர் இக்கோயிலை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் விநாயகப்பெருமானின் பக்தகோடிகளின் ஆதரவுடனும், விடாமுயற்சியுடனும், தளராத நம்பிக்கையுடனும் மிகக் குறைந்த காலத்தில் அற்புதமாக, சிற்பசாஸ்திர விதிகளுக்கமைவாக அராலியூர், நாராயணன் சிற்பக்கலையக ஸ்தபதி, விஷ்வசர்மா சிவபாதசுந்தரம் சசிகரனைக் கொண்டு கட்டி முடித்தனர். கோயிலின் சிற்பம் மற்றும் வர்ண வேலைகளை சொல்லில் வடிக்க முடியாதளவிற்கு திறம்படச் செய்துள்ளார்கள்.

போரினால் பாதிக்கப்பட்டு மீண்டெழுந்திருக்கும் எமது ஆலயத்திற்கு ஐம்பொன்னாலான பஞ்சமுக விநாயகர், லஷ்மி, வள்ளி தெய்வயானை சமேத முருகப்பொருமான், சண்டேஸ்வரர் விக்கிரகங்களும், கொடிமரம், எலிவாகனம், யானை வாகனம், சகடை, ஊஞ்சல் என்பன எல்லாம் கும்பாபிஷேகத்துக்கு முன்னரே பக்தர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

ஆலய பரிபாலன சபையின் பரிபாலனத்திற்கு அமைவாக அர்ச்சகர்கள் பூசகர்களாக விளங்குகின்றனர். மாவை ஆதீனப் பரம்பரையினரே இதன் மேற்பார்வையை செய்து வருகின்றனர்.

சொல்ல முடியாத வலிகளை சுமந்து கொண்டு, எங்கள் பெரும்பரப்பானுக்கு அற்புதமான திருக்கோயில் அமையப்பெற்றும் தலைசிறந்த அந்தணர்களின் ஆலோசனைக்கமைய ஆலய பரிபாலன சபையினரால் கும்பாபிஷேக நாள் குறிக்கப்பட்டு இறைவனின் சித்தம் காரணமாக 13/06/2021 நாள் கும்பாபிடேகம் தடைப்பட்டது. ஆனாலும் ஆரம்பமான 45 நாட்கள் யந்திர பூசை வாழிபாடுகள் தொடர்ந்தன.

மார்கழி மாதத்தில் பாலாலயத்தில் இருந்த எம் விநாயகரின் கருங்கல் விக்கிரகம் களவாடப்பட்டமையை அறிந்து பக்தர்கள் கவலையடைந்தனர். மீளவும் 06/04/2022 கும்பாபிஷேகத்துக்கு நாள் குறிக்கப்பட்டு, மாவை ஆதீனத்தின் மேற்பார்வையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கோயில் பிரதமகுரு தீபதர்சனக் குருக்கள் தலைமையில் 01/04/2022 முதல் கிரியைகள் ஆரம்பமாகின. சுன்னாகம் தெற்கு பூதவராயர் ஆலயத்தில் பாதுகாப்பாக இருந்த எமது எழுந்தருளிப் பிள்ளையார் 2ஆம் நாள் கிரியைகளின் போது எடுத்து வரப்பட்டு எமது கோயிலில் இருந்து அருள் புரியத் தொடங்கினார்.

யாழ்ப்பாணத்தில் தலை சிறந்த சிவாசாரியார்களின் பங்களிப்புடனும் தவில் நாதஸ்வர வித்துவான்களின் கான இசையுடனும் கும்பாபிஷேக நிகழ்வுகள் இனிதாக நிறைவுற்றன. இக்கும்பாபிஷேக நிகழ்வன்று பிரதான ஸ்தூபிகளுக்கு குடமுழுக்கு நடைபெறுகின்ற போது ஆகாயத்தில் கருடன் வட்டமிட்ட நிகழ்வு மனதுக்கு மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் தந்தது; இறைவனின் ஆசீர்வாதமாக எண்ணத் தோன்றியது.

அன்று மாலை, சிறப்பாக பஞ்சமுக விநாயகருக்கு பஞ்சமுகார்ச்சனையும், எழுந்தருளி பிள்ளையாருக்கு திருவூஞ்சல் நிகழ்வும் நடைபெற்று, பிள்ளையார், லஷ்மி, வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான் உள், வெளி வீதி வலம் வந்து விழா இனிதாக நிறைவுற்றது.

தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகப் பூசையும், இறுதி நாள் பகல் 1008 சங்காபிஷேகமும், மாலை திருவிழாவும் நடைபெற விநாயகப்பெருமானின் திருவருட்பெறு கிட்டியுள்ளது.

சுபம்

மலர்க் குழு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் பற்றிய என் நினைவலைகள்

இவ்வருடம் நான் 96 வது வயதை எட்டிப்பிடிக்கும் வேளையிலும் மயிலிட்டி பிள்ளையார் கோவிலின் அந்த இதமான இனிய மணியோசை இன்றும் எனது காதினில் நன்கே ஒலிக்கின்றது. நான் அவுஸ்திரேலியாவிற்கு வந்து 25 வருடங்கள் உருண்டோடிவிட்டன. பற்பல விடயங்கள் மனதை விட்டு விலகிவிட்ட நிலையிலும் அந்த மணியோசையின் இனிய தொனி மட்டும் எனது மனதை விட்டு அகலவில்லை. நான் இலங்கை, இந்தியா உட்பட வேறு நாட்டுக் கோவில்களின் மணியோசையையும் கேட்டுள்ளேன். ஆனால் எமது பிள்ளையார் கோவில் மணியின் ஓசையைப் போன்று இனிய ஓசையை வேறு எந்தக் கோவிலிலும் கேட்டதாக ஞபாகம் இல்லை.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை நோக்கிச் செல்லும் வீதியின் வடக்கு பக்கம் பிள்ளையார் கோவிலும், தெற்குப்பக்கம் எமது வீட்டுடன் எமது தந்தையார் மயிலிட்டி சுவாமிநாதன் வீடும் அமைந்திருந்தது. நம் குடும்பத்தினர் யாவரும் கோவில் மணியின் அந்த இதமான இனிய நாதத்தை ஒரு நாளைக்கு இரு தடவை காலை, மாலை வேளைகளில் கேட்டு வளர்ந்தோம். பிள்ளையார் கோயில் மணியோசை தான் எனது தாயாருக்கு கடிகாரம்.

மயிலிட்டி பிள்ளையார் பெரும்பரப்பு பிள்ளையார் என அழைக்கப்படுவர். கோவிலுக்கு கிழக்கே அதன் வாசலுக்கு முன் கோவிலை அலங்கரிக்கும் வண்ணம் ஒரு கொன்றல் மரம் நின்றது. கொன்றல் மரத்தில் மஞ்சள் பூக்கள் பூத்துக் குலுங்கும் போது கோவிலுக்கு அது ஒரு தனி அழகையூட்டியது. கோவிலுக்குப் பின்னால் உள்ள மேற்கு வீதியை ஒரு விளையாட்டு மைதானமாக ஊரில் உள்ள சிறுவர்கள் பாவித்து விளையாடுவார்கள். மாலை வேளைகளில் சிறுவர்கள் அங்கு கூடி கிளித்தட்டு, பந்தாட்டம், பட்டம் ஏற்றல் போன்ற விளையாட்டுக்களை விளையாடி மகிழ்வார். இதனால் மாலையில் பிள்யைார் கோவிலடி ஒரு குதூகலமான இடமாக மாறிவிடும்.

நான் அறிய பிள்ளையார் கோவிலில் இருமுறை கும்பாபிஷேகம் நடைபெற்றதாக ஞாபகம். முதல்முறை நடைபெற்ற போது நான் ஒரு சிறுமியாக தந்தையாருடன் கோவில் திருவிழாவிற்கு சென்றது ஞாபகத்தில் உள்ளது. பின்னர் 1968 ஆம் ஆண்டளவில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் எனது தந்தையார் தர்பை போட்டதும் எனது நினைவில் இருக்கிறது. வருடம் தோறும் பிள்ளையாருக்கு 10 நாட்கள் திருவிழா நடைபெறும்.

திருவிழாக்காலங்களில் மயிலிட்டிக் கிராமமே களைகட்டி நிற்கும் பத்து நாட்களும் ஒலிபரப்பியில் பக்தி பாடல்கள், சினிமாப் பாடல்கள் கேட்கும். இரவு பூசைகள் முடிய பற்பல கலைநிகழ்சிகள், வில்லுப்பாட்டு, மேளநாதஸ்வர கச்சேரிகள், சின்னமேள நடனங்கள், வசந்தனடி போன்ற கோவில் வாசலுக்கு முன்னால் மேடை ஏறும். மத்தாப்பூ போன்ற வான வேடிக்கைகளும் நடைபெறும். பிள்ளையார் உள்வீதியில் அடியவர்களின் தோள்களிலும் வெளிவீதியில் சகடையிலும் அமர்ந்து மேள தாளங்களுடன் ஊர்வலம் வரும் காட்சி அற்புதமானது.

வெள்ளிக்கிழமைகளில் மாலைப் பூஜைகள் முடிந்த பின்னர் கூட்டுப் பிரார்த்தனையை எனது மாமனார் காசித்தம்பி அவர்கள் மிக அழகாகவும் உச்சரிப்புடனும் இதமாகவும் சிறுவர்கள் தேவாரங்களைப் பயில வேண்டும் என அக்கறையுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நடத்திவந்தார். கூட்டுப்பிரார்த்தனைகள் முடிய ஐயா மோதகம் பிரசாதமாக வழங்குவார். சிறுவர்களும் ஐயாவின் மிகருசியான மோதகத்தை உண்ண மிக ஆவலுடன் காத்திருப்பார்கள். வெள்ளிதோறும் தவறாது கோவிலுக்கு வருபவர்களில் கதிரேசு விதானையார், இளையதம்பி வாத்தியார், சீனிமாமி (மயிலிட்டி) சுவாமிநாதனின் சகோதரி, காசித்தம்பி மாமா மற்றும் அயலில் உள்ளவர்களும் அடங்குவர். சீனிமாமி கோவிலுக்கு வரும் வேளைகளில் ஆவலுடன் கோவில் மணியை அடிப்பதுண்டு.

மார்கழி மாதம் தோறும் பிள்ளையார் கோவிலில் திருவெம்பாவை பூசைகள் பத்து நாட்களுக்கு சிறப்பாக நடைபெறும். அந்த பத்து நாட்களும் விடியற்காலை ஐந்து மணிக்கு முன்பே கந்தசாமி என்பவர் வீடுகளின் வாசலிலும், கோவில் வாசலிலும் நின்று சங்கு ஊதி சேமக்கலம் அடித்து திருவெம்பாவைப் பதிகங்களை அழகாகப் பாடுவார். அந்தப் பக்திப் பரவசம் அளிக்கும் ஓசைகள் எம்மை துயில் எழுப்பும். அந்தப் பத்து நாட்கள் நடக்கும் பூசைகளில் ஒரு நாள் பூசையை வருடா வருடம் எம்முடைய குடும்பம் நன்கே செய்துவந்தது.

இலங்கை நாட்டில் நிகழ்ந்த போர் காரணமாக 30 வருடங்களுக்கும் மேலாக உருக்குலைந்து நின்ற பிள்ளையார் கோவிலை நான் 2019 ம் ஆண்டு நேரில் பார்த்த போது எனது மனம் மிகவும் சஞ்சலப்பட்டது. இப்பொழுது ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாக கொண்டவரினதும் அவரது உறவினர்களின் உதவியோடும் ஊர்மக்களின் பெரும் ஒத்துழைப்புடனும் பெரும் பரப்புப் பிள்ளையார் புதுப்பொலிவுடன் ஆதிமயிலிட்டியில் கும்பாபிஷேகத்தை எதிர்பார்த்து நிற்கின்றார் என்று அறிந்த நாள் முதல் எனது மனதில் மகிழ்ச்சி நிறைந்து இருக்கின்றது.

பெரும்பரப்புப் பிள்ளையார் துணையுடன் எமது ஆதிமயிலிட்டி கிராமம் மேலோங்கி வளர்ந்து, குடிசனம் பெருகி, பச்சைப் பசேலென தோட்டங்கள் வளர்ந்து, பள்ளிக்கூடங்கள், கோவில்கள், நல்ல வீதிகள், நன்கு இயங்கும் விமான நிலையம் என்பவையுடன் ஒரு செழிப்பான கிராமமாக விளங்கி நிலைநிற்க வேண்டும் என்று எமது பிள்ளையாரை மனமார வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி. புவனேஸ்வரி சண்முகலிங்கம்,**
சிட்னி, ஆஸ்திரேலியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்

எங்கள் குலதெய்வமாக நாம் வணங்குவது ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு விநாயகர் என அழைக்கப்படும் மயிலிட்டிப் பிள்ளையாரையே. பிள்ளையார் கோவிலைப் பற்றிய சில பழைய நினைவுகளைப் பகிர விரும்புகிறேன்.

எனது பிறந்த நட்சத்திரம் சித்திரை. நான் பிறந்தநாள் முதல் எங்கள் பிள்ளையார் கோவிலில் சித்திரா பூரணை அன்று எங்கள் பெற்றார், சித்திரைக் கஞ்சி காய்ச்சி அன்னதானம் வழங்கி வருவது வழக்கம். இதை நாம் தொடர்ந்து செய்து வந்தோம். எனது தாயார் காலமாகும் வரை அவர் முன்னின்று இந்த அன்னதானம் தொடர்ந்து செய்து வந்தார். யுத்த காலத்தின்பின் பிள்ளைகளாகிய நாம் திக்குத் திக்காக வெளியூர்கள், வெளிநாடுகள் என்று பிரிந்து போய்விட்டோம். எங்கள் வீடு, வளவு இன்னும் இலங்கை இராணுவத்தின் கையில். அவை திரும்பக் கிடைப்பது அசாத்தியம் போல் தோன்றுகிறது.

எங்கள் சிறுபராயத்தில் எங்கள் பிள்ளையாருக்கு விழாக்கள் நடைபெறும்போது நாம் குடும்பமாகப் பங்குபற்றுவோம். அதில் ஒரு திருவிழா பெரியவிழாவாக நடந்தது என் நினைவில் என்றும் நிலைத்திருக்கும். அந்த திருவிழாவை முன் நின்று நாடாத்தியவர் எங்கள் பெரிய தந்தையான பூதப்பிள்ளை உடையார். அக்காலத்தில் பிரபலமாக இருந்த நாதஸ்வர, மேளங்கள் நாலு கூட்டம், மற்றும் சின்ன மேளம் இருவர் பங்கு பற்றினார்கள். எனது நினைவில் நிற்கும் பெயர் அண்ணாசாமி என்ற ஒரு இந்திய நாதஸ்வர வித்துவான். அன்று பிரபலமாயிருந்த கன்னிகா பரமேஸ்வரி என்பவரின் பாட்டும், மல்லிகாதேவி என்பவருடைய நாட்டியமும் இடம்பெற்றன.

அன்று முதல் முறையாக நான் இரவு முழுதும் விழித்திருந்து திருவிழா பார்த்தேன். மறுநாள் விடிந்தபின் வீடு சென்று காலை உணவு அருந்தியபின், படுத்துவிட்டேன். மாலை நேரம் தான் விழித்தேன். நல்ல நித்திரையின் பின் எழுந்ததால், காலையில் நித்திரை விட்டு எழுவது போல உணர்ந்தேன். வெளியே வந்து பார்த்தபோது சூரியன் மேற்கில் தெரிந்தது எனக்கு ஆச்சாரியமாக இருந்தது. கூட இருந்தவர்களிடம் சூரியன் எப்படி மேற்கில் உதயமாகிறது என்று கேட்டதும் இன்றும் என் நினைவில் உள்ளது.

எங்கள் பிள்ளையார் கோவிலில் பலகாலமாகப் பூசை செய்து வந்தவர் குமாரசாமி ஐயா. அவர் மிகவும் நேர்மையாக தனது கடமைகளைச் செய்து வந்தவர். அவர் பிரசாதமாக செய்து கொண்டு வரும் மோதகம், வடை என்றும் மறக்க முடியாத சுவையானவை. இன்றும் நாம் அந்த மோதகத்தைப் பற்றியும் வடையைப் பற்றியும் நினைத்து எங்கள் பிள்ளைகளுடன் அடிக்கடி பேசிக் கொள்வோம். குமாரசாமி ஐயாவையும் அவருடைய மோதகம் வடையையும் என்றும் மறக்க முடியாது.

யுத்த கால அழிவுகள், கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக, எமது வீடுகள் கோவில்கள் எல்லாம் அழிந்து போயின. இன்று எங்கள் பிள்ளையார் கோவிலைப் புதுப் பொலிவுடன் கட்டி முடிக்கும் அரிய பணியை சுகுமாரனும் அவர் குடும்பத்தவர், உறவினர், ஊர் மக்கள் அனைவரும் முன்வந்து செய்து ஒப்பேற்றியது ஒரு சாதனை என்று சொல்லலாம். இப்பணியை இன்று உலகளாவிய கொள்ளை நோய் காலத்திலும் செய்து நிறைவேற்றியது எங்கள் பிள்ளையாரின் திருவருள் என்றே எண்ணுகிறேன். பிள்ளையாரின் கும்பாபிஷேகம், மற்றும் மண்டலாபிஷேகம் யாவும் சிறப்பாக நிறைவுற எமது பிரார்த்தனைகளுடன் வாழ்த்துகள்.

**மயிலிட்டி சுப்பிரமணியம் பொன்மயிலைநாதன்,**
சிட்னி, ஆஸ்திரேலியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகும்பாபிஷேக மகிமை

**'புல்லினாற் பத்துக் கோடி புவிமண்ணினால் நூறு கோடி**
**செல்லுமாங் காலந்தன்னில் செங்கல்லா லாயிரங் கோடி**
**அல்லியங் குழலாய் கேண்மோ ஆலய மடாலயங்கள்**
**கல்லினாற் சமைத்த குபர்கள் கைலை வீட்டகலார்தாமே'**

ஆலய மடாலயங்கள் அமைப்பவர்கள் அடையும் நற்கதி பற்றி அழகாகக் கூறுகிறது இந்தப்பாடல். சகல வளங்களும் வசதிகளும் இருந்தபோதிலும் ஆலயம் அமைக்கும் பெரும்பேறு கிடைக்காமற் போகலாம். இவற்றுக்கெல்லாம் திருவருட் கடாட்சமும் வேண்டும். ஆலயம் அமைக்கும் பணிகளை முன்னின்று செய்பவர்கள், அப்பணிகளின் பங்காளர்களாக, பார்வையாளர்களாக உள்ளவர்கள் அனைவரும் பெரும்பேறு பெற்றவர்கள். பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்குமுரியவர்கள்.

அறிவியல் வளர்ச்சியடைந்த உலகில் வாழும் இக்கால மக்கள், ஆலயங்களில் நிகழும் நித்திய நைமித்திய கிரியைகள், ஆராதனைகளின் அர்த்தமறிய ஆதங்கப்படுவது அதிசயமன்று. அறிவியல் உலகிற்கு இவை அத்தியாவசியமாகின்றன.

ஈரப்பதனுள்ள காற்று மண்டலத்தில் பிராணவாயுவின் அழுத்தம் அதிகரிக்கின்றது. இதனால் பிராணவாயுவின் மூலக்கூறுகள் அதிக அளவில் கிடைக்கின்றன. ஒத்த அதிர்வுள்ள ஒலியலைகள் வளிமண்டலத்தில் எதிர் மின்னூட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றன. இந்த மூலக் கூறுகள் உடல் உள வளர்ச்சிக்கும் சுகவாழ்வுக்கும் இன்றியமையாதவை. இவை மருத்துவ அறிவியல் முடிபு.

உடலையும் உள்ளத்தையும் சீராக்கி உயிர் வளர்க்கும் பணியை ஆலயங்கள் மூலமே நம் முன்னோர் உருவாக்கினார்கள்.தண்ணீர், இளநீர், பால், தயிர், தேன், நெய், விபூதி போன்ற திரவியங்களைக் கொண்டு அபிஷேகங்கள் செய்வதாலும், யாகங்களினாலும் கர்ப்பக்கிரகத்துள்ளும் ஆலயத்திலும் பிராணவாயுவின் மூலக்கூறுகளை அதிகரிக்கச் செய்து அதனைக் காற்று மண்டலத்திற் பரவச் செய்தார்கள். "ஓம்" என்ற பிரணவத்தையும் வேத மந்திரங்களையும் திருமுறைகளையும் அர்ச்சனையால் ஒலிக்கச் செய்து அதனாலெழும் ஒத்ததிர்வு ஒலியலைகளைக் காற்றில் பரவச் செய்தார்கள். இவற்றின் மூலம் நுண்ணிதாக்கப்பட்ட பிராணக்கூறுகளும் நாதக்கூறுகளும் ஆலயத்தில் குழுமியுள்ள பக்தர்களை அடைகின்றன. இதனால் அவர்களுடைய உள்ளத்திற்கும் உடலுக்கும் நன்மை விளையும் என்பது விஞ்ஞானம் கண்ட உண்மை.

ஆலயத்தின் கருவறை ஒத்ததிர்வுக் கலமாகவும், மூல விக்கிரகம் ஒலியலைகளின் எதிரொலிப் பிம்பமாகவும் மூல விக்கிரகத்தின் கீழேயுள்ள யந்திரத்தகடு ஆற்றலைச் சேமிக்கும் கலமாகவும் சந்நிதானத்திலுள்ள காற்று மண்டலம் ஆற்றலைக் கடத்தும் பாதையாகவும் விளங்குகின்றன. இவை நம் முன்னோர் கண்டறிந்த விஞ்ஞான மெய்ஞானம். எனவே, இந்து சமயத்தின் ஆலய வழிபாட்டு முறை விஞ்ஞானப் பாதையில் மெய்ஞானத்தைப் படைக்கும் சிறந்த சாதனம் என்பது வெளிப்படை. இதனை உணர்ந்து நித்திய நைமித்திய கருமங்களும் மகா கும்பாபிஷேகங்களும் யாகங்களும் மற்றும் திருவிழாக்களும் ஆலயங்களில் நடைபெற்று வருகின்றன.

சிவாகமங்களில் கூறப்படும் கிரியைகளில் மிக முக்கியமானதும் பெருஞ்சிறப்பு மிக்கதும் அருளுக்கு அடிப்படையானதும் மகா கும்பாபிஷேகக் கிரியைகளாகும். மக்கள் அவரவர் நலங்கருதித் தமது வாழ்க்கையில் செய்து கொள்வன சாந்திக் கிரியைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே பொதுவாக இப் பிரபஞ்சத்தின் எல்லா உயிர்களுக்கும் நலமுண்டாவதற் பொருட்டுச் செய்யப் பெறுவது "பெருஞ்சாந்தி" என்னும் மகா கும்பாபிஷேகம் ஆகும். ஆலயங்களில் நிகழும் நித்திய நைமித்திய கிரியை வழிபாடுகள் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் நிகழ்த்தப் பெறுவனவாய் அவ்வக் காலங்களில் மட்டும் தரிசிப்பதற்குக் கிடைப்பனவாய் அமையும். பெருஞ் சாந்தியாகிய மகா கும்பாபிஷேகமோ பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்த்தப் பெறுவதாய், தரிசனத்திற்குச் சிறப்பும் அருமையும் உடையதாய் அமைவதாகும்.

பெருஞ்சாந்தி என்னும் மகா கும்பாபிஷேகமானது குடத்து நீரில் அபிஷேகத் திரவியங்கள் இட்டு, சிவாசாரியார்களினால் வேத மந்திர பாராயணம் செய்வதன் மூலம் இறைவனை ஆவாகனம் செய்து அந்தத் திருக்குடத்து நீரினால் இறைவனை நீராட்டுவதாகும். இறைவன் தடத்த வடிவங்கொண்டு உயிர்களுக்கு அருள் செய்ய முற்படும்போது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், திங்கள், கதிரவன், உயிர் ஆகிய எட்டு இடங்களை நிலைக்களங்களாகக் கொண்டு எழுந்தருளியிருப்பான். இவற்றையே எமது அருள் நூல்கள் அட்ட மூர்த்தம் என்று இயம்பும். எங்கும் நிறைந்து வியாபித்திருப்பது இறைவன் இயல்பாயினும் மேற்கண்ட எட்டு இடங்களில் மட்டும் இறைவனது அருள் வெளிப்பாடு எளிதாக உண்டாகும். இந்தப் பேருண்மையை அடிப்படையாகக் கொண்டே திருக்கோயில்களில் மகாகும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தி விழா முதலான நைமித்திய நித்திய கிரியைகளும் வழிபாடுகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனைத் திருக்கோவிலும், திருவுருவமாகிய விக்கிரகத்திலும் வெளிப்பட்டு நின்று அருள் புரியுமாறு வேண்டிக்கொள்ளும் அடிப்படையில் மகாகும்பாபிஷேகக் கிரியைகள் அனைத்தும் அமைந்துள்ளன. மிருத்சங்கிரகணம் முதலாக கும்பாபிஷேகம் வரையான எல்லாக் கிரியைகளும் அட்ட மூர்த்த வடிவமாயுள்ள ஆண்டவனை விளக்கமடையும்வண்ணம் வேண்டி மந்திர பூர்வமாக ஏற்பட்ட விளக்கங்களைக் கும்பத்திலுள்ள புனித நீரில் சேர்ப்பித்து அந்த அருள் நீரைத் திருமுழுக்கு ஆட்டுவதனால் இறைவனின் பரிபூரணமான நல்லருள் திருவுருவத்திலும் திருக்கோவிலிலும் நிலைபெற்றிருந்து இன்பத்தை வழங்கும்.

இத்தகைய மிக உயர்ந்த உன்னத தத்துவ அடிப்படைகள் பலவற்றைக் கொண்டு ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம், அதனைத் தொடர்ந்து ஒரு மண்டல காலத்திற்கு நடைபெற்ற மண்டலாபிஷேகம், மண்டலப் பூர்த்தி நிறைவில் நிகழ்வுற்ற சங்காபிஷேகம் ஆகியவற்றைத் தொடர்ந்து மேல்வருங் காலங்களில் நடைபெறவுள்ள நித்திய நைமித்திய கிரியைகளின் பயனாய் எல்லாம்வல்ல ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் பெருமானின் பக்த அடியார்கள் அனைவரும் இறை அருளால் இடர்கள் எல்லாம் அகன்றும் இடம்பெயர்ந்தவர்கள் மீள்குடியமர்ந்தும் இஷ்ட சித்திகளைப் பெற்று இனிது வாழ்வர் என்பது திண்ணம்.

**'வேழ முகத்து விநாயனைத் தொழ**
**வாழ்வு மிகுந்து வரும்'**

**சபாபதி சின்னத்துரை,**
முன்னாள் தலைவர்,
ஆலயபரிபாலன சபை,
அருள்மிகு மயிலுவக்கட்டைப் பிள்ளையார்,
மயிலிட்டி வடக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது குலதெய்வம்

**'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'** என்ற பழமொழிக்கு ஏற்ப எனது தந்தையார் எங்கள் இல்லத்தை ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் கோயிலுக்கு அருகிலேயே கட்டினார்கள். ஆதலால் அதன் பெரும் பலனை அடைந்ததாக நான் சிறுவயதில் நினைத்ததுண்டு. சிறுவயதில் தாய், தந்தை, சகோதரர்களுடன் அடிக்கடி எங்கள் குலதெய்வப் பிள்ளையாரை சென்று வழிபடுவேன். பின் நாட்களில் ஒவ்வொருவரும் தத்தமது வேலை நிமிர்த்தம் வெளியூர் சென்றிருந்தாலும் வீட்டுக்கு வரும் போது தவறாது சென்று வழிபடுவது எமது வழமை.

கோயிலுக்கு மிக அருகிலே எமது வீடு அமைந்திருந்தமையால் கோயில் மணியோசை கேட்டபின் பூசைகள் நடைபெறும் சத்தத்தையும் சில வேளைகளில் கேட்க முடியும். அப்படியான சந்தர்ப்பங்களில் வீட்டில் இருந்தவாறே பிள்ளையாரை நினைத்துக் கும்பிடமுடியும். எனது சிறிய தாய்மார் அக்கால வழக்கத்தின் படி வயதிற்கு வந்த பின் கோயிலுக்கு செல்ல முடியாவிட்டாலும் கோயில் காண்டாமணியோசை கேட்டதும் எமது வளவின் கிழக்கு பக்க சுவர் அருகில் இருக்கும் மண் திட்டியில் ஏறி சுவரின் மேலாக பிள்ளையாரைப் பார்த்து கும்பிடுவதையும், திருவிழாக் காலங்களில் சுவாமி வீதியுலா வருவதை கண்டுகளிப்பதையும் இப்போது நினைக்கும் போது எனக்கு புல்லரிக்கின்றது. அவர்களைப் பார்த்து நானும் மணியோசை கேட்டவுடன் வீட்டில் நின்றால், அதில் ஏறி பிள்ளையாரை மனதார கும்பிடுவேன்.

எனது பாடசாலைக் காலங்களில் பரீட்சைக்கு செல்லும் முன் கட்டாயம் எனது குலதெய்வத்தையும் காவல் தெய்வமான பூதவராயரையும் வணங்கி ஆசீர்வாதம் பெற்று விட்டுத் தான் செல்வேன். அவ்வாறு செல்ல முடியாவிட்டால் என் மனம் பதற்றமாக இருக்கும். மாதந்தோறும் வரும் சதுர்த்தியை தவறாது நான் சென்று வழிபடுவேன். அவ்வேளை எனது அண்ணனின் இரு மகன்களும் தவறாது பூசையில் கலந்து கொள்ள வருவார்கள். அவர்களை அங்கு சந்தித்துக் கதைப்பது இப்போதும் எனது ஞாபகத்தில் இருக்கிறது. நான் திருமணத்தின் பின் இங்கிலாந்து சென்றாலும் அங்கிருந்தவாறே என் குலப்பிள்ளையாரை மனதார வணங்குவேன்.

எனது ஞாபகத்துக்கு உட்பட்ட வகையில் *1968* ஆம் ஆண்டளவில் மிகச்சிறப்பாக பூதப்பிள்ளை உடையாரப்பு, சுவாமிநாதன் பெரியப்பா ஆகியோரினால் பிள்ளையாருக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டது. ஏறக்குறைய *20* ஆண்டுகளின் பின் *1988* ஆம் ஆண்டளவில் பாலஸ்தாபனம் செய்து மகாலஷ்மி, முருகன் சந்நிதானங்கள் அமைக்க அப்போதிருந்த பரிபாலனசபை முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோது, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண யுத்தம் காரணமாக எல்லா முயற்சிகளும் கைவிடப்பட்டு ஊர்மக்களும் இடம்பெயர்ந்தனர். இதனால் பிள்ளையாரின் நித்திய பூசைகளும் நடைபெற முடியாத சூழல் ஏற்பட்டது. அதனை நினைத்து நான் வேதனைப்பட்டிருந்த வேளை 30 வருடங்களின் பின் நாட்டில் யுத்தம் முடிவுற்று ஊர்மக்கள் ஆதிமயிலிட்டிக்கு சென்று தமது அன்றாட கடமைகளை தொடங்கும் போது தமது குலத்தெய்வமான பிள்ளையாருக்கு கோயில் கட்ட வேண்டும் என்று எண்ணி பல இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியிலும் எம்பெருமானின் கோயிலை சிறப்பாக கட்டிமுடித்துள்ளார்கள். எம்பெருமானின் கும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற எல்லாம்வல்ல ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையாரை வேண்டுகின்றேன். எனது குலதெய்வமான இப்பிள்ளையார் கோயில் நன்றாக செயற்பட்டு பிற்கால சந்ததியினருக்கு பலன்தரும் பாலமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

Dr. **விமலாதேவி ஹரிஹரன் (லண்டன்),**
(O/A இலங்கைநாயகம் மகள்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பரப்பு விநாயகரும் நானும்

**பெரும்பரப்பு விநாயகனே உன் பெருமைகளை நானுரைக்க**
**வரந்தருவாய் நின்தாள் சரண்.**

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும் என்பது ஆன்றோர் வாக்கு. எனது குலதெய்வம் பெரும்பரப்புப் பிள்ளையாரே! தந்தை வழி குலதெய்வம் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் எனினும் எனது வாழ்வில் மயிலிட்டியில் வாழும் வரை முன்னுரிமை பெரும்பரப்பு விநாயகருக்குகே!

நான் பிறந்து நாற்பத்தோராம் நாள் முதன்முதலில் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டதும் மயிலை பெரும்பரப்பு விநாயகரிடமே! மூன்றாவது வயதில், ஆனாப்பா என்று எம்மால் செல்லமாக அழைக்கப்பட்ட இளையாம்பி வாத்தியார் ஆகிய திரு.இ.சின்னத்தம்பி (ஆசிரியர், அதிபர், பலாலி சித்திவிநாயக வித்யாசாலை) உபாத்தியாரால், விஜயதசமி தினத்தன்று பெரும்பரப்பு விநாயகரின் முன்னிலையில் தான் எனக்கு வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்) செய்து வைக்கப்பட்டது. அன்றிலிருந்து நான் பாடசாலை செல்ல ஆரம்பித்தது போல வெள்ளிக்கிழமைகளில் மாலை நேர பூசையுடன் கூடிய கூட்டுப்பிரார்த்தனையிலும் நான் ஒழுங்காக கலந்து கொண்டேன். எங்கள் வீட்டில் (நக்கட்டியோடை மயிலிட்டி வடக்கு) இருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்து வந்து விநாயகரைத் தரிசித்துப் பல இஷ்ட சித்திகளைப் பெற்றிருக்கின்றேன். தந்தை தாயாரிடம் கேட்பது போலப் பிள்ளையாரிடமும் நான் கேட்பது வழக்கம். கல்வி, பணம், பொருள், அந்தஸ்து, சுகநலம், சந்ததி, சின்னச் சின்ன ஆசைகள் எல்லாம் இதில் அடங்கும். ஒன்றை விட நான் கேட்டது எல்லாம் தந்தார். எனக்கு உகந்தது அல்லாததை தரமாட்டார் என்பது எனது அறிவுக் கெட்டிய அபிப்பிராயம்.

திரு. இ. சின்னத்தம்பி உபாத்தியார், திரு காசிதம்பி உபாத்தியார் ஆகியோரால் சனிக்கிழமைகளில் சமயப்பாட வகுப்புகள் நடாத்தப்பட்டன. அதில் ஆலய வழிபாட்டு முறைகளும் அடங்கும். விவேகானந்த சபையினரால் நடாத்தப்பட்ட சமயப்பாடப் பரீட்சைக்குத் தயார் செய்து படிப்பித்தார்கள். இதிலும் நானும் பங்குபற்றி பலன் பெற்றேன்.

அந்தக் காலத்தில் பெண்பிள்ளைகள் ருதுவாகிய பின் கல்யாணம் ஆகும் வரை கோவில்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதில்லை. எமது விவாகம் கீரிமலை சிவன் கோவிலில் நடந்தேறினாலும் விவாகமாகிய பின் முதலில் நாமிருவரும் சென்றதும் பெரும்பரப்புப் பிள்ளையாரிடமே! யாழ்ப்பாணம், கொழும்பு, கருகம்பனை என்று எங்கு வாழ்ந்தபோதும் பிறந்த வீட்டுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் எல்லாம் மயிலை பெரும்பரப்புப் பிள்ளையாரைத் தரிசிக்காமல் திரும்புவதில்லை. எமது மகள் ஆரணி பிறந்த போதும் எனது தாயாரின் விருப்பப்படி ஒரு மோதக பூசை செய்து கொண்டாடியது நினைவிலுள்ளது.

இந்தக் கோயில் நாங்கள் சிறு பிள்ளைகளாக வரும்போது குமாரசாமி குருக்கள் என்ற ஐயா தான் பூசை செய்தவர். அவர்தான் எங்கள் குடும்பத்துக்குப் புரோகித குருவும் கூட. அவர் பிள்ளையாருக்கு நிவேதிக்கும் மோதகம் அழகானதும் சுவையானதும் ஆகும்.

அவருக்குப் பிறகு அவரது மருமகன் (மகளின் கணவர்) சோமையா என்று அழைக்கப்படும் சோமசுந்தரக் குருக்கள் பூசை செய்து வந்தார். அவரும் இருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை, நாம் இடம்பெயர்ந்து வாழ்ந்த இடங்களிலும் அவர்தான் எமது புரோகித குருவாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. திரு. இ. சின்னத்தம்பி உபாத்தியாரின் மகன் மகேந்திரன் அக்கவுண்டன் சோதனை பாஸ் பண்ணிய போது அவர்களின் நேர்த்திக்காக பிள்ளையாருக்கு ஆயிரத்தெட்டு (1008) மோதகம் நிவேதித்து அபிசேகமும் செய்வித்தார்கள். ஐயாவும் அதைத் திருப்திகரமாகச் செய்து பெருமையடைந்தார். பூமாலை பூச்சரம் சாத்துப்படி சேவைகளுக்கு கந்தசாமி என்று ஒருவர் இருந்தார். அழகான சாத்துப்படிகள் செய்வார். அவரும் எனது நினைவில் நிற்கிறார்.

இக்கோயிலில் ஆதிமூலம் - கற்பக்கிரகம் விநாயகர் கிழக்குப் பார்த்தபடி கோயிலில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருந்தார். மூஷிகமும் பலிபீடமும் அதை ஒட்டிய பெரிய மண்டபம், தெற்கு பக்கமாக மடப்பள்ளி முதலியவை அன்றும் இருந்தன. தெற்கு நோக்கிய எழுந்தருளி வாசலிலும் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுச் சிறு படலையும் இருந்தது. சுற்றுமதில் முன்பக்கமும் கோபுரவாயில் கதவும் இருந்தது. தெற்கு வாசல் அருகில் இளநீர் குத்தும் "உல்" இருந்தது. உள்வீதியில் ஒரு தீர்த்தக் கிணறும் மூன்றுகால்களுடன் கூடிய ஆடுகாலும் கப்பியும் சங்கிலிகயிறும் வாளியும் இருந்தன. வழிபடுவோர் அங்கே கால் கழுவ முடியும். சுற்றுப்புற கோயில்களாக கிழக்கில் மேற்கு பார்த்தபடி வைரவரும் வடமேற்கு மூலையில் கிழக்குப் பார்த்தபடி நாகதம்பிரானும் அமர்ந்து அருள்பாலித்தனர். இந்த நாகதம்பிரான் ஆலயம் திரு. திருமதி ஆறுமுகசாமி சின்னத்தங்கம் (எனது பெரியதாயார்) தம்பதியினரின் உபயமாக கட்டப்பட்டது. கிணற்றுக்கும் வைரவர் வாசலுக்கும் இடையில் வடக்கில் ஒரு வசந்தமண்டபம் கட்ட ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனக்குத் தெரிந்த வரையில் அது அன்று பூரணமாக்கப்படவில்லை.

அலங்கார உற்சவங்கள், நவராத்திரி, திருவெம்பாவை முதலிய விழாக்கள் சிறப்பாக நடந்தேறின. அலங்கார உற்சவத்தில் ஒரு நாள் திருவெம்பாவை திருவிழாவில் ஒரு நாளும் எமது குடும்பத்தினரின் உபயமாக செய்து வந்தது ஞாபகம். வருடம் பிறக்கும் நேரத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடப்பதும் வழக்கம்.

1984 ம் ஆண்டில் ஒருமுறை எங்கள் மயிலிட்டி வீட்டுக்கு நாம் மூவரும் வந்து விட்டு கருகம்பனைக்குத் திரும்பிய போது திடீரென ஊரடங்குச்சட்டம் பஸ் ஓடாது என்றார்கள். நாம் உள்ளூர் பாதையால் மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி ஊடாக கருகம்பனை செல்லும் நோக்கில் பயணித்தோம். பெரும்பரப்பு விநாயகரின் கிழக்குவாசல் நேரில் தெருவில் நின்றபடி வணங்கினோம். எனது மகள் "பிள்ளையாரப்பா நடந்து போக இருண்டுவிடும். ஒரு கார் பிடித்து தா" என்று வாய்விட்டு பிரார்த்தித்து விட்டு "பிள்ளையார் கார் அனுப்பிறனாம். கேட்டு ஏறிப்போகட்டாம்". என்று சொல்ல மூவரும் நடந்து கிராமக்கோட்டடிச் சந்தியில் திரும்பி சொற்ப தூரம் சென்று பிள்ளையாரின் தெற்கு நோக்கிய எழுந்தருளி வாசல் நேருக்கு வரும்போது வெளிச்சத்துடன் ஒரு வாகனம் வந்து விதானையார் வளவுக்குச் சென்றது. பிள்ளையார் அனுப்பிய கார் அது தான் வாங்கோ கேட்டுப் பாப்பம் என்று மகள் முன் செல்ல நாமும் சென்றோம். எங்களைக் கண்டதும் இருண்டு போச்சு என்ன விடயம் என்றார். நாமும் எமது நிலையை எடுத்துக் கூறினோம். தம்பி இவையளைக் கொண்டே வீட்டில் விட்டுட்டு வா என்று மகன் குகநேசனை அனுப்பினார். எம்மைப் பொறுத்தவரையில் மறக்க முடியாதது மட்டுமல்ல, எமக்காக பெரும்பரப்புப் பிள்ளையார் செய்த அற்புதங்களில் ஒன்று. எனது தாயாரின் பாட்டனார் (பேத்தியின் தாய்மாமன்) எனது பூட்டனார் திரு சி. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் அவர் ஒரு புலவரும் கூட ஒரு முருக பக்தர் என்பதால் மாவைக் கந்தன் பேரில் பல கீர்த்தனங்கள் இயற்றி இசை அமைத்து வைத்திருந்தார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பதற்கு சில காலம் முன்னதாக 1928 ஆம் ஆண்டில் அவர் விருப்பப்படி அவரது மாணாக்கர்கள் அவற்றை மாவைக்கந்தன் பக்தி ரசக் கீர்த்தனைகள் என்ற பெயரில் நூலாக வெளியிட்டார்கள். அந்த நூலின் முதல் பொது விநாயகஸ்துதியும் அதையடுத்து "மயிலை விநாயகஸ்துதி" என்ற பெயரில் ஒரு வெண்பாவும் தொடர்ந்து கீர்த்தனையும் (பல்லவி, அனுபல்லவி, சரணங்கள்) அமைந்துள்ளது. வெண்பா நூலின் காப்புச் செய்யுள் போல அமைந்துள்ளது. ஆலடியினில் "ஐங்கரன்" என்றே ஆரம்பிக்கின்றார். மயிலிட்டி கட்டுவன் றோட்டில் கிராமக் கோட்டடி சந்தியில் ஒரு பெரிய ஆலமரம் நின்றது ஞாபகம். அதனால் தான் ஆலடியினில் ஐங்கரன் என்றார் போலும்.

1988 ஆம் ஆண்டளவில் ஆதிமயிலை பெரும்பரப்புப் பிள்ளையார் புனருத்தாரண சபை ஒன்று உருவாக்கப்பட்டது அதில் செயலாளர் ச. அருணாச்சலம், பொருளாளர் திரு. இ. திருநாவுக்கரசு, தலைவர் திரு. ந. நடராசா என்று இருந்தது நினைவு. நாட்டின் அரசியல் சூழ்நிலை காரணமாக அச்சபை தொடர்ந்து செயற்பட முடியாது போய்விட்டது.

இப்போது மீண்டும் ஆலயம் புத்துயிர் பெற்று எழுந்து கும்பாபிகேத்துக்குத் தயாராகிவிட்டது. தன்னை அண்டிய பகுதிகளைக் விடுவித்தது போல எமது விடுவிக்கப்படாத வாழ்விடங்களையும் விடுவித்து அருள்பாலிக்க வேண்டும் என்று பெரும்பரப்பு விநாயகரை ஏத்தி இறைஞ்சி வழிபட்டு வேண்டி நிற்கின்றேன். அவனருளாலே அவன் தாள் வணங்கி அவனிடமே அனைத்தையும் வேண்டி கும்பாபிஷேகமும் சிறப்புற நிகழ வேண்டுதல் செய்கின்றேன்.

**ஜெயதாசன் சுலோஜனா,**
புது வீடு,
மயிலிட்டி வடக்கு,
கருகம்பனை,
காங்கேசன்துறை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிவாரமூர்த்தி சண்டேஸ்வரப் பெருமான் பிரதிஸ்டை

ஆன்மாக்கள் உய்திபெறுதற் பொருட்டு பெருங்கருணா மூர்த்தியான பரம்பொருள் உருவத்திருமேனி தாங்கி ஆலயங்கள்தோறும் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றார். அவரது திருவருட்சக்தி அத்திருவுருவங்களின் தரிசனம் மூலம் ஆன்மாக்களுக்குப் பக்குவ நிலை கொடுத்து இக பர சுகங்களை நல்குகின்றது. அதனால்தான் சான்றோர்கள் கோயிலின் சிறப்பை கூறும்பொருட்டு **'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'** என்றும் **'திருக்கோயில்கள் இல்லாத ஊர்ரெல்லாம் ஊரல்ல அடவி காடே'** என்றும் கூறியுள்ளனர். பிறப்புக்களில் அரிய பிறப்பான மானிடப்பிறவி எடுத்ததன் பலன் இறைவனை வணங்கி முக்தி இன்பம் பெறுதல் பொருட்டேயாகும். அதனால்தான் மக்கள் தாம் வாழும் இடங்களில் தம்மை வாழவைக்கும் தெய்வங்களுக்கு பெருங்கோயில் அமைத்து விழா எடுத்துவழிபாடு செய்தனர்.

அந்தவகையில் எமது ஊரான ஆதிமயிலிட்டியில் பெரும்பரப்புப் பிள்ளையார் கோயில், காசிபூதவராயர் கோயில் என இரண்டு பெருங் கோயில்கள் அமையப் பெற்றுள்ளமை எம் ஊர் மக்கள் செய்த புண்ணியமேயாகும். ஆதிமயிலிட்டியில் 200 ஆண்டு பழமை வாய்ந்த கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் பெரும்பரப்பு பிள்ளையார், மகாகும்பாபிஷேகம் செய்யப்பெற்று திருவருட் பொலிவு பெறுகின்றார். இக்கோயில் இன்று பல சுற்றுப்பரிவார மூர்த்திகளைக் கொண்ட, வான்உயர் தூபியைக் கொண்ட கற்கோயிலாக புதுப்பொலிவு காண்பதற்கு அடிப்படைக்காரணம் இவ்வூர் மக்களும் ஆலயபரிபாலன சபை உறுப்பினர்களின் விடா முயற்சியுமே ஆகும்.

ஆலயத் திருப்பணியில் எமது குடும்பமும் இணைந்து இருப்பது எம்முன்னோர் செய்த புண்ணியம் ஆகும். பெரும்பரப்பு பிள்ளையார் கோயிலில் சுற்றுப் பரிவார மூரத்திகளுக்கு உரிய சுற்றாலயம் அமைக்கும் திருப்பணியில் எமக்கு இறைவனின் அனுக்கத்தொண்டரான சண்டேஸ்வரப் பொருமானுக்கு சுற்றாலயம் அமைத்து, அதற்கு உரிய விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்யும் பாக்கியம் கிடைத்ததையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஒரு ஆலயத்தில் சண்டேசுவர நாயனாரின் முக்கியத்துவம் எதுவெனில் "சித்தமெல்லாம் எனக்கு சிவமயமே" என சிவவழிபாட்டில் ஆழ்ந்திருக்கும் சண்டேஸ்வரரை வழிபடுவதே ஆகும். ஏனெனில் பக்தர்களுக்கு அனுமதியளித்து, அவர்களை கோயிலுக்குள் அனுப்பும் அதிகாரம் உடையவர் நந்திதேவர். அதுபோல சிவபுண்ணியப்பலனை பக்தர்களுக்கு அளிக்கும் அதிகாரம் சண்டேஸ்வரருக்கு உண்டு. கோயில்களில் தென்முகக்கடவுள், ஆடல்வல்லான் மற்றும் சண்டேசுவரர் ஆகியோர் தெற்கு நோக்கிக் காட்சியளிப்பார்கள். கோயில்களில் திருவிழாக்களில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு என்னும் திருவீதியுலா நிகழும். அப்போது சண்டேஸ்வரரும் உடன்எழுந்தருளுவார். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர் சண்டேஸ்வரப்பெருமான்.

எனவே நாமும் எமது ஊரான ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் கோயிலில் சுற்று பரிவாரமூர்த்திகளில் சண்டேஸ்வரப்பெருமானுக்கு சுற்றாலயம் அமைத்து விக்கிரகப்பிரதிஷ்டை செய்தமையையிட்டு எல்லாம்வல்ல பிள்ளையார் திருத்தாள் பணிந்து இந்த வாய்ப்பைத் தந்த ஆலயபரிபாலன சபைக்கு நன்றிகளைக்கூறி அமைகிறோம்.

**சங்கரப்பிள்ளை குடும்பம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குலதெய்வம் பெரும்பரப்புப் பிள்ளையார்

**'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'** என்ற ஔவையாரின் வாக்கிற்கு இணங்க, ஆதிமயிலிட்டியில் பெரும்பரப்பு பிள்யைார், சிவபூதராயர், கண்ணகி அம்மன் என மூன்று குலதெய்வங்கள் எமது ஊர் மக்களுக்கு அருள் பாலித்து வந்தன. 1990 ம் ஆண்டு கோயில்கள் அழிவுக்குட்பட்டு 25 வருடங்களின் பின், இக்குலதெய்வங்களுள் கண்ணகி அம்மன் மீள் கோயில் கொண்டு 2016 ம் ஆண்டு பங்குனி உத்தரத்தன்று குடமுழுக்கு பெற்று மக்களுக்கு அருள்பாலித்து வருகிறார். சிவபூதராயருக்கும் கடந்த தைமாதம் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது.

அந்த வகையில் தற்போது எமது குலதெய்வம் பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் மீள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று குடமுழுக்கு காணுவதையிட்டு பேரானந்தம் அடைகிறோம். இப்போதுள்ள அசாதாரண சூழ்நிலைக்கிடையேயும் அயராது கட்டடப் பணியை தொடர்ந்து நடாத்தி ஆலயத்தினை செவ்வனே திறம்படக் கட்டிமுடித்தமை போற்றுவதற்குரிய முயற்சியாகும். பரந்த அடிப்படையில் நமது சமய நெறிகள் மக்கள் மனதில் வேரூன்றி வளரவும், இறை நம்பிக்கையுடன் சமுதாயம் செயற்பட்டு மேலோங்கவும் பெரும்பரப்புப் பிள்ளையாரின் மகாகும்பாபிஷேக விழா வித்திட வேண்டும்.

நாடும் சமுதாயமும் சிறந்து விளங்க பிணிகள், துன்பங்கள் நீங்கி, விவசாயம் மேலோங்கிட எங்கள் குலதெய்வமாம் பெரும்பரப்புப் பிள்ளையாரின் திருவடிகளை இறைஞ்சுவோமாக!

ஓம் சாந்தி!

**தம்பிராசா கமலாகரன் குடும்பம்,**
சுவிற்சர்லாந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையாரின் பஞ்சாமிர்தமும் நானும்

நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் தலைநகரில் என்றாலும் அப்பா எங்களை தனது பிறந்த கிராமத்திற்கு சிறுவயதில் அடிக்கடி அழைத்துச் செல்வார். நாமும் சந்தோசமாக விடுமுறைக்கு ஆதிமயிலிட்டி கிராமத்துக்கு செல்வோம். அப்படி போகும் போது கட்டாயம் பிள்ளையார், பூதவராயர் கோயிலுக்கு செல்வோம்.

பிள்ளையாரைப் பற்றி எனது நினைவில் இப்போதும் பசுமையாக இருப்பது கோயில் ஐயா தரும் தீர்த்தமும் திருவிழாக்கால பஞ்சாமிர்தமும். நான் பல வருடங்கள் ஆலயத்திற்கு செல்லமுடியாது இருந்த போதிலும் இந்த நினைவுகள் நெஞ்சை விட்டு அகலவில்லை.

திருவிழாக்காலமாக இருந்தால் அப்பாவின் சகோதரர்களின் பிள்ளைகளும் வருவார்கள். நாங்கள் எல்லோரும் சேர்ந்து தோரணங்கள் கட்டுவோம். இது எமக்கு ஒரு சொந்தங்களின் சந்திப்பாகவும் இருந்தது. சிறுவர்களாகிய நாம் எல்லோரும் மிக்க மகிழ்ச்சியாக ஒருவருடன் ஒருவர் சேர்ந்து விளையாடி கோவிலுக்கு சென்று வருவது எனக்கு இப்போதும் நினைவில் உள்ளது. இவை எல்லாம் எனக்கு ஒரு பத்து வயதளவில் நடைபெற்ற நிகழ்வுகள் என்றாலும் இன்னும் என்னால் மறக்கமுடியவில்லை.

1968ஆம் ஆண்டில் நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்வில் எனது பாட்டா பங்கு பற்றியதாக கேள்விப்பட்டேன். தொடர்ந்து எனது அப்பா இக்கோவிலிலும் மிகுந்த நம்பிக்கை வைத்து வழிபட்டார். அவ்வாறே நானும் நம்பிக்கையுடன் வழிபட்டு வரும்போது புனரமைக்கப்படும் ஆலயத்தில் மணிக்கோபுரத்தை அமைத்துக் கொடுக்க பிள்ளையார் எனக்கு சந்தர்ப்பத்தை தந்துள்ளார், என்பதை நினைக்கும் போது மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். திருப்பணி வேலைகள் இனிதே நிறைவுற்று கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற எல்லாம்வல்ல பெரும்பரப்பு பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

**மகேந்திரன் கணநாதசங்கரன்,**
கொழும்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் கருவறையும் அதன் இரகசியங்களும்

மனிதனுக்கு தலைதான் பிரதானம் தலையில் இருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் உடலில் மற்ற அங்க அவயங்களை செயல்பட வைக்கிறது. இதேமாதிரிதான் ஆலய அமைப்பும் உள்ளது. உடலுக்கு தலை பிரதானம் போல ஆலயங்களுக்கு கருவறை பிரதானமாக உள்ளது. இதை மூலஸ்தானம், கர்ப்பக்கிரகம் என்றும் சொல்வார்கள். நமது உடல் பிரமாண்டமாக இருந்தாலும் தலை சிறியதாகத் தான் இருக்கும். அதே மாதிரிதான் ஆலயங்கள் எத்தனை பெரியதாக இருந்தாலும் கருவறை சிறியதாகவே இருக்கும். இதன் பின்னனியில் சூட்சுமங்களும், தேவரகசியமும் அடங்கியுள்ளன.

நமது முன்னோர்கள் வாஸ்து கணக்கு பிரகாரம், நீள, அகல உயரங்களை மிக துல்லியமாக கணக்கிட்டு ஆலயங்களை உருவாக்கியுள்ளார்கள். பிரபஞ்ச சக்திகளை கிரகிக்கும் பகுதியாக கருவறையை அமைத்தனர். பிரபஞ்சத்தில் உள்ள கதிர்கள் எல்லாம் ஒருவகை மின்னூட்டம் பெற்ற துகள்கள் ஆகும். இந்த அலைகள் கோயில் கருவறை விமானம் மீதுள்ள கலசங்கள் மூலம் கருவறைக்குள் இருக்கும் மூலவர் மீது பாயும். பின் அங்கிருந்து அந்த அலைகள் ஆலயம் முழுக்க விரவிப் பரவும். எனவே தான் ஆலயங்களுக்கு செல்லும்போது நமது ஆற்றல் அதிகரிக்கிறது. இதற்காகவே நம் முன்னோர்கள் கருவறை அமைப்பதில் மட்டும் அளவு கடந்த நுட்பத்தைக் கடைப்பிடித்தனர்.

எல்லா ஆலயங்களிலும் கருவறையானது வாசல் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளும் மூடப்பட்டதாக இருக்கும் கருவறை அமைப்பை 6 பகுதிகளாக பிரிக்கலாம். அவை

01. அதிஷ்டானம்/ பீடம்
02. பாதம்
03. மஞ்சம்
04. கண்டம்
05. பண்டிகை
06. ஸ்தூபி

மூலவர் சிலை நிறுவப்படும் பகுதியை அதிஷ்டானம் என்பார்கள். கருவறையின் வெளிப்புறச் சுவரை கோஷ்டம் என்பார்கள். கருவறை எத்தனை ஆண்டுகளைக் கடந்தாலும் இறை அருளை அள்ளித்தரும் பொக்கிஷமாக இருக்கவும் வழி வகுத்திருந்தார்கள். இதனால்தான் பண்டைய காலத்தில் நாட்டை ஆண்ட மன்னர்கள் தமது அரண்மனையை விட அருள் அலைதரும் கோவில்கள் எப்போதும் உறுதியாக நின்று நிலைபெற்று திகழவேண்டும் என்ற எண்ணத்துடன் கருவறைகளைக் கட்டினார்கள்.

கருவறைப் பகுதி சதுரம், வட்டம், முக்கோணம் எனும் 3 வித அமைப்புக்களில் அமைக்கப்பட்டன. இதில் தேவ உலகத்துடன் தொடர்புடையதாக கருதப்படுகின்ற சதுர அமைப்பினாலான கருவறையே அதிகமாகக் காணப்படுகின்றது.

பிரபஞ்சசக்திகளை ஒன்று திரட்டி தரும் தலமாக மாறும் இடம் என்பதால் நம் மூதாதையர்கள் கோவில் கட்டும் இடத்தை நன்றாக கணித்து கட்டினார்கள். கருவறைக்குள் வைரம், வைடூரியம், தகடுகள், கருங்கற்கள், சுட்டகற்கள், ஆற்றுமணல் போன்றவற்றை போட்டு நிரப்பும் வழக்கமும் இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பகிரக சதுர அளவு தண்டம் எனப்படும். இதன் அடிப்படையில் தான் ஆலயத்தின் மற்ற பகுதி அமைப்புக்கள் இருக்கும். சங்க காலத்தில் கருவறையை திருவுண்ணாழிகை என்றழைத்தனர்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் ஆலய கருவறை அமைப்பு ஆச்சரியப்படத்தக்கது. சந்திரக்கல்லால் உருவான இந்த கருவறை வெயில் காலத்தில் குளிர்ச்சியாகவும், குளிர்காலத்தில் வெப்பமாகவும் இருக்கும்.

பல சூட்சமங்கள் கொண்ட கருவறையை சற்று இருட்டாக வைத்தனர். அதிலும் ஒரு அறிவியல் பின்னணி உள்ளது. கருவறை விமான கலசம் மூலம் சூரிய கதிர்களின் அலை மூலவர் சிலைக்கு கடத்தப்படும். அதே சமயம் சிலைக்கு அடியில் உள்ள யந்திரம் பூமிக்கு அடியில் இருந்து கிடைக்கும் ஆற்றல்களை மூலவர் சிலைக்குக் கடத்தும். இதனால் கருவறையில் இறை ஆற்றல்கள் அனைத்தும் ஒன்று திரண்டு நிரம்பியிருக்கும். இந்த இறை ஆற்றல்கள் ஆலயத்தின் மற்ற பகுதிகளுக்கும் பரவும். எனவே தினமும் ஆலயங்களுக்கு சென்றால் இந்த இறை ஆற்றல்களை நாம் பெறலாம். ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் கருவறையின் ஆற்றலையும் அருமையையும் புரிந்து கொள்ளாமலே இருக்கின்றோம். நாம் வீட்டில் வழிபட்டால் 10 சதவீத ஆற்றலே கிடைக்கும் கோவில் பிரகாரத்தில் வழிபட்டால் 100 சதவீத ஆற்றல் பெறலாம். எல்லா இடங்களிலும் காந்த அலைகள் இருந்தாலும் கருவறையில் தான் அவை நமக்கு ஆற்றல் தரும் சக்தியாக மாறுகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

கருவறையில் ஒரே ஒரு விளக்கு தொங்க விடப்பட்டிருக்கும் அல்லது விக்கிரகத்துக்கு பின்னால் ஒரு செயற்கை ஒளி வட்டத்தை ஏற்படுத்தி இருப்பார்கள். இவை தான் கருவறையில் உள்ள இறை ஆற்றல்களை வெளிப்பக்கத்திற்கு எகிறச் செய்கிறது. தினம் தினம் இந்த இறை ஆற்றல்கள் திரண்டு வெளிவருகின்றன. அதனால் தான் கோயிலில் தயாரிக்கப்படும் நைவேத்தியங்கள், பால், தயிர், பஞ்சாமிர்தம், திருநீறு, சந்தனம் போன்றவை கருவறையில் சுவைமிக்கதாகவும் மகத்துவம் பொருந்திய மருந்தாகவும் மாறுவதற்கும் இறை ஆற்றல்களே காரணமாகும். அதாவது கருவறையில் தோன்றி ஆலயம் முழுவதும் பரவும் காந்த அலைகளேயாகும். எனவே "பாசிடிவ் எனர்ஜி" பெற கருவறை வழிபாடு மிகமிக முக்கியமானது. இவ்வளவு இரகசியங்களையும் கொண்ட கருவறையை அமைப்பதற்கு பிள்ளையார் எமது குடும்பத்திற்கு சந்தர்ப்பம் கொடுத்தமையை நினைக்கும்போது புல்லரிக்கின்றது.

**திருமதி. இந்திரை சுகுமாரன்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகப் பெருமானை வழிபட்டு நாம் எல்லோரும் இன்பம் அடைவோம்

முதலில் வணங்கப்படுபவர் விநாயகப் பெருமான். "ஓம்" எனும் பிரணவமந்திர வடிவமானவர் இவர். விநாயகப்பெருமானை வழிபட்டு பல அடியவர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள், இறைவனடி சேர்ந்திருக்கிறார்கள். விநாயகப்பெருமானை வழிபட சதுர்த்தி விரதம், விநாயகர் சஷ்டி விரதம் போன்றவை அனுட்டிக்கப்படுகிறது. இறைவன் தூணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார் என்பதைப்போல விநாயகக் கடவுளும் மிக எளிமையானவர். எங்கேயும், எதிலும் கண்டு எளிமையாக வழிபடக் கூடியவர். அத்தகையவரை நாமும் உண்மையாக மனமுருகி வழிபட்டு இன்பமடையவேண்டும்.

"பிள்ளையார் சுழி போட்டு நீ நல்லதைத் தொடங்கிவிடு.." என சீர்காழி கோவிந்தராயன் பிள்ளையாரைப் பற்றி பாடிய பக்திப்பாடல் அடியினை இவ்விடத்தில் ஞபாகப்படுத்துகிறேன். நாம் ஒரு காரியத்தை தடையின்றி வெற்றியுடன் செய்துமுடிக்க விநாயகரைக் கும்பிட்டு தொடங்குகின்ற ஓர்மரபு உண்டு. ஆலயங்களிலே வழிபாட்டின் போது முதலில் விநாயகருக்கு பூசை செய்யப்படும். வீட்டிலே செய்யப்படும் சடங்குகளிலே பிள்ளையாரை முதலிலே வழிபடுவோம். காரணம், ஒரு காரியம் எந்தத் தடையுமின்றி/ வரும் தடைகளைத் தகர்த்தெறிந்து காரியத்தை இனிதே நிறைவேற்றுவார். ஆதலால் தான் பிள்ளையாரை முதலிலே வணங்கி காரியசித்தி பெறுவோம். முதற்கடவுளாக விநாயகர் உள்ளார். எல்லாத் தெய்வங்களிலும் முதல்வராக இவர் விளங்குகிறார். ஆதி பரம்பொருள் மும்மூர்த்திகளின் வடிவமானவர். ஆதலால் ஐந்தொழில்களையும் புரிபவராகவும், நவக்கிரக தோஷங்களையும், நீக்கி அருள் புரிபவராகவும் காணப்படுகிறார்.

விநாயகப் பெருமான் மிகவும் எளிமையானவர். ஆற்றங்கரையில் குளத்தடியில் வீற்றிருந்து அருளாட்சி புரிபவர் விநாயகர். மேலும் பசுவின் சாணகம், மஞ்சள்மா, அரிசிமா, வெல்லம், களிமண் போன்றவற்றில் பிள்ளையார் பிடித்து வைத்து அதில் அறுகம்புல்லை சாத்தி வழிபடலாம். பிள்ளையாரை வழிபட மிக முக்கியமானவைகளில் அறுகம்புல்லும் ஒன்று. இதனை விட விரும்பிய மலர்களில் அர்ச்சிக்கலாம். விநாயகருக்குப் பிடித்த உணவாக மோதகத்தை குறிப்பிடுவார். அவல், கடலை, பால், தேன், பருப்பு போன்றவற்றை நிவேதனமாகப் படைப்பார். ஒளவைப்பாட்டியார் பிள்ளையாரைப் பார்த்து "பாலும் தெளிதேனும் நான் தருவேன் சங்கத்தமிழ் மூன்றும் தா" என்கிறார். நாமும் விநாயகப் பெருமானுக்கு இவற்றை உணவாக கொடுத்து நல்லருள் பெறுவோமாக.

வாழும் பிள்ளைகளிற்கு நல்லருள்காட்டியாக பிள்ளையார் இருந்திருக்கிறார். நாரதமுனிவர் கொடுத்த மாங்கனியை பிள்ளையார், முருகன் ஆகிய இருவரிலும் யாருக்குக் கொடுப்பது என்பதை தீர்மானிக்க இருவரிலும் யார் உலகைச் சுற்றி வருகிறார்களோ அவருக்கே மாங்கனி என்றனர் அம்மை அப்பர். இதைக்கேட்ட முருகப்பெருமான் மயில் மேல் ஏறி உலகம் எங்கும் சுற்றி வரச்சென்றார். பிள்ளையார் சற்று யோசித்துவிட்டு அம்மை அப்பனை சுற்றி வந்து முதலிலே மாங்கனியைப் பெற்றார். இதன்மூலம் பிள்ளையார் தந்தை தாயாரே உலகம் என்பதை நமக்கு உணர்த்தியுள்ளார்.

விநாயகப்பெருமானை வழிபடுவதற்கு இரு விரதங்கள் முன்வைக்கப்படுகிறன.

01. சதுர்த்தி விரதம்

02. விநாயகர் சஷ்டி விரதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதுர்த்தி விரதம்**

இது பர்வதராயன் - மகள் - பார்வதிதேவி சிவனை அடைய அனுட்டித்த விரதம். ஆவணி மாதத்தில் வரும் சுக்கிலபட்ச சதுர்த்தியன்று விரதத்தை ஆரம்பிப்பது நன்று. திருமணமாவதற்கு விரதத்தை அனுட்டிப்பது நன்று. நினைத்ததை அடைய இவ்விரதம் துணைபுரிகிறது.

**விநாயகர் சஷ்டிவிரதம்**

விநாயகரின் திருவிளையாடல்களை கொண்டமைந்த இவ் விரதம் விநாயக விரதங்களில் மிகச் சிறப்பானது. கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரையுள்ள 21 நாட்கள் இவ்விரதத்தை அனுட்டிப்பார். இவ்விரதகாலம் முதல் 20 நாட்கள் பகல் ஒரு பொழுது உணவு உண்டு இறுதித் தினத்தில் உபவாசம் இருப்பர். இவ்விரதம் 21 வருடம் அனுட்டிப்பது சிறப்பு. இவ்விரத காலங்களில் பிள்ளையார் கதை படிக்கும் வழக்கம் உள்ளது.

விநாயகப் பெருமானை வழிபட்டுப் பயன் அடைந்தோர் பலர். ஔவையாரை கைலாய மலைக்குக் கூட்டிச்சென்றவர் பிள்ளையார். பார்வதராயன் மகள் பார்வதிதேவி சிவனை அடைவதற்காக பிள்ளையாரை வழிபட்டார். நளமகாராஜன் சதுர்த்தி விரதத்தை அனுட்டித்து அருள் பெற்றார். முருகப்பெருமான் தாருகாசுரனை கொல்வதற்கு புறப்பட முன்னர் விநாயகப் பெருமானை வழிபட்டு ஆரம்பித்தார் என்று விநாயக புராணம் கூறுகிறது.

எல்லாமே முடியாதவர்கள் விநாயக புராணம் படிப்பதைக் கேட்டாலே எத்தனையோ பல இன்பங்களைப் பெறலாம். விநாயகப் பெருமானின் லீலைகளைக் கேட்டாலும் படித்தாலும் அவரவர் ஏழேழு ஜென்மங்களிற் செய்த பாவம் அனைத்தும் போய்விடும். மேலும் செய்நன்றி மறத்தல், பிற உயிர்களிற்கு துன்பஞ்செய்தல் போன்ற பல பாவங்களை செய்வோருடைய பாவங்கள் தொலைந்து விடுமாம். ஆதலால் நாம் விநாயகப்பெருமானை வழிபட்டு இன்பமடைவோம்.

**திருமதி. திருநாவுக்கரசு சுமதி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயிகள் வாழ்வில் அறச்சிந்தனைகள்

இந்துக்களினுடைய வாழ்வு சடங்கு, சம்பிரதாயங்கள், கிரியைகள், அறம் என்பவற்றைப் பின்பற்றியதாக அமைகிறது. ஒவ்வொரு இந்துவின் வாழ்வும் நிறைவானதாக அமைய, பிறந்த பிறப்பின் நேக்கத்தை அடைய அறச்சிந்தனைகளைப் பின்பற்றுவது மேலும் உறுதுணையாக அமையும். இதற்காக ஏராளமான அறநூல்களைக் கற்றறிந்த பெரியேர்கள் எமக்கு ஆக்கித்தந்துள்ளனர். மண்ணில் நல்ல வண்ணம் வாழுவதற்காக எமக்கு நூல்கள் தரப்பட்டுள்ள போதும் நாம் அறச்சிந்தனைகளைச் சரியாகப்பின்பற்றத் தவறுகிறோம். இதனால் பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து நிம்மதி இழந்து இருப்பதை பல்வேறு சந்தர்ப்பங்களில் அவதானிக்கமுடிகிறது. இது சார்ந்த சிறு முயற்சியாக மிக எளிமையான, எக்காலத்திற்கும் பெருந்தக் கூடிய நூலாகவுள்ள ஔவையாரின் ஆத்திசூடியில் இருந்து சில அறக்கருத்துக்களை இக்கட்டுரையின்னுடாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

ஒவ்வொரு இயக்கத்துக்கும் ஒவ்வொரு விதிமுறை உண்டு. அந்த விதிமுறை இயக்கத்தின் அச்சாணியாகிறது. உலகம் இயங்குகின்றது பூமி சுழல்கிறது. இரவு, பகல், நாள், நேரம் எனக் கணிக்கப்பெறுகிறது. புகைவண்டி ஓடுகின்றது. இது ஓடுவதற்கு, நீர் அல்லது டீசல் தேவை. ஆனால் புகைவண்டி ஓட, குறித்த இடத்தை அடைய தண்டவாளம் தேவை. இது போன்று எமது வாழ்வும் புடம் போடப்படுவதற்கு அறநெறி வாழ்வு உறுதுணையாக அமையும்.

சமயம் வெறும் சடங்குகளோடும், ஆசாரங்களோடும் மாத்திரம் நின்றுவிடாது அறநெறிபட்ட வாழ்வினையும் கூறுகின்றது. ஆனால் அறநெறிகளை அறிந்து பின்பற்றுவதில் நமக்கு அக்கறை இல்லை. இந்த நிலைக்கு காரணங்கள் என்ன என்று ஆராய்கின்ற போது பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. மெய்யான வாழ்வு வாழ விருப்பம் இன்மை
02. போலிகளுக்குள் தம்மை மாற்றிக்கொள்ளல்
03. அறச்சிந்தனைகளை அறிந்துகொள்ளாமை
04. தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாதல்

மேற்குறித்த காரணங்களால் பெற்றோர்கள் இன்று சமயத்தோடுள்ள அறநெறிப்பட்ட வாழ்வை வாழ்வது அரிதாகியுள்ளது. இதனால் பெற்றோர் சிறந்த முன் மாதிரியாக விளங்குவதோடு தம் பிள்ளைகளையும் அறச்சிந்தனையுடன் கூடிய பழக்கவழக்கங்களை ஆற்றுப்படுத்துவதும் அவசியமாகின்றது.

அறம் கூறும் நூல்களாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வெற்றிவேற்கை, நன்னெறி, உலகநீதி, மூதுரை, இனியவைநாற்பது, திருக்குறள், முதுமொழிக்காஞ்சி, மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம், விநாயகர் புராணம் எனப் பல்வேறு நூல்கள் உள்ளன. இதில் சில சிந்தனைகளையாவது அறிந்து நல்ல மனிதராய் வாழ முயல்வது நன்று.

அற நூல்கள் தரும் சிந்தனைகளை ஆதிகால இந்துக்கள் சமயத்துடன் இணைந்து பின்பற்றிவந்தனர். காரணம் அவர்களுடைய வாழ்வு சமயத்துடன், அறநெறியுடன் இணைந்ததாக அமைந்தது. ஆனால் நடைமுறையுலகில் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அளவு குறைந்து வருகின்றமை மிகவும் வேதனைக்குரியது. இத்தகைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையிலேயே இந்து கலாசார அமைச்சு அறநெறிச்சிந்தனைகள் சிறார்களுக்கு சிறுவயதிலிருந்தே விதைத்துவிடவேண்டும் என்று பலதரப்பட்ட முயற்சிகளை எடுத்து வருகின்றது. அறக் கருத்துக்களை ஔவையார் மிக எளிமையான முறையில், நூற்றி எட்டு அடிகளில் ஆத்திசூடி மூலம் தந்துள்ளார். சின்னச் சிறு அடிகளில் பொருள் பொதிந்த ஆழமான கருத்துக்களை அதாவது நடைமுறை வாழ்வில் பின்னற்ற வேண்டிய பழக்கவழக்களை எடுத்துரைத்துள்ளார்.

"அறம் செய விரும்பு" என்கிறார். தருமம் செய்வதற்கு நீ விரும்பு என்கிறார். இங்கு மனம் முதன்மைப்படுகின்றது. பொருள் இருந்தாலும் அதை இல்லாதவர்க்கு அல்லது தேவைப்படுபவர்களுக்குக் கொடுப்பதற்கு மனதில் விருப்பம் வேண்டும். ஆதலினால் போலும் அறம் செய விரும்பு என்கிறார். இந்த விடயம்பற்றி ஔவையார் வேறு வேறு இடங்களாக நான்கு இடங்களில் கூறுவதன் மூலம் அறம் வலியுறுத்தப்படுகின்றது. இரண்டாவது அடியில் "ஆறுவது சினம்" என இரண்டு சொற்களில் கூறிமுடிக்கிறார். "சினம்" என்பது கோபத்தைக் குறிக்கிறது. ஒருவரிடம் கோபம் அல்லது சினம் ஆட்சி செய்வது நல்லதல்ல. அது ஒருவரை நல்ல செயல்களைச் செய்யவிடாதிருப்பதுடன் செய்யக்கூடாத வேலைகளைச் செய்யத்தூண்டிவிடும். ஆதலால் மனதிலே சினத்தை நிலையாக வைத்திருக்காது குறைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்.

ஆறாவது அடியில் செய்யும் தொழில் பற்றிக்கூறுகின்றார். "ஊக்கமது கைவிடேல்"என்கிறார். செய்யும் தொழிலில் ஊக்கத்தைக் கைவிடக்கூடாது. ஊக்கம், முயற்சி தொழிலில் வலியுறுத்தப்படுகின்றது. "எண்ணெழுத்திகழேல்" என்கிறார், ஏழாவது பாடலில். எண் என்பது கணிதம். எழுத்து என்பது தமிழ் மொழியையும் குறிக்கின்றது. இவற்றைக்கற்பதில் அலட்சியம் செய்யாதே என்கிறார். ஔவையார், ஒருவன் இந்த உலகத்தைப் பார்ப்பதற்கு, வாழ்வதற்கு எண்ணும் எழுத்தும் மிக அடிப்படையானவை என்ற சிந்தனையை முன்வைக்கின்றார்.

ஏற்பது இகழ்ச்சி என்கிறார். எட்டாவது அடியில் ஒருவரிடம் "யாசிப்பது" அல்லது வாங்குவது இழிவனாது என்கிறார். ஆனால் இன்று ஒருவரிடம் வாங்குவதில் எந்தவித தயக்கமும் இவருக்கும் இருப்பதில்லை. இப்பழக்கம் சர்வசாதாரணமாகிவிட்டது. எமது மூதாதையர்கள் தாம் உழைத்து தன்நிறைவோடு வாழ்ந்தார்கள் என்பது இங்கு ஞாபகப்படுத்தப்படவேண்டிய விடயம்.

பன்னிரண்டாவது அடியில் "ஔவியம் பேசேல்" என்கிறார். இங்கு ஔவியம் என்பது பெறாமையை குறித்து நிற்கிறது. "பெறாமைச் சொற்களை பேசாதே" ஒருவர் நல்லாயிருப்பதை, வளர்வதை, பாராட்டப்படுவதை விரும்பாதவர்களினால் சொல்லப்படும் சொற்கள் இவ்வாறு இருக்கும். யாராகினும் பொறாமைச் சொற்களினை பேசுவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும். இதன் தொடர்ச்சியில் வேறு வேறு பிரச்சினைகள் தோன்றவும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும் பதின்நான்காவது அடியில் "ஞயம்பட உரை" என்கிறார். ஞயம் என்றால் கனிவான என்பது பொருள். இங்கு ஔவையார் எதையும் கனிவான முறையில் சொல் என்கிறார். பகிடி, நவநாகரிகம் என்ற போர்வையில் வீடுகளில் பயன்படுத்தத்தகாத சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் நன்று.

ஔவையார் யார் யாருடன் சேர வேண்டும் என்பதை பல பார்வையின் நின்று கூறுகிறார். நாற்பத்தி நான்காவது அடியில் "சான்றோர் இனத்து இரு" என்கிறார். அதாவது கற்றறிந்த பெரியோர் கூட்டத்திலே நீ சேர்ந்து கொள் என்பது இதன் பொருள். ஐம்பாதவது அடியில் சேரிடம் அறிந்து சேர். அதாவது நட்புக் கொள்ளக் கூடியவர் யார்? என அறிந்து நட்புக் கொள்ளும்படி கூறுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கீழ்த்தரமான பண்புகளைப் பின்பற்றக்கூடாது என்கிறார். சூதாடுதல், கோபம் கொள்ளுதல், பிறர்பொருளைப் பறித்தெடுத்தல், கொள்ளையடித்தல், தெய்வத்தை இகழ்தல், சோம்பலாக இருத்தல், தீவினை, அறியாமை, பேராசை, ஒரு பக்கமாகப்பேசுதல்" மேற்சொன்ன பழக்கவழக்கங்களை வாழ்வில் தவிர்த்துக் கொள்ளும்படி கூறுகிறார்.

வாழ்வில் பின்பற்றக்கூடிய பழக்கவழக்கமாக விடியற்காலையில் துயில் எழுதல், தருமம் செய்தல், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களைக் கற்றல், தாய் தந்தையை போற்றிப் பாதுகாத்தல், நன்றி மறவாது இருத்தல், சிறு வயதில் கல்வி கற்றல், ஊருடன்கூடி வாழ்தல், பெரியோரைத் துணைகொள்ளல், பிறருடன் மரியாதையாக நடந்து கொள்ளுதல், நிலையில்லா வாழ்வில் நிலையான நல்ல செயல்களைச் செய்தல், உலகத்தோடு கூடிவாழ்தல், நற்குணங்கள் பொருந்தியவனாக இருத்தல், தகுதியானவனாக இருத்தல். இவ்வாறு நல்லவற்றைப் பின்பற்றி நல்லபடி வாழ அறிவுரை கூறியுள்ளார். இவற்றை வாழ்வின் நடத்தைக் கோலமாக மாற்றுவதன் மூலம் நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

மேற்குறித்தவாறான நற்பழக்கவழக்கங்களை பின்பற்றாதவர்கள் இன்று பல்வேறு சமூச்சீரழிவுகளை ஏற்படுத்துகின்றார்கள். யாவரையும் மதிக்காமை, சிறுவர் துஷ்பிரயோகம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வாள்வெட்டு என்றெல்லாம் பொருந்தாத செயல்களை எந்தவித பயமுமின்றிச் செய்வது மனவருத்தத்திற்குரியது. பணத்திற்கு ஆசைப்பட்டு உழைக்கத் தயாரில்லாத சமூகக்கும்பல் கோயில் விக்கிரகத்தையே திருடுகிறது. இத்தகைய கீழ்நிலைகள் நீங்க, பாவம் புண்ணியம், பற்றி அறிந்து நன்நெறி நின்று அனைவரும் வாழ முன்வர வேண்டும்.

ஔவையார் நமது சிந்தனைகள், உயர்வானதாக இருக்க வேண்டும் என்கிறார். அதற்கு மேலாக அறச்சிந்தனை தூய்மையானதாக இருக்க வேண்டும் என்கிறார். சிறுவர்களைப் பெற்றோரும், கற்றோரும் உங்கள் அயலில் உள்ள அறநெறிப்பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள். இந்து கலாசார அமைச்சு சிறார்களை நல்லதொரு நிலைக்கு கொண்டுவர ஏராளமான செலவு செய்கின்றது. இது சிறுவர்களது வெற்றிக்கு வழிவகுக்கும். பெற்றோர்கள் இதுபற்றி சற்றுக்கவனம் எடுத்தால் நற்சிந்தனையுள்ள ஒழுக்கமுள்ள இளைய தலைமுறை உருவாகும். சமயமும் அறநெறியும் கூடியவாழ்வு எங்கும் மலரட்டும்.

**திருமதி. திரிலோஜினி ஜெயக்குமார்,**
ஆதிமயிலிட்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களின் அவசியம்

**'விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங்கொளியாய்'** எங்கும் வியாபித்திருக்கும் சர்வகாரனை அறிந்துணர்ந்து கொள்ள அவனின் உறைவிடமாக ஆலயங்கள் மிளிர்கின்றன. நோக்கரிய, நுணுக்கரிய நுண்ணுணர்வானனை எம்முள் கண்டு கொள்ளப் புறக்கண்ணில் காண்பதற்கே ஆலயங்கள் தேவைப்படுகின்றன

பிறந்த குழந்தை உடனடியாக எழும்பி நடப்பதில்லை ஒவ்வொரு படிநிலை தாண்டியே நடைபயில்கின்றது. அவ்வாறே சைவசித்தாந்தம் படிநிலையுயர்ச்சியை முன்வைக்கின்றது. ஆன்மா பிறப்பில் இலட்சியம் அடைதல் அதாவது முத்தியடைதல் முயற்சி நான்கு பாதங்களாக வகுக்கப்படுகிறது. அவை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவையாகும். இங்கு சரியை, கிரியை பணிகளை மேற்கொள்ள ஆலயங்கள் அவசியம். இவ்வான்மிக செயற்பாடுகளுக்கு ஆன்மாவை லயிக்க வைக்கும் இடமாக ஆலயங்கள் அமைகின்றன.

ஒருவைத்திய நிபுணர் உருவாகின்றார் என்றால், பிறந்து, தவழ்ந்து, நடைபயின்று பாடசாலை சென்று அரிவரி என்னும் தற்போதைய முன்பள்ளி தொடங்கி, பல்கலைக்கழகம் சென்று, கற்று வேலை அனுபவம் பெற்றே உருவாகமுடியும். தாவிப்பாய்தலோ, உயரப்பாய்தலோ இங்கு இல்லை. இது படிநிலையில் தொடர்பறாத பாதையாக உள்ளது. சரியை வழிபாடான ஆலயம் கூட்டல், கழுவுதல், பூப்பறித்தல், மாலை தொடுத்தல், நந்தவனம் அமைத்தல் போன்றவை இயற்ற ஆலயங்களே தேவை. மேலும்கிரியை வழிபாடான மந்திரம், பக்தி, பாவனை மேற்கொள்ள, யாகங்கள் புரிய ஆலயங்கள் களமாக வேண்டப்படுபவையாகும்.

யோக நிலையான அகவழிபாட்டிற்கு மனதை ஒருநிலைப்படுத்தும் தாபனமாக கோயில்கள் அமைகின்றன. ஆலயங்களில் உருவ வழிபாடு இயற்றி அதன் மூலம் பக்தி நெறியில் இறைவனையறிந்து யோகநெறியில் இறைவனோடு ஒன்றிக்கும் நிலையடையும் ஆன்மா. இதற்கு தேவஸ்தானங்கள் அவசியம்.

திருமுறைகளில் ஆலயவழிபாடு பற்றி கூறுவதை நோக்கின், அப்பர் சுவாமிகள் "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்" எனக்குறிப்பிட்டு அவ்வாறான ஊர் அடவி காடு என்கிறார். அவ்வூரில் லஷ்மி வாசம் செய்யமாட்டாளாம். அது எவ்வகையிலும் சிறப்பற்றவூராகும். (திருஇல்லக), மேலும் "நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு" என்பதாலும் "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதாலும் காலையிலும், மாலையிலும் கடவுள் அடிபணிந்து "கசிந்தமனத்தவர் பயிலுங்கலய நல்லூரே" என்பதாலும் ஆலய அவசியம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சித்தர் திருமூலர் திருமந்திரத்தில்

> **'முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்'**
> **மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்**
> **கன்னங் களவு மிகுத்திடும் காசினி**
> **என்னரு நந்தி எடுத்துரைத் தானே'**

என்று குறிப்பிடுவதால் ஆலய மகிமை பற்றி விளங்கலாம்.

பெரியபுராணத்தில் நாயன்மார் வாழ்வியலை நோக்கின், சம்பந்தர் தலயாத்திரை சென்று தலங்கள் தோறும் பதிகம் இயற்றியுள்ளார். அப்பர் சுவாமிகள் உழவாரத்தொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, தலயாத்திரையும் மேற்கொண்டார். சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோரும் தலத்தின் மீதே முறையே தேவார, திருவாசகம் பாடினர்

கண்ணப்பநாயனார் வரலாற்றை நோக்கின், அதுவரை காலமும் ஆலய வழிபாட்டிலே ஈடுபட்டிராத வேடுவரான அவர் திருக்காளத்திக் கோவில் அருகில் வரவே விசேட உணர்வு பெற்றார். உடல் இலேசாக இருந்தமையுணர்ந்தார். மலையிலேறி மேல்சென்று காளத்தியப்பரைக் கண்ட மாத்திரத்தில், தம்மைத், தம் சூழலை மறந்து, காளத்தியப்பருடனே ஐக்கியப்படுகிறார். இறையன்பின் பக்தி மேலீட்டால் இறைவனுக்கு நீராட்டி, உணவூட்டி, காவல் இருந்து தொண்டாற்றுகின்றார். இங்கு காளத்தி ஆலயமும் திருலிங்க வடிவுமே அவரை ஆட்கொள்கிறமையைக் கொண்டு ஆலய முக்கியத்துவம் நிரூபிக்கப்படுகின்றது. இறையருள் வெளிப்பட ஆலயம் இன்றியமையாதது.

நாயன்மார்கள் முக்தி பெற்றதும் ஆலயங்களிலே ஆகும். நாயன்மார் தொண்டு செய்ததும் இதே ஆலயங்கள் தான். பெரும்பாலான அற்புதங்கள் நிகழ்த்தியமையும் ஆலயங்களில்தான். ஆலயங்கள்தோறும் கூட்டுவழிபாடு, கூட்டுபஜனை நிகழ்த்தின் அதன் சக்தியே தனி. ஆலயங்களில் அருட்சக்தி அதிர்வலைகள் வீசி எமது உடலையும், உள்ளத்தையும் கிளர்ச்சி பெற, ஆற்றல் பெறவைக்கும். அருட்பிரவாகம் பெருகும் இறைவனின் சந்நித்தியம் நேரடியாகக்கிடைக்கும். சத்+ நித்தியம் = சந்நித்தியம். சத் என்பது உள்ளது. உண்மைப்பொருள் உள்பொருள். அது என்றும் நித்தியமானது. ஆக ஆன்மாவிற்கு உண்மைப் பொருள் விளக்கம் ஏற்படும் இடம் ஆலயமே.

ஓர் பசுவின் உடல் முழுவதும் ஓடித்திரியும் இரத்தமே, பாலாகி அப்பசுவின் மடியில் இருந்தே பால் சுறைக்கின்றது. எங்கும் வியாபித்துள்ள இறைவனை, எம்முடனே இருக்கும் இறைவனை ஆலயங்களில் திருவுருவமாகக் கண்டு, பக்தி பண்ணி, இன்புற்று, அங்கிருந்தே அருளைப் பெறுகின்றோம். சித்தாந்த சன்மார்க்க நெறி நின்று இறையருள் பெற்று எமது ஆன்மலட்சியத்தை அடைவோமாக.

ஆக்கம்
**திருமதி. விமலாதேவி இராஜேந்திரம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்

இந்து சமூகத்தின் சமயம், கலை, கலாசாரம், பண்பாடு போன்ற மேம்பாடுகளை உணர்ந்து கொள்வதற்கு அச்சமூகம் சார்ந்த வரலாற்றுத் தரவுகளை அறிந்து கொள்வது மிகவும் பயனுடையதாகும். வட இலங்கையிலே வலிகாமம் வடக்கு பகுதியில் மயிலிட்டிக் கிராமத்திலே முற்காலத்திலும் இக்காலத்திலும் அறிவியலாளர்கள், விவசாய (தோட்ட) செய்கையாளர்கள் வாழ்ந்த சூழலில் பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம் அமைந்தது. மேற்படி கிராம மக்கள் வழிபாட்டில் ஈடுபடுவதற்கு இவ்வாலயத்தை எம்முன்னோர் அமைத்தனர். எமது பேரன் பேத்தி காலத்தில் இருந்தே பூஜைகள் மிகச் சிறப்பாக நடந்தேறின. நாம் சிறுவயதில் இருக்கும்போது சங்கு ஊதி பாமாலை பாடியும் திருவெம்பாவை காலத்தில் கந்தசாமி என்பவர் தொண்டு செய்வது நன்றாக தெரிந்தது. எமது உறவினர்கள் சுழிபுரம், இளவாலைப் பகுதியில் இருந்து எமது வீட்டிற்கு வரும் போது காரை (வாகனத்தை) நிற்பாட்டி வணங்கி வருவது அவர்களின் வழமை. அப்படி வணங்காதுவிடின் ஏதாவது சிக்கல் வரும் என்றும் ஒரு நம்பிக்கை இருந்தது. இன்றும் குடாநாட்டு மக்கள் தூரபிரயாணம் செய்யும் போது செம்மணி, கைதடி, முறுகண்டி, ஓமந்தை, வவுனியா பிள்ளையார் ஆலயங்களில் வாகனத்தை மறித்து வணங்கி செல்வது வழக்கமாகி விட்டது. ஒவ்வோர் கிராமத்திலுள்ள மக்கள் தமது கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்தை தரிசித்தே தமது கடமைகளை செய்து வருகின்றனர்.

நாங்கள் பெற்றோருடன் இக்கோவிலுக்கு அடிக்கடி சென்று வருவோம். இரவு திருவிழாக் காலங்களில் கோவிலின் வடக்கு வீதியில் புகையிரதப் பாதையின் கறுப்பு கற்கள் இருக்கும் இடத்தில் விளையாடுவோம். அப்பொழுது தான் தெரியும் காங்கேசன் துறையில் இருந்து பலாலி விமானத்தளத்திற்கும் புகையிரதம் வந்ததாக சொல்வார்கள். நாங்கள் கொழும்பு செல்லும் காலங்களில் புகையிரதப் பாதை இருக்கவில்லை. கற்கள் மட்டுமே காணப்பட்டன. ஆலயங்களின் வரலாறு பலருக்கு தெரியாமல் உள்ள வேளையில், இக் கோயிலின் வரலாறும் தற்போது இருப்பவர்களுக்கு தெரியாமல் இருந்தாலும் எனது தாயார் மகேஸ்வரி தாங்கள் சிறு பிள்ளையாக இருக்கும் பொழுதே அக்கோவிலுக்கு சென்று வந்ததாக கூறுவார். எனவே இக்கோவில் இருநூறு வருடத்திற்கு முன் உருவாக்கப்பட்ட ஆலயமாக இருக்கும்.

இந்த பிள்ளையார் அருளினால் தான் நாங்கள் சதுர்த்தி விரதம், பிள்ளையார் கதை விரதம் ஆரம்பித்து அதனை தற்போதும் கடைப்பிடித்து வருகின்றோம். இக்கோவில் சூழ்நிலை காரணமாக அழிந்தது. மேற்படி கோயிலை பரிபாலித்த பரம்பரையினரும் மேற்படி கிராமமக்களும் ஒன்றிணைந்து புனரமைப்பு செய்து மகாகும்பாபிஷேகத்தை செய்வது பிள்ளையார் மீது வைத்த நம்பிக்கையும் பிள்ளையார் திருவருளுமென்றே கூறவேண்டும். ஆலயத்திற்கு பங்களிப்பு செய்ததை விளம்பரம் செய்வதை யாம் விரும்பாதபோதும் வருங்கால சந்ததி சிந்தித்து மேலும் ஆலயத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும் என்பதற்காக பங்களிப்புக்களில் சிலதை குறிப்பிட்டாக வேண்டும்.

வாகனசாலை - மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர்
மூஷிக வாகனம் - சி. மாமுகன் - கனடா

சுவாமி வெளிவீதியுலா வருவதற்கு சகடை, கொம்பு, காவாங்கு, குடை என்பவற்றை சங்கரப்பிள்ளை சீவரத்தினம், சரஸ்வதியம்மா சுவாமிநாதர் குடும்பத்தினர் (எனது தாயாரின் சகோதரர்கள்) இணைந்து செய்தனர். எமது ஊர் மீதும் இக்கோயிலின் நம்பிக்கையினாலும் பிள்ளையார் திருவருளினாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**குமுதினி சிவசங்கரநாதன்,**
மயிலிட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாட்டின் முதன்மையும் பழமையும்

உலகத்தில் முதன்முதல் தோன்றிய ஒலி "ஓம்" என்பதாகும். காற்று ஓம் என்று வீசுகின்றது. கடல் அலை ஓம் என்று சப்தம் செய்கின்றது. இந்த ஓம் என்ற பிரணவப் பொருளின் சொரூபமே விநாயகரின் திருவுருவமாகும். இந்த ஓம் என்ற ஒலியிலிருந்தே மற்றைய பொருட்கள் எல்லாம் படைக்கப்பட்டன. ஆகவே தான் ஓம் என்ற ஒலியின் சொரூபமான விநாயகர் கோயில்களில் முதல் பூசை பெறுகிறார்.

எல்லாக் கோயில்களிலும் விநாயகர் மூலமூர்த்தியாகவோ அன்றி பரிவார மூர்த்தியாகவோ இடம் பெறுகின்றார். ஆகையினாலே எல்லாக் கோயில்களிலும் கொடி மரத்துக்கு முன் மூலதார கணபதி (தம்பத்தடி பிள்ளையார்) ஸ்தாபிக்கப்பட்டிருப்பதை பார்க்கின்றோம். ஆகையினாலே எல்லா ஆலயக் கிரியைகளிலும் எல்லாச் சுபகாரியங்களிலும் முதற்கண் விநாயகருக்கு வணக்கம் செய்யப்படுகிறது.

அன்னை பராசக்தி மகிடாசுரனை வதம் செய்து போரில் வெல்வதற்கு முதல் விநாயகரை வழிபட்டுச் சென்றதாகவும் விநாயகரை வழிபட்ட பின்பே முருகன் வள்ளியை மணம் புரிந்தார் என்றும் வேதவியாசர் மகாபாரத காவியத்தை இடையூறின்றி இயற்ற விநாயக வழிபாடு செய்து அவரைக் கொண்டு எழுதுவித்தார் என்றும் ஔவையார் விநாயகரை வழிபாடு செய்து இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் பெற்று திருக்கைலை செல்ல அருள்புரிந்தார் எனவும் புராண இதிகாசங்கள் உரைக்கின்றன. சிவபெருமான் முப்புரங்களை அழிக்கச் சென்ற சமயம் விநாயகரை வழிபடாத காரணத்தினால் தேரின் அச்சு உடைந்த நிகழ்ச்சியை அருணகிரிநாதர் திருப்புகழிலே

> **'முப்புரம் எரிசெய்த அச்சிவனுறை ரதம்**
> **அச்சது பொடி செய்த அததீரா'**

எனப்பாடி விநாயக வழிபாட்டின் முதன்மையை விளக்கியுள்ளார். நம்பியாண்டார் நம்பிக்கு அருள்புரிந்து, தேவாரத்திருமுறைகளை வெளியுலகிற்கு கொண்டு வந்தவரும் விநாயகர் ஆவார். விநாயகப் பெருமானின் தோற்றத்தை உற்று நோக்கும்போது விநாயகப் பெருமான் யானைமுகம், நீண்ட துதிக்கை, ஒற்றைத் தந்தம், நான்கு கரங்கள், ஒருகையில் அங்குசம் மறு கையில் பாசம் ஒரு கையில் மோதகம் ஒரு கையில் தந்தம், பேழை வயிறு, சுளகு போன்ற செவிகள் ஆதிசேடனாகிய பாம்பு உதரபந்தனம், முப்புரிநூல், நெற்றிக்கண், நீலமேனி, கீழ்த்தூங்கும் வாய் ஆகிய தோற்றத்தோடு விளங்குபவர் பஞ்சகிருத்திய தொழிலை, பாசம் ஏந்திய கை படைத்தலையும் தந்தம் ஏந்திய கை காத்தலையும் அங்குசம் ஏந்திய கை அழித்தலையும் துதிக்கை மறைத்தலையும் மோதகம் ஏந்திய கை அருளலையும் முறையே குறித்து நிற்கின்றன.

விநாயகப்பெருமானது வயிற்றினுள் பதினான்கு உலகங்கள், சிவம், சக்தி முதலாய ஒன்பது மூர்த்தங்கள், நாற்பாதங்கள், நான்கு வருணங்கள், நால்வகை முக்திகள், ஐம்பூதங்கள், ஐவகை நிலங்கள், சகல உலோக வகைகள், நவரத்தினங்கள் வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், வேதாந்தங்கள், நான்கு ஆச்சிரமங்கள், அட்டதிக்குப் பாலகர்கள், பதினொரு உருத்திரர்கள், பன்னிருசூரியர்கள், அட்டவசுக்கள் நாற்பத்தெண்பது வாயுக்கள், நவக்கிரகங்கள். தேவர்கள், வித்தியாதரர், மலைகள், மேகங்கள், கடல்கள், எண்பத்து நான்கு நூறாயிரபேத உயிர்கள் என்பன அடங்கும் என விநாயக புராணம் கூறுகிறது.

விநாயகரை பிரமச்சாரியாகவே காட்டப்படும் வழக்கே பொதுவானது. ஆனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இந்தியாவில் அவரைத் தேவியரோடு வழிபடும் வழக்கமும் உண்டு. சித்தி, புத்தி என்ற இரு சக்திகளோடு இணைந்தவராகவும் விநாயகர் போற்றப்படுகின்றார். இதன் பொருள் அவர் அறிவு, வெற்றி இரண்டுக்கும் தலைவர் என்பதாகும்.

விநாயகப்பெருமானின் திரு அவதாரத்தை நோக்கும்போது மாகத முனிவருக்கும், விபுதை என்னும் அசுர கன்னிக்கும் பிறந்தவன் கஜமுகன் என்னும் அசுரன். அவன் பதின்மூவாயிரம் வருடங்கள் கடும் தவம் புரிந்து சிவபெருமானிடம் எத்தேவராலும், மனிதராலும், விலங்குகளாலும், எப்படைக்காலத்தாலும் அழிவுறாத வரத்தினைப் பெற்றான். தேவர்களையும் ஏனைய உயிர்களையும் தன்பலம் கொண்டு வருத்தி வந்தான்.

துன்பத்தைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். தேவர் துயர் தீர்க்க எம்பெருமானும், உமாதேவியும் திருவுளம் கொண்டனர். சோலையில் உலா வரும் போது ஓர் ஓவிய மண்டபத்தை தரிசித்தனர். அம்மண்டபத்தில் சித்தரிக்கப்பட்டிருந்த ஓம் என்னும் பிரணவ மந்திரம் ஆண், பெண் யானைகளாக உமாதேவியாருக்குத் தோன்றி அவை இரண்டும் புணர்ச்சி செய்வதாகத் தெரிந்தது. "பிரணவம்" இவ்வாறு தோன்றுவது ஏன்? என உமை சிவனைக் கேட்க "நீ அன்போடு பார்த்த தன்மையால் பிரணவம் இரு யானைகளாகத் தோன்றியது" எனக் கூறினார். அச்சமயத்தில் யானைகள் இரண்டும் புணர்ச்சி நீங்கின. அப்போது மூன்று கண்களும், கீழ்த்தூங்கும் வாயும், மும்மதமும், யானைமுகமும், இருதந்தங்களும் குறுகிய வடிவமும் பொருந்திய சிறுவன் தோன்றினான். அச்சிறுவனே விநாயகர். விலங்கு, பூதம், மனித, தேவகூட்டத் தொகுப்பாக மனிதனும் மிருகமும் அல்லாத உருவத்தில் தோன்றிய விநாயகர் ஆயுதம் அல்லாத தன் ஒற்றைக் கொம்பினால் எறிந்து கஜமுகனைச் சங்காரம் செய்தார். (கஜமுகன் உற்பத்தி கந்தபுராணம்) இதுவே அவரது தோற்ற வரலாறாகும்.

இறைவனை பூசிக்கும் அன்பர்களுடைய மனம் அவரவர்களுடைய பரிபாகத்திற்கு ஏற்ப பல்வேறு நிலைகளில் இறைவனை பல்வேறு திருவுருவ அமைப்பில் பல்வேறு நாமங்களில் வழிபடுகின்றனர். இதனை மணிவாசகர் திருவாசகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்பதாகும்.

ஓம் என்ற பிரணவப் பொருளின் சொரூபமான விநாயகப் பெருமானையும் வழிபாடு செய்வதற்காக விநாயகப் பெருமானின் 32 மூர்த்தங்களாக போற்றப்படுகின்றார். அவை பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 01. பாலகணபதி | 02. தருணகணபதி | 03. பக்தி கணபதி |
| 04. வீரகணபதி | 05. சக்திகணபதி | 06. துவிஜகணபதி |
| 07. சித்திகணபதி | 08. உச்சிஷ்ட கணபதி | 09. விக்னகணபதி |
| 10. க்ஷிப்ர கணபதி | 11. ஏரம்பகணபதி | 12. லட்சுமி கணபதி |
| 13. மஹாகணபதி | 14. விஜயகணபதி | 15. நிருத்தகணபதி |
| 16. ஊர்த்துவகணபதி | 17. ஏகாட்சரகணபதி | 18. வரககணபதி |
| 19. திரயாசக்ஷ்ர கணபதி | 20. க்ஷிப்ரபிரசாதகணபதி | 21. ஹரித்திராகணபதி |
| 22. ஏகநந்தகணபதி | 23. சிருஷ்டிகணபதி | 24. உத்தண்டகணபதி |
| 25. ரணமோசனகணபதி | 26. துண்டிகணபதி | 27. துவிமுககணபதி |
| 28. மும்முககணபதி | 29. சிங்ககணபதி | 30. யோககணபதி |
| 31. துர்க்காகணபதி | 32. சங்கடஹரகணபதி என்பதேயாகும். | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப்பெருமானின் வாகனம் மூசிகம் (எலி) ஆகும். இதன் தத்துவம் எலி இருளில் தான் சஞ்சரிக்கும். அத்துடன் எலிக்கு வாசனை பிடிக்கும். வாசனை பிடித்துக் கொண்டே எந்தெந்த உணவுப்பொருள் எங்கிருக்கின்றது என கண்டுகொள்ளும். ஆன்மிகத்தில் இருள் என்பது அஞ்ஞானத்தையும், வாசனை என்பது ஆசைகளையும் குறிக்கின்றது. எனவேதான் ஆன்மாக்களின் அஞ்ஞானத்தையும் ஆசைகளையும் கட்டுப்பாட்டில் வைப்பவர் என்பதை உணர்த்தும் முகமாக அவற்றின் உருவமாக விளங்கும் எலியை வாகனமாக கொண்டுள்ளார்.

விநாயகரை வழிபாடு செய்வதற்குரிய அர்ச்சனைப் பூக்களும் பத்திரங்களும் பின்வருமாறு கூறப்படுகிறது. அறுகு, வெள்ளறுகு, வன்னி, வில்வம், நொச்சி, முட்கிழுவை, விளாத்தி, நெல்லி, விஷ்ணுகிராந்தி என்னும் பத்திரங்களும், மந்தாரை, காந்தல், செண்பகம், அத்தி, சாமந்தி, மல்லிகை, செங்குவளை, மகிழ், தாமரை, புன்னை, உமத்தைமுல்குரா, கோங்கு, செவ்வரத்தை, நந்தியாவர்த்தம், வெள்ளெருக்கு, பொன்னொச்சி, றோசா, அலரி முதலிய புஸ்பங்களும் விநாயகருக்குரியனவாகும்.

மோதகம், அப்பம், எள்ளுருண்டை, அவல், நெற்பொரி, கரும்பு, வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், மாதுளம்பழம், கற்கண்டு, வள்ளிக்கிழங்கு, சுத்தான்னம், தயிர்ச்சாதம், பாலன்னம், புளிச்சாதம், சக்கரைச்சாதம், ஆகியன விநாயகருக்கு விசேடமாக நிவேதிக்கும் பொருட்களாகும்.

விநாயகருக்குரிய விரதங்களாவன ஆவணி மாதத்தில் வரும் விநாயகர் சதுர்த்தி விரதம், மாதந்தோறும் வரும் அபரபக்க, பூர்வபக்க சதுர்த்தி, மாசிமாத சங்கடகர சதுர்த்தி, கார்த்திகை நட்சத்திரத்துக்கு அடுத்தநாள் தொடங்கி மார்கழி மாதத்துப் பூர்வபக்கச் சஷ்டிவரை அனுட்டிக்கும் விநாயகசஷ்டி விரதம், வெள்ளிக்கிழமை விரதம் என்பன ஆகும்.

கணபதி வழிபாடு இந்தியா, இலங்கை, மட்டுமன்றி திபெத்து, பர்மா, யாவா, இந்தோனேசியா, ஜப்பான், சீனா முதலிய பிறநாட்டு மக்களிடத்திலும் சமணர்கள், பௌத்தர்கள் முதலிய பிறசமயத்தவர்கள் மத்தியிலும் காணப்படுகிறது. விநாயகரை ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், மரங்களுக்குக் கீழும் ஆலயங்களிலும் வைத்து வழிபடும் வழக்கம் உண்டு. எனவே ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் கண்டு எல்லாம் வல்ல பெரும்பரப்பு விநாயகரின் திருவருள் பெறுவோமாக.


சுபம்.

இலக்கியத் தமிழருவி, செஞ்சொற் செம்மல்,
**திரு. இரா. கேதீசன் அவர்கள்,**
ஆன்மிக சொற்பொழிவாளர்,
ஆதிமயிலிட்டி,
காங்கேசன்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய கட்டுமான நிர்மாணத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டிட நிர்மாணத்தை வழிநடத்திய ஆன்மிக தலைவர், குருமார்கள், சோதிட நிபுணர்கள் மற்றும் சிற்ப சாஸ்திரிகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரும் அறுகம்புல்லும்

அறுகு ஒரு இடத்தில் முளைத்து ஆறு இடங்களுக்கு வேரோடி பரவும் தன்மையை உடையது. "ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரோடி" என்ற பழமொழி இதனால்தான் வந்தது எண்ண வைக்கிறது. மூலாதாரத்தில் இருக்கும் விநாயகரை அறுகு கொண்டு பூசை செய்யும்போது அறுகைப்போல் ஆறு ஆதாரங்களிலும் (ஆறு சக்கரங்களிலும்) ஊடுருவி நம்மைக் காப்பார் என்பதற்காகவே விநாயகரை அறுகம்புல் சாத்தி வழிபடுகின்றோம்.

**அறுகம்புல்லின் மருத்துவ குணங்கள்**

அறுகம்புல்லின் வேர், இலை உட்பட அனைத்துப் பாகமும் மருத்துவ குணம் உடையவை. அறுகம் புல்லின் மகிமையாவன

01. புற்று நோய்க்கு எதிரானது.
02. சர்க்கரை நோயைச் சீர் செய்யவல்லது.
03. வயிற்றுப்போக்கைக் குணப்படுத்தவல்லது.
04. குமட்டல், வாந்தி இவற்றை தணிக்கக்கூடியது.
05. நுண்கிருமிகளைத் தடுக்கவல்லது.
06. உற்சாகத்தைத் தரவல்லது.
07. மூட்டுவலிகளைத் தணிக்கக்கூடியது.
08. கிருமித்தொற்றினைத் தடுக்கவல்லது.
09. ஆஸ்துமாவைக் குணப்படுத்த கூடியது.
10. தீப்புண்களைக் குணப்படுத்த வல்லது.
11. கருத்தடைக்கு உகந்தது.
12. குளிர்ச்சி தரவல்லது.
13. சிறுநீரைப் பெருக்கவல்லது.
14. நெஞ்சுச்சளியைப் போக்கக்கூடியது.
15. இரத்தத்தை உறையவைக்கும் தன்மை உடையது.
16. மலத்தை இளக்கக் கூடியது.
17. கண்களுக்கு மருந்தாவது.
18. உடலுக்கு உரமாவது.
19. காயங்களை ஆற்றவல்லது.
20. இதயக் கோளாறுகளைப் போக்கக்கூடியது.
21. வயிற்றில் உள்ள பூச்சிகளை வெளியேற்றவல்லது.
22. ஞாபக சக்தியைப் பெருக்கவல்லது.
23. வாய்த் துர்நாற்றத்தைப் போக்கவல்லது.
24. சிறுநீரில் இரத்தம் வெளியேறுவதைக் குணப்படுத்தும் தன்மை கொண்டது.

**அறுகம்புல்லின் சிறப்பு**

இது எல்லாவிதமான மண்ணிலும் வளரும். இந்த அறுகு வேர் முடிச்சுகள் மூலமாகவும் விதைகள் மூலமாகவும் இனவிருத்தி செய்கிறது. இந்தப்புல் உள்ள நிலம் மண் அரிப்பில் இருந்தும் வெப்பத்திலிருந்தும் காக்கப்படுகிறது. அதனால் நெல் விதைக்கும்போது இப்புல்லால் வரம்பு அமைக்கப்படுகிறது. மங்கள நிகழ்ச்சிகளில் சாணத்தில் பிள்ளையார் பிடித்து அதில் அறுகம்புல் சொருகி வைக்கப்படுகின்றது. புல் சொருகப்பட்ட சாணகம் காயும் வரை புழு, பூச்சிகள் உருவாகுவதில்லை. புல் வகைகளில் அறுகம்புல்லை தலைவர் என்றே கூறுவார்கள்.

**திருமதி. தர்சனன் சிவகரனி,**
யாழ் பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியர் - டிப்ளோமா,
அராலி தெற்கு அராலி,
மயிலிட்டி கிராமக்கோட்டடி- சின்னத்தம்பி குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக வழிபாடும் விநாயக விரதங்களும்

இந்துக்கள் எக்காரியத்தை தொடங்குவதற்கு முன் விநாயகரை நினைத்து சாணத்தினால் பிள்ளையார் பிடித்து அறுகம்புல்லை அதன்மீது குற்றி வைத்தே ஆரம்பிப்பது வழக்கம். இதனை பழங்காலம் முதல் இன்றுவரை பின்பற்றி வருகின்றனர். விநாயகரை உள்ளன்போடு வணங்குபவர்களின் வெம்மையான வினைகள் வேரோடு களையப்படுகின்றன. அவர்களுக்கு வருகின்ற விக்கினங்கள் வில்லங்கங்கள் இடர்கள் இடையூறுகள் அனைத்தும் முற்றாக நீங்குகின்றன. விநாயகரை விரும்பி இடைவிடாது வழிபாடு செய்து வருபவர்க்கு மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயல்தூய்மை ஆகிய திரிகரண சுத்தி கிட்டுகின்றது. அதன் காரணமாக எடுத்த காரியங்கள் அனைத்தும் சிரமமின்றி சித்திக்கின்றன. திருவும் கல்வியும் சீரான வாழ்வும் அவர்களுக்குத் தழைத்து ஓங்குகின்றன.

நினைத்த காரியங்களோ, எடுத்த கருமங்களோ தடையின்றி அடையப்பெறுவதற்கு விநாயகரின் திருவருள் இன்றியமையாதது என்பதை உணர்ந்தபடியால்தான் எக்கருமத்தையும் எச்செயற்பாட்டையும் தொடங்கும்போது முதலில் விநாயகரை நினைத்து வணங்கி வழிபட்டு ஆரம்பிக்கும் மரபு இந்துக்களிடம் தொன்று தொட்டு இருந்து வந்தது. இன்று சில விஷ்ணு ஆலயங்களில் கூட விநாயகர்க்கு பூசை செய்த பின் விஷ்ணுவிற்கு பூசை நடைபெறுவதைக் காண்கிறோம். இதே போல் சிவன் ஆலயம், அம்மன் ஆலயம், முருகன் ஆலயம், என்பவற்றிலும் விநாயகர்க்கு பூசை செய்தபின்தான் பூசைகள் நடைபெறுகின்றன.

ஓம் எனும் பிரணவ மந்திரம், மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் மூலமாகவும் ஆதியாகவும் அமைந்துள்ளது. ஓம் எனும் வடிவமாகவும் பிரணவப் பொருளாகவும் விநாயகர் விளங்குகின்றார். பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் எனப் பழந்தமிழ் நீதிநூல் வெற்றிவேற்கை கூறுகின்றது. விநாயக வழிபாட்டிற்கு சான்றாக பெரியநகரம் சரி, கிராமம் சரி, விநாயகர் ஆலயம் அமைந்த இடமாக இருக்கின்றது. விநாயகருக்கு சிறந்த விரதமாக மாதந்தோறும் வளர்பிறையில் வரும் சதுர்த்தி விரதத்தினை இந்துக்கள் அனுட்டித்து வருகின்றனர். இதனை முதன் முதலில் அனுட்டிக்க தொடங்குவோர் ஆவணி மாதத்தில் தொடங்குவது சிறப்பாகும். நமக்கு வரும் சங்கடங்களைப் போக்கும் விக்கினேஸ்வரனை நினைந்து ஒவ்வொரு மாதமும் வரும் தேய்பிறைச் சதுர்த்தியில் அனுட்டிக்கப்படுவது சங்கடஹரசதுர்த்தி. இந்த விரதத்தை அனுட்டிக்கும் நாளில் இரவில் சதுர்த்தி திதி இருக்கவேண்டும். மாசிமாதம் தேய்பிறையும் செவ்வாய்க்கிழமையும் இருக்கும் ஒருநாளில் இந்த விரதத்தைத் தொடங்க வேண்டும். இலங்கையில் வளர்பிறைச் சதுர்த்தி விரதத்தையே பெரும்பாலானவர்கள் அனுட்டித்து வருவதோடு விநாயகர் ஆலயங்களில் அபிசேகம் செய்தும் விசேட பூசையோடு உற்சவமூர்த்தி வீதியுலாவரும் காட்சியும் நடைபெறுகின்றன. சில ஆலயங்களில் சங்கடசதுர்த்தி விரதத்தை முன்னிட்டு மூலமூர்த்தி விநாயகர்க்கு அபிசேகம் நடைபெற்று விசேட பூசையும் நடைபெறுகின்றன.

கேதாரகௌரி விரதத்தை மக்கள் பெருமளவில் அனுட்டிப்பர். ஆனால் விநாயகர் சஷ்டி விரதத்தை அனுஷ்டிப்போர் சிலரே. கார்த்திகை மாதத்துக் கிருஷ்ண பட்ஷ பிரதமை முதல் மார்கழி மாதத்து சுக்கில பட்ச சஷ்டியீறாக உள்ள இருபத்தொரு நாட்கள் இவ்விரதம் அனுட்டிப்பது முறையாகும். இவ்விரதம் அனுட்டிக்கும் போது ஆண்கள் இருபத்தோரிழையோடு கூடிய காப்பை வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிய வண்ணம் முதல் இருபது நாட்களும் ஒருபொழுதுண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிநாளில் உபவாசம் இருத்தல் வேண்டும். வித்தியுன்மாலி என்னும் ஓர் அரசன் இதனை அனுட்டித்து வச்சிரயாக்கை பெற்றுத் திலோத்தமையை மணந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான். இருபத்தொரு நாட்களும் விநாயகர் ஆலயம் சென்று வழிபட்டு விநாயகர் புராணத்தை கேட்டும் படித்தும் பிள்ளையார் கதை படித்தும் கேட்டும் விநாயக கவசம் அகவல் போன்றவற்றைப் படித்தும் விநாயக சஷ்டி விரதத்தை அனுட்டித்தால் வாழ்வில் நல்ல பயனை அடையலாம். விநாயகருக்கு என்று பல விரதங்கள் உண்டு. எவ்விரதம் என்றாலும் மனத்தூய்மையுடனும் நம்பிக்கையுடனும் அனுட்டித்தால் நன்மைகளைப் பெறலாம் என்பது முன்னோர் காட்டிய வழிகளாகும். அதனை யாவரும் பின்பற்றி நற்பலன்களைப் பெறுவோமாக.

**க. சிவசங்கரநாதன்,**
பரிபாலன சபைத் தலைவர்,
சரசாலை நுணுவில் சிதம்பரவிநாயகர் ஆலயம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மேன்மைகொள் சைவநீதி"

திருச்சிற்றம்பலம்
"துன்பம் இன்றி துயர் இன்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவன் என்று உள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே"
திருச்சிற்றம்பலம்

உலகின் தொன்மையான சமயம் சைவசமயம். ஆன்மாக்களின் பிறவித்துன்பத்தைக் களைந்து அவை ஈடேறுவதற்கு வழிகாட்டுவது. அதாவது மண்ணில் நல்லவண்ணம் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டுவது எமது சமயம். மேன்மைகொள் சைவநீதி உலகில் நிலைபெறுமானால் மாதம் மும்மாரி மழை பொழியும்; வளம் சுரக்கும்; செங்கோலாட்சி நிலவும்; குடிமக்கள் ஒரு குறையுமின்றி வாழ்வர்; அறம் பெருகும்; ஆலயங்களில் வழிபாடு வேள்வி சிறக்கும் என்பது உண்மை.

கந்தபுராண கலாசாரத்தின்வழி ஒழுகிய சமுதாயம் இன்று மேய்ப்பனில்லாத மந்தை போன்று திசை தடுமாறி, ஆன்மிக வழி துறந்து, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழத்தலைப்பட்டுள்ளது. பொய், களவு, கொலை, வஞ்சம், பொறாமை எனும் தீயகுணங்கள் சமுதாயத்தில் மேலோங்கிச் செல்கிறது. கட்டுக்கோப்புடனும் சைவநீதியின் பிரகாரமும் வாழ்ந்த வாழ்க்கை பொய்யாய் பழங்கதையாய்ப் போய்விடுமோ என்ற அச்சம் எழுகிறது.

எத்தனையோ மைல்களுக்கப்பாலிருந்து வந்த கிறிஸ்தவப் பாதிரிமார் ஈழநாட்டின் மக்களை கிறிஸ்தவ சமயத்துக்கு மதமாற்ற எடுத்த உத்திகளை சைவ உலகு மறவாது. அதேசமயம் எமது சமயத்தின் காவலனாக ஒரே ஆளுமையாக உதித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆற்றிய அரும்பெரும் பணிகளையும் சைவ உலகு இன்றுவரை நன்றியுடன் நினைவு கூர்கின்றது. வரலாறு நமக்குக் கற்றுத்தந்த படிப்பினைகளை நாம் மறந்துவிடக்கூடாது. சிவபூமி என்று போற்றப்பட்ட எமது மண்ணில் இன்று எமது அடையாளம், கலாசாரம், பண்பாடு கண்முன்னே சீரழிவது கண்டும் கையாலாகாதவர்களாகத் தலைகுனிந்து நிற்கின்றோம்.

**பெறுதற்கு அரிய பிறவியைப் பெற்றும்**
**பெறுதற்கு அரிய பிரானடி பேணார்**
**பெறுதற்கு அரிய பிராணிகள் எல்லாம்**
**பெறுதற்கு அரிய பேறு இழந்தாரே** - திருமந்திரம்

பல்லவராட்சிக் காலத்தில் அவைதீக சமயங்களின் எழுச்சி கண்டு சைவ சமயத்திற்குப் புத்துயிரளித்தவர்கள் எமது சமயகுரவர்கள். ஊர்தொறும் சென்று பதிகங்கள் பாடியும் மூடிக்கிடந்த ஆலயங்களை மீளத்திறந்து வழிபட்டும், மக்கள் பணிபுரிந்தும் கலைகளுக்குப் புத்துயிரளித்தும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தை, அவனருளால் அவன் தாள் வணங்கும் பேற்றை மக்களுக்கு உணர்த்தினார்கள். இறை புகழ்பாடி, சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் சிவபுரத்துள் செல்வர் என்ற உண்மையை உரைத்தனர். மாபெரும் எழுச்சி மக்கள் மத்தியில் உண்டானது; சைவநெறி மீளத் தலையெடுத்தது; சைவ நீதி எங்கும் பரவிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல எண்ணங்கள் நற்செயல்களை உரைத்து நிற்பதே சைவநீதி. சமுதாயத்தில் சட்டத்தின் வலிமையை விட சைவநீதியின் வலிமை பெரிது. சட்டம் ஆற்றத்தவறுகின்ற அல்லது பார்க்க மறுக்கின்ற தனிமனித மனவளம் சைவநீதியினால் மட்டுமே வளர்த்தெடுக்கப்பட முடியும். இன்று நாம் சைவநீதியை மறந்து வாழத்தலைப்பட்டு விட்டோம்.

எண்ணும் எண்ணங்களும் செய்யும் செயல்களும் இறை நம்பிக்கையின் அடிப்படையில் நிகழவேண்டும். ஒருவனின் எண்ணங்களில் தவறு இருந்தால் அது அவனை மட்டுமன்றி முழுச் சமுதாயத்தையும் கெடுக்கும். எண்ணம்போல் வாழ்வு, உள்ளத்தனையது உயர்வு என்று சொல்வார்கள்.

**'இன்பமும் துன்பமும் நாட்டாரிடத்து உள**
**நன்செய் புன்செயலால் அந்த நாட்டிற்காம்**
**என்ப இறைநாடி நாள் தொறும் நாட்டினில்**
**மன்பதை செப்பம் செயின் வையம் வாழுமே'**

என்கிறது திருமந்திரம். ஒரு நாட்டில் இன்பமும் துன்பமும் விளைவது அந்நாட்டிலுள்ள மக்களின் நல்ல செயல், அற்ப செயலால் தான். எனவே நம் எல்லோரதும் நல் எண்ணங்கள் நம்மையும் பிறரையும் வாழ்விக்கும் என்பதில் சந்தேகமில்லை. சைவ நீதியின் மேன்மையை வேதம், ஆகமம், தேவாரம் முதலான திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள். புராண இதிகாசங்கள் முதலான நூல்கள் எடுத்துரைக்கின்றன.

**ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு சீலம்**
**வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை**
**அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவோடு அர்ச்சித்தல் ஆதி**
**இழுக்கிலா அறங்களானால் இரங்குவான் பணியறங்கள்.**

- சிவஞான சித்தியார்

**ஒழுக்கம்**

உயிரினும் மேலாக ஓம்பப்பட வேண்டியது ஒழுக்கம் என்பார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். நல்லெண்ணங்கள், தீயெண்ணங்களுள் எவற்றை நாம் வரித்துக்கொள்கிறோமோ அவற்றுக்கேற்பவே எமது ஒழுக்கம் அமையும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் களைந்து மனத்துக்கண் மாசிலனாவதற்குப் பற்றுக் கோடாயிருப்பது கடவுள் வழிபாடு ஒன்றே. அதேவேளை கடவுளை வழிபடுவதற்கும் ஒழுக்கமே பிரதானமானது. கடவுள் வழிபாடு எமது மனங்களை இளகச் செய்து, அன்புடன் கூடிய இரக்க குணத்தை மேலோங்கச் செய்கிறது. நற்பண்புகளால் மனது பக்குவமடைகிறது. கடவுள் நம்பிக்கை மேலெழும்போது தீய நடத்தைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. நற்பண்பு நிறைந்தவர்களுடன் கலந்துறவாடுவது நல்லொழுக்கத்துக்கு வழிகாட்டுகின்றது.

**அன்பும் அருளும்**

"எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

என்று இரங்குகிறார் தாயுமான சுவாமிகள். சைவநீதி அன்பில் விளைந்தது. பிறர் துன்பம் துடைப்பதில் முன்நிற்பது. அகத்தில் அன்பு, தூய்மை இன்றி நாமாற்றும் கருமங்கள், வழிபாடுகள் பயனற்றவை. கடவுள்மீது அன்பு செலுத்தி இறைநம்பிக்கையோடு வாழ்பவர்கள் எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டொழுகுவர். "அன்பே சிவம்" என்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரம். தொடர்புடையாரித்து அன்பு கொள்வது மட்டுமன்றி, தொடர்பில்லாதரிடத்தும் அன்பு கொண்டொழுகும் அருள் நிலை மேலானது என்கிறது சைவ சமயம். அன்பெனும் ஊற்று அருளாகப் பொங்கிப் பிரவாகிக்கும்போது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் உலக மனப்பாங்கு விரிவடைகின்றது; சுயநலமற்றுப் போகிறது; பாவச் செயல்கள் தடுக்கப்படுகின்றன; உயிர்களை வருத்தாத பக்குவநிலை ஏற்படுகின்றது; பொறாமை ஒழிகின்றது; பொல்லாங்கு சொல்லும் பழக்கம் காணாமல் போகிறது; பொய் களவு மறைகிறது; பிறர் மனதை வருத்தும் குணம் அற்றுப் போகிறது.

**ஆசாரமும் உபசாரமும்**

அகத்தில் அன்பு, தூய்மை இன்றி நாமாற்றும் பூசை வழிபாடு பயனற்றதென்பதை சமய குரவர்கள் தெளிவுறுத்தியுள்ளார்கள்.

**நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்**
**பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு**
**நக்கு நிற்பரவர் தமை நாணியே**

அப்பர் சுவாமிகளால் அருளப்பட்ட இத்தேவாரம் அக ஆசாரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. சைவ நீதி, அக ஆசாரம், புற ஆசாரம் என்னும் இரு நிலைகளை உரைக்கின்றது. அக ஆசாரம் உள்ளத்தோடு சம்பந்தமுடையது. புற ஆசாரம் உடலோடு தொடர்புடையது. புலாலுண்ணாமை. முறைப்படி பூசித்தல். வீடு. சூழலைத் தூய்மையாக வைத்திருத்தல், உடலைத் தூய்மையாக வைத்திருத்தல், முதலானவை புற ஆசாரங்கள் நல்ல எண்ணங்களோடும் நன்னடத்தையோடும் வாழ்தல், இறைபக்தியுடன் வாழ்தல் முதலானவை அக ஆசாரம், அக ஆசாரமின்றிப் புற ஆசாரத்தால் எவ்வித பயனுமில்லை என்பது தெளிவு.

**'வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'**

எனும் விபுலாந்த அடிகளாருடைய பாடல் வரிகளும் இவ்வுண்மையை உரைத்துள்ளது.

உபசாரம் என்பது தக்கோரை உபசரித்தல் ஆகும். அஞ்ஞானம் அகற்றி மெய்ஞ்ஞானத்தை உணர்த்தும் குரு முதலானோரைத் தக்க மரியாதைகளுடன் உபசரித்தல் சைவசமயியின் கடனாகும். பலனெதையும் எதிர்பாராமல் சமூகத்தின் மேன்மைக்கு நற்காரியங்களையாற்றும் மேலான பண்புடையோரை உபசரித்து மகிழ்வதால் எமது மனம் பண்படும். அப்பெரியார்களின் நல்வாக்கு எம்மை நல்வழியில் செலுத்தும்.

**உறவும் சீலமும்**

யாவரிடத்தும் கலந்துறவாடும் இனிய பண்பு வாய்க்கப் பெற வேண்டும். தன்னைத்தான் காதலிப்பதோடு தன்னைச் சூழ்ந்திருப்பவர்கள் மீதும் அன்புறவு கொண்டு வாழ வேண்டும். தன்னலம் துறந்து பொதுநலம் பூணும் ஒருவனிடத்தில் நற்குணங்கள் மேலோங்கியிருக்க வேண்டும். நான் எனும் ஆணவ முனைப்பு மேலோங்கி விடாத வண்ணம் நற்காரியங்களைச் செய்வதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்.

மனவளம் சிறக்கும்போது ஏற்றத்தாழ்வு, இன, மொழி, சாதிபேதங்கடந்த சகோதரத்துவ நிலையில் ஐக்கியம் பிறக்கும்; அமைதியுண்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தவம்**

ஐம்பொறியடக்கம், விரதங்காத்தல் முதலான வழுவுதலற்ற தவமுடைமையை சைவநீதி எடுத்துரைக்கின்றது. உலகின் போகங்கள் யாவற்றையும் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளாலும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலன்கள் உணர்ந்து உள்வாங்குகின்றன. நல்லவற்றைப் பேசுவதற்கும் நம்மைப் பழக்கப்படுத்திக் வேண்டும். அப்பர் சுவாமிகளின் "திருவங்கமாலை" திருப்பதிகத்தை நாம் ஓதுவது மிகச்சிறந்த பயிற்சியாக அமையும். இறை சிந்தனையை வளர்ப்பதற்கும் விரதங்கள் களமாய் அமைகின்றன. இதனால் மனமும் வாக்கும் விரத நாட்களில் பக்குவப்படுகின்றன. தியானம், திருமறைகளைப் பாராயணம் பண்ணுதல். தானதருமங்கள் செய்தல் என்று வாழும் தவ வாழ்வு சைவ வாழ்வாகின்றது.

**தானம்**

தான தருமம் செய்தல் அறம்மென்று சைவநீதி உரைத்துள்ளது. எதுவித பிரதிபலனும் எதிர்பாராது மனம் உவந்து செய்யும் தானம் உரியவர்களுக்கு உரியமுறையில் செய்யப்பட வேண்டும்.

"ஆற்றுநர்க்களிப்போர் அறவிலை பகர்வோர்" பொருள் உள்ளவர்களுக்கு ஈவது அறத்தினை விலை பேசி விற்பதற்கு சமன் என்கிறது மணிமேகலை. தானங்களுட் சிறந்தது அன்னதானம், இதனாலேயே "உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோர்" எனப்படுகின்றது. மாகேஸ்வர பூசை இதன் சிறப்பை உணர்த்தும். ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பார்கள். அவர்கள் பசியாற்றிட அன்னதானம் உதவுகிறது.

**'படமாடக் கோயில் பவற்கு ஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாக் கோயில் பகவற்கு அது ஆமே'**

என்ற திருமந்திரப் பாடல் அல்லற்பட்டவர்களுக்குச் செய்யும் தானம் இறைவனைச் சேரும் என்பதை விளக்குகிறது.

**வந்தித்தல், வணங்கல்**

மாதா, பிதா குரு முதலான பெரியவர்களுக்குப் பணி செய்தலும் அவர்களை வணங்குதலும் இறை வழிபாட்டுக்கு ஒப்பானது. பெற்றவர்களை மதிக்காமல் உதாசீனம் செய்து வாழ்வர்கள், ஆலயங்களில் நிகழ்த்தும் பூசை வழிபாடு இறைவனுக்கு உகந்தவை ஆகா. கௌசிக முனிவரின் கதை இதற்குச் சிறந்த உதாரணம்.

**வாய்மை**

பொய்மையிலிருந்து விலகி மெய்மையைக் காண்பதே சைவ வாழ்க்கை "சத்யம்வத" "சத்யம் மேவ ஜயதே" ஆகிய வேத, உபநிடத மகா வாக்கியங்கள் வாய்மையின் உயர்வைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

**'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்'** என்றும்

**'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தோடு**
**தானம் செய்வாரின் தலை'**

என்றும் வாய்மையின் சிறப்பினை வள்ளுவர் மொழிந்துள்ளார். ஒருவரது நல்லொழுக்கத்துக்கு அடிப்படையானது வாய்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறவு, அடக்கம்**

துறவு என்பதற்கு குற்றத்தின் நீங்கிய வைராக்கியம் என்று கூறுகிறார் சிவஞான சித்தியாருக்கு உரை எழுதிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள். அதாவது பிறர் மனைவியரை விரும்புதல் முதலான தீய காமவழி நீங்கிய வைராக்கியம் என்பதே அதன் பொருள். அடக்கம் என்பது மனம் தீய நெறியில் செல்லாது அடங்குதல். இதிலிருந்து துறவு என்பது யாவர்க்கும் பொதுவான கோலம் என்பது தெளிவு. அடக்கம் அமரருள் உய்க்கும் தகையது! "உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்" என்று நாம் உணர்ந்தால் அங்கு இயல்பாகவே துறவு நிலை பிறந்துவிடும்.

**அறிவு**

உண்மைப் பொருளாகிய இறைவனை உணர்தலே அறிவு. தக்கன தகாதவற்றைப் பகுத்தறிவதற்கு சமய நூல்கள் வழிகாட்டிகளாக உள்ளன.

**'தக்கது இன்ன தாகாதன இன்னதென்று**
**ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள மக்களும் விலங்கே'**

என்று பாடியுள்ளார் கம்பர். தக்கவற்றைச் சிந்தித்து பண்பாட்டோடு ஒழுகுபவன் உண்மைச் சமயியாக விளங்குவான்.

**அர்ச்சித்தல்**

பெரியோர்களை பூசித்தல். அதாவது நம்மை நல்வழிப்படுத்தும் மூத்தவர்களை நாளும் போற்றி, அவர்வழி நடக்க வேண்டும்.

மேலே கூறிய குற்றமற்ற தருமங்கள் ஒருவனிடத்து விளங்குமானால் அவன் செய்யும் கடவுள் வழிபாடு அறமாக அமையும் என்று சிவஞான சித்தியார் விளக்கி நிற்கின்றது. இதிலிருந்து நாம் ஓர் உண்மையைப்புரிந்து கொள்ள வேண்டும். கடவுள் வழிபாடு அல்லது ஆலய வழிபாடு என்பது சைவநீதியின் பிரகாரம் ஒழுகுபவனால் ஆற்றப்படும்போதுதான் அது இறைவனுக்கு உகந்ததாக, பலன்மிக்கதாக அமையும்.

இன்று ஊரெங்கும், நாடெங்கும் உலகெங்கும் பரந்து வாழும் சைவசமயத்தவர்கள் தாம் வழிபாடும் பொருட்டு ஆலயங்களை அமைத்தும் அவற்றைப் பராமரித்தும் வருவது அருமையான செயல். ஆயின் நீதி நெறிமுறைகள் பற்றிய கரிசனை, அவற்றை அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்கும் செயல்முறை குறித்த சிரத்தை அதிகம் இல்லாமல் இருப்பது பெருங்குறையாகவே கணிக்கப்படுகின்றது.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழி முக்கியத்துவம் வாய்ந்தது. கோயிற்பண்பாடு எமது சமயத்தின் அடையாளம். "ஆலயம் தானும் அரண் எனத்தொழுமே "மனதில் அமைதி, இன்பம் ஊறுவதற்கு கோயில்கள் களமாயுள்ளன. மக்கள் வாழ்வியலோடு இவை பின்னிப்பிணைந்தவை. இதனாலேயே சமயப்பெரியார்கள் யாவரும் ஆலயங்கள் அறச்சாலைகளாக விளங்கவேண்டுமென்று தொன்றுதொட்டுக் கூறிவந்தார்கள். சமயம் வேறு, சமூகம் வேறு என்று பிரித்தறியாத வண்ணம் சமய வாழ்வு சமூக வாழ்வுக்கு உறுதுணையாக அமைய வேண்டும். மக்கள் துன்பத்தில் உழலும்போது ஆலயங்களில் இடம்பெறும் பகட்டான விழாக்கள் இறைவனுக்கு உவப்பானவையாக ஒருபோதும் அமையா.

அன்பினில் விளைந்த சைவநீதி தான்மட்டுமன்றிப் பிறரையும் வாழவழி காட்டும். அதனாலேயே வழிபாட்டிடங்களும் சமூகத்தோடு இரண்டறக் கலந்து அறப்பணி புரியும் அறச்சாலைகளாக வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வழிபாட்டிடங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் உரிமை கொண்டாடும் போக்கும் வணிக நிலையங்களாக அவற்றை நடத்தும் மனப்பாங்கும் ஒழிய வேண்டும்.

இருபத்தோராம் நூற்றாண்டில் மேன்மைகொள் சைவநீதி உலகெல்லாம் விளங்கும் வண்ணம் சொல்லாலும் செயலாலும் பணியாற்றியவர் தெய்வத்திருமகள் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். ஆலயம் என்பது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கு முன்னுதாரணம் காட்டியவர். சாத்தியமற்றவை என்று பலராலும் விமர்சிக்கப்பட்ட சமூகச் செயற்பாடுகள் பலவற்றைச் செயற்படத்திக்காட்டிய செயல்வீரர். அறம் சார்ந்த சமூகப்பணிகள் பலவற்றை ஆலயத்தினால் முன்னெடுக்க முடியும் என்பதை நிகழ்த்திக் காட்டியவர். ஆலயத்தை மக்களை நோக்கி நகர்த்தினார். மக்கள் ஆலயத்திற்குத் திரண்டனர். சமயச் சொற்பொழிவுகள், புராணபடனங்கள், கதாப்பிரசங்கங்கள் மூலம் மக்கள் மனதைப் பண்படுத்தினார்.

ஆலயங்களில் பூசை வழிபாடுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் சமூகத்தேவைகளுள் ஒருசிலவற்றையாவது நிவர்த்திப்பதற்கும் அளிக்க வேண்டும். ஒரு ஆலயத்தின் சிறப்பு என்பது அதன் சூழலில் வாழும் சமூகத்தின் உயர்ச்சியில், மகிழ்ச்சியில் தங்கியிருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

இன்று இளைய சமுதாயத்தினர்மத்தியில் ஆன்மிகம் தொடர்பான சிரத்தை குன்றி வருவதை அவதானிக்கும்போது ஆலயங்களும் சமய நிறுவனங்களும் ஆக்க பூர்வமான செயற்றிட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்த வேண்டியதன் கட்டாயத்தில் உள்ளன என்பதை மறுக்கமுடியாது. சமய நம்பிக்கை சைவநீதியின் அடித்தளத்திலிருந்து பிறக்கும்போது அங்கு சுயநலம் மறந்து பொதுநலநாட்டம் மேலோங்கும் என்பது திண்ணம். எனவேதான் மனதைப் பக்குவப்படுத்தும் பயிற்சிகள் இன்றைய காலத்தின் தேவையாக உள்ளன. சட்டங்களினால் சீர்த்திருத்த முடியாதவற்றை சைவநீதி சீர்திருத்தியமைக்கும். இன்று ஆலயங்கள் பல சட்டத்தின் முன் நீதிகேட்டு நிற்பது எந்த வகையில் நியாயம் என்று தெரியவில்லை. பண்பாட்டை வளர்த்தெடுக்கவேண்டிய ஆலயங்கள் பலவற்றில் பண்பாடே ஆட்டங் கண்டுள்ளமை வருத்தத்திற்குரியது. இது ஆரோக்கியமான விடயமல்ல. சமூகப்பொறுப்புணர்ச்சியுடன் சமுதாயத்தை வழிநடத்த வேண்டிய ஆலயங்களை நீதிமன்றுக்கு முன் நிறுத்தினால் மக்கள் மத்தியில் அவநம்பிக்கை பிறப்பது இயல்பே. இதனால் ஆலயங்களுடன் சம்பந்தமுடையவர்கள், நிர்வாகிகள் தமது சமூகப்பொறுப்புணர்ந்து செயற்படும்போது மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் பரந்து விளங்கும்.

**திருமதி. வானதி காண்டீபன்.**
முன்னைனாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவனம்.

திருச்சிற்றம்பலம்

**வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்**
**தப்பாமற் சார்வார் தமக்கு**

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பார்வையில் ஆன்மிகம் 2022

எமது ஆதிமயிலிட்டி கிராமத்து மக்களின் குலதெய்வமாக விளங்கும் பெரும்பரப்பு பிள்ளையாரின் கும்பாபிசேக சிறப்பு மலரில் எமது மண்ணில் இன்றைய நாட்களில் சிறியேன் அவதானித்த சில விடயங்களைத் தொகுக்கலாம் என்று நினைக்கிறேன். இங்கு யாரையும் குற்றம் சுமத்துவதோ, குறை காண்பதோ நோக்கமல்ல. கந்தபுராண கலாச்சாரத்தை கொண்ட எமது மண்ணின் ஆன்மிக பலத்தை மீள அதிகப்படுத்த வேண்டும் என்பதே எனது பணிவான விண்ணப்பம்.

ஈழ நிலப்பரப்பெங்கும் சமகாலத்தில் ஆலயங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது. ஆனால் அதேநேரத்தில் ஆன்மிகத்தில் நாட்டம் உள்ளவர்களின் சதவீதத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பசியே இல்லாத ஊரில் அதிகரிக்கும் உணவகங்களால் பயன் இல்லை. படிப்பறிவே இல்லாத இடத்தில் நூறு நூலகங்கள் இருந்தும் பயனில்லை. அது போலத்தான் பக்தி என்பது உள் மனதில் எள்ளளவும் இல்லாமல் ஆலயங்கள் ஆயிரம் அமைத்தும் என்ன பயன்?

பக்தி என்பது பகல் வேசமாக மாறிக் கொண்டிருக்கிறதென்பதே கசப்பான உண்மை. உணர்வு பூர்வமாக இறைவனுக்கு செய்கிறோம் என்கிற நிலை மாறி ஏட்டிக்கு போட்டியாக திருவிழாக்கள் செய்கின்ற நிலை அதிகரித்து வருகிறது. விரலுக்கேற்றது போலத்தான் வீக்கம் இருக்க வேண்டும் என்பதை மறத்தலாகாது.

பல்லவ அரசன் பல லட்சம் செலவழித்து, தலைசிறந்த கலைஞர்களைக் கொண்டு கலைநயம் ததும்ப பார்த்து பார்த்து ஒரு கோயிலை கட்டுகிறான். அதே நேரத்தில் பூசலார் என்கிற ஒரு ஏழை பக்தன் எந்தவித செலவுமின்றி தன் பக்தியின் அதியுச்ச வெளிப்பாட்டால் தன் கற்பனைகளையும் எண்ணங்களையும் இறை பக்தியையும் ஒன்றாக்கி உள்ளத்திலேயே ஒரு கோயிலை கட்டிக்கொண்டு இருக்கிறார். இரண்டு ஆலயங்களுக்கும் ஒரே நாளில் ஒரே சுப முகூர்த்தத்தில் கும்பாபிசேகம் செய்ய முடிவு செய்யப்படுகிறது. வேதாகங்களும் மங்கல வாத்தியங்களும் ஒலிக்க, யாகங்களும் சடங்குகளும் நடக்க, அந்தண சிரேஷ்டர்களும் அயல் தேசங்களின் அரசர்களும் அணிதிரள, அலைகடலென திரளும் மக்கள் வெள்ளத்தின் அரோகரா முழக்கத்துடன் அரசன் கோயில் கும்பாபிஷேகம் நடத்த முனைந்தவேளை, கண்களை மூடி தியானத்தில் இருந்த பூசலாரின் உள்ளத்தில் எண்ணங்களின் விம்பமாக மிக மிக எளிமையாக அவரது ஆலய கும்பாபிஷேகமும் நடத்த ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். இரு கும்பாபிசேக நிகழ்வுகள். ஒரே இறைவன். எங்கே சென்றிருப்பார் கடவுள்?

அரசனின் ஆலயத்தில் நைவேத்தியங்கள் அதிகம், அலங்காரங்கள் அதிகம், அபிஷேகங்கள் அதிகம், பக்தர்களும் அதிகம். ஆனால் ஆண்டவன் அங்கே செல்லவில்லை. மன்னனின் கனவில் கும்பாபிஷேக திகதியை மாற்றுமாறு கூறிவிட்டு எங்கே அன்பு அதிகமோ? எங்கே பக்தி அதிகமோ? அங்கே அதாவது பூசலாரின் ஆலயத்திற்கே இறைவன் சென்றதாக அந்தப் புராணக்கதை முடிகிறது. இங்கு மன்னனின் பக்தியை குறைவாக எண்ணிவிடக் கூடாது. தன் செல்வத்தை எல்லாம் வாரி வழங்கி இறைவனுக்கு ஆலயம் அமைக்க நினைத்த அந்த அரசனின் உள்ளமும் போற்றுதலுக்குரியது தான். ஆனால் அதனிலும் அப்பாவித்தனமான பூசலாரின் அன்பு ஒருபடி முன் நின்றதால் இறைவன் அதற்கு முன்னுரிமை அளித்ததாக ஆன்மிகம் சொல்கிறது. மனிதர்கள் போல பணத்திற்கு முன்னுரிமை அளிப்பவனல்ல இறைவன் என்பதை உணர்த்துகிறது இந்தச் சம்பவம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த புராணக்கதை உண்மையா பொய்யா என்கிற ஆராய்ச்சிகளுக்கு அப்பால் இது எங்கே காணப்படுகிறது என்பதுதான் முக்கியம்? எந்த ஆன்மிகத்திற்காக நாங்கள் ஆடம்பரமாக செலவழித்துக் கொண்டிருக்கிறோமோ அதே ஆன்மிகம்தான் இந்தக் கதையைச் சொல்கிறது. உள்ளத்தில் கோயில் கட்டிய பூசலாரை இறைவனின் மெய்யடியார்கள் என்கிற பெருமையைப் பெறும் அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவராக வைத்து பெருமை சேர்த்ததும் அதே ஆன்மிகம்தான். இந்தக் கதையை கொண்ட பெரிய புராணத்தை பன்னிரு திருமுறைகளில் ஒன்றாக்கி தினமும் ஆலயம் தோறும் இறை முன்னிலையில் பாட வைத்ததும் அதே ஆன்மிகம்தான். எனவே ஆடம்பரத்திற்கோ, அலங்காரத்திற்கோ ஆன்மிகம் முக்கியத்துவம் தரவில்லை என்பதும் உண்மையான அன்பிற்கும் பக்திக்குமே ஆன்மிகம் முதன்மையளிக்கிறது என்பதும் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே நிறுவப்பட்டுள்ளது. இதனேயே கவியரசர் கண்ணதாசன் எல்லோருக்கும் புரியுமாறு எளிமையாக சொல்லி வைத்தார்.

**'ஆடை அணிகலன் ஆபரணங்கள்**
**ஆண்டவன் விரும்புவதில்லை.**
**அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும்**
**ஆலய வழிபாடில்லை!'**

அரச மரத்திலும் ஆலமரத்திலும் குளக்கரைகளிலும் இருந்த இறைவனை அந்த இயற்கையோடு இயைந்த சூழலிலேயே வழிபடுவதுதான் பொருத்தமானது என்பதை என்று உணர்வோம் என்று தெரியவில்லை. அரசடி விநாயகர், ஆலடி விநாயகர் என்றெல்லாம் ஆலயங்களுக்குப் பெயர் இருக்கும். ஆனால் அங்கே அரச மரமோ ஆல மரமோ இருக்காது. அவற்றை வெட்டி வீழ்த்தி விட்டு பெரிய கட்டுமானங்களோடு ஒரு கோயில் இருக்கும். ஆன்மிகத்தின் அடிப்படையையே கேள்விக்குறியாக்கிவிட்ட காரியம் இது! அருகிவரும் மரங்களையும் அதியுச்ச பயன்தரு மரங்களையும் ஆலயங்களின் தலவிருட்சங்களாக்கி, அந்த மரங்களின் நீட்சியை ஆன்மிகத்தின் ஊடாக நிலைநிறுத்தும் தார்ப்பரியத்தை கொண்ட பண்பாட்டுப் பெருமை எம்முடையது என்பதை என்றும் மறத்தலாகாது. இயற்கையும் இறையும் ஒன்றாகவே இருந்தது. அதை ஒன்றாகவே தொடர்ந்து இருக்கச் செய்யவேண்டும். அதுவே இயற்கைக்கும் நல்லது.

ஆன்மிகம் சார்ந்த செலவுகளே வேண்டாமென்பதல்ல இந்த கட்டுரையின் நோக்கம். இங்கே தவறான புரிதல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால் சிலவற்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உலகக் கட்டிடக்கலைஞர்களே வியந்து போற்றும் தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் ஆன்மிகத்தின் ஒரு ஆடம்பரம் தான். ஆனால் அது ஆன்மிகத்தின் தொடர்ச்சியான நிலைபேறுகைக்கு அவசியம். வரலாறாக தலைமுறைகள் தாண்டி எமது பாரம்பரியத்தை எடுத்தியம்பப் போகும் பொக்கிஷம் அது. இராஜ இராஜன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் தேவைதான். ஆனால் தஞ்சையில் இன்னொரு பெரிய கோயில் தேவையில்லை என்பது தான் என் நிலைப்பாடு. புரியுமாறு சொல்வதென்றால் என் காதலின் சிறப்பை காட்டுகிறேனென எல்லா காதலர்களும் தாஜ்மஹால் கட்ட முடியுமா என்ன? தலைமுறைகள் கடந்தும் ஆன்மிகத்தின் மகிமைகளை கடத்த இது போன்ற சில கோயில்கள் தேவை என்பது மறுக்க முடியாத உண்மை.

ஈழ மண்ணில் உதாரணமாக சொல்வதென்றால் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் நாற்றிசை கோபுரங்களோடு தலைவாசல் கோபுரமும் சேர கம்பீரமாக காட்சியளிக்கிறதென்பதற்காக மற்ற ஆலயங்களும் பஞ்ச கோபுரங்களோடு இருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவது சரியா? ஆன்மிகப் பணிகளுக்குச் சரிநிகராக அறப்பணிகளையும் செய்வதனால் உருவான மகாபுண்ணியம் அந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது. தானும் வளர்ந்து, சமயத்தையும் வளர்த்து, சமூகத்தையும் வளர்க்கிறது அந்த ஆலயம். ஆனால் எமது மண்ணில் பெரிய கட்டுமானங்களோடு காணப்படும் ஆலயங்களில் ஒரு வேளைப்பூசை கூட ஒழுங்காக நடக்காத ஆலயங்களும் உள்ளன. பன்னிரு ஆண்டுகளுக்கொருமுறை வரும் கும்பாபிசேகங்களையும், பன்னிரு மாதங்களுக்கு ஒரு முறை வரும் மகோற்சவத்தையும் விட முக்கியமானது நித்திய பூசை. அந்த பூசை அதற்குரிய காலக்கிரமத்தில் நடக்கும்போதுதான் அந்த தெய்வம் குளிர்ச்சியடைகிறது. இதற்கு தேவை அர்ச்சகர்களதும் பக்தர்களதும் அர்ப்பணிப்பும் பக்தியும் மட்டுமேதவிர வேறெந்த செல்வமும் அல்ல. ஆனால் இதற்குத்தான் பல ஆலயங்களில் பற்றாக்குறை இருக்கிறது.

சாதி மத வேற்றுமைகள் இன்றும் ஆலயங்களூடாக சமூகப் பரப்பில் பிரிவினையை ஏற்படுத்துகின்றன. ஆனால் சாதியைக் காரணம் காட்டி ஆலயத்திற்குள் அனுமதி மறுக்கப்பட்ட நந்தனாருக்காக நந்தியே விலகி சிவதரிசனத்திற்கு வழிவகை செய்தாக ஆன்மிகம் சொல்கிறது. இந்த நந்தனார் சரிதம் ஊடாக ஆன்மிகம் என்ன சொல்கிறது தெரியுமா? இறைவன், எந்த பிறப்பிலும் பேதம் பார்ப்பதில்லை. உருவத்திலும் பேதம் பார்ப்பதில்லை. ஆனால் மனிதர்கள்தான் தங்கள் மனித இனத்திலேயே வேறுபாடு வைத்திருக்கிறார்கள். அவர்கள் செய்யும் தவறுகளுக்கு பழியை ஆண்டவன் மீது போடுகிறார்கள். நந்தனாரை ஆலயத்திற்குள் வைத்து இன்றும் வழிபடுகிறோம். ஆனால் அவர்சார்ந்த சாதியினருக்கு இன்றும் பல ஆலயங்களில் அனுமதி இல்லை. அதே போலத்தான் கண்ணப்பரும். எனவே ஆன்மிகத்தின் அடிப்படையை உணர்ந்து அனைவருக்கும் சமத்துவத்தை ஆலயங்களூடாக ஆன்மிகத்தில் உறுதி செய்ய வேண்டும்.

ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு ஆன்மிகத்தை கடத்தும் முக்கிய இடமாக ஆலயங்களே இருக்கின்றன. முதியவர்களிடமிருந்து இளையவர்கள் ஆன்மிகத்தின் அடிப்படைகளை அறிந்துகொள்ள ஆலயங்களே உதவுகின்றன என்பதை மறக்கமுடியாது.

**யார் இளைஞர்கள்?**

ஒரு மனிதனின் இளமைப்பருவமானது 13 வயது தொடக்கம் சுமார் 30 வயது வரையான காலகட்டத்தை உள்ளடக்கி இருக்கும் என வரையறை செய்யலாம். இந்த வயது வரையறை தொடர்பில் உளவியலாளர்களிடையே பல அபிப்பிராய பேதங்கள் உண்டு. இருந்தாலும் இந்த இளமைப்பருவத்திற்குள் ஒரு மனிதனின் பதின்ம பருவமும் கட்டிளமைப்பருவமும் உள்ளடங்கி காணப்படும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டிற்குள் வரமுடியும்.

இளமைப் பருவம் என்பது முதிர்ச்சிக்கும் பிள்ளைப் பருவத்திற்கும் இடையிலான நிலைமாறும் பருவம் ஆகும். அதாவது முதிர்ச்சியின் அடையாளங்களும் பிள்ளைத்தனத்தின் தன்மைகளும் கலந்திருக்கும் பருவம். ஒரு மனிதனின் வாழ்வில் புயலடிக்கும் பருவம், உள்ளகக் குழப்பம் நிறைந்த பருவம், புரட்சிகரமான பருவம், கட்டுக்கடங்காத பருவம் என இப்பருவத்தினை வர்ணிப்பர். ஒருவனது இளமைப் பருவம் சீரிய முறையில் கட்டமைக்கப்பட்டு விட்டால் அவனது எதிர்காலம் என்பது மிகச்சிறப்பாக இருக்கும் என்பது நாம் அனுபவ ரீதியாக கண்ட உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் பருவத்தில் ஏற்படும் கோளாறுகளையும் பிறழ்வுகளையும் எதிர்கொண்டு, அதனை ஒரு ஆரோக்கியமான முறையில் பக்குவப்படுத்துகின்ற வழிப்படுத்துகின்ற சக்தி ஆன்மிகத்திற்கு உண்டு. அந்தவகையில், சமயங்கள் போதிக்கின்ற ஆன்மிகக் கடமைகளில், வழிபாடுகளில் இளைஞர்கள் தங்களை முற்றாக ஈடுபடுத்தி தங்களை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று ஆன்மிகத்தை விட்டும் தூரமான, ஆன்மிக வறுமையுடன் வாழுகின்ற இளைஞர்களே உள நோய்களுடன் காணப்படுகின்றனர். ஒரு மனிதனுடைய உள்ளத்தை வளப்படுத்துவதிலும், அதன் நோய்களைக் குணப்படுத்துவதிலும், அதில் அமைதியை ஏற்படுத்துவதிலும் ஆன்மிகத்திற்கு நிகரானதொன்று கிடையவே கிடையாது.

எனவே, மாறிக்கொண்டு செல்கின்ற இன்றைய உலகில், சமூகத்தின் முதுகெலும்பாகவுள்ள இளஞ்சமுதாயத்தை, அது எதிர்கொள்கின்ற சவால்கள் மற்றும் பிரச்சினைகளிலிருந்து பாதுகாத்து, உள ஆரோக்கிமுள்ள நல்ல வளமான சமூகமாக உருவாக்கி எடுக்க ஆன்மிக நாட்டத்தை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

இளைஞர்களுக்கு எவ்வாறு ஆன்மிகத்தின் தேவை உள்ளதோ அதுபோல ஆன்மிகத்திற்கும் இளைஞர்களின் தேவை உள்ளது. ஆலயச் சூழலை சுத்தமாக வைத்திருக்கவும், பூக்கள் கொய்யவும், மாலைகள் கட்டவும், சுவாமியை திருவீதியுலா வரச்செய்யவும் என்று சரியைத் தொண்டுகள் செய்வதற்கு இளைஞர்களும் யுவதிகளும் முன்வரவேண்டும். அதை அவர்கள் வேலையாக செய்யாமல் பணியாக செய்கின்றபோது அந்த ஆலய சூழல் மகத்துவம் பெறுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட தெய்வங்களை விட குலதெய்வங்களும் கிராமியத் தெய்வங்களுமே எமது பண்பாட்டினதும் வரலாற்றினதும் தொடர்ச்சிக்கும் மேன்மைக்கும் உதவும். அந்தவகையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரினால் மக்களோடு சேர்ந்து அவர்களின் குலதெய்வமான பிள்ளையாரும் இடம்பெயர்ந்தார். தமது உயிரைக்காப்பாற்ற ஓட வேண்டிய சூழலிலும் தமது குலதெய்வத்தையும் சேர்த்துக்கொண்டு இடம்பெயர்ந்த இந்த ஆதிமயிலிட்டி கிராமத்தவர்களின் பக்தியை முன்னுதாரணமாகக் கொண்டு மீள அந்த அற்புத ஆன்மிக சூழலை இந்த ஆலயத்தில் ஏற்படுத்த அனைவரும் அவனருளாலே ஒன்றிணைவோமாக.

**'அவனருளாலே அவன்தாழ் வணங்கி'**

**திரு. சண்முகானந்தன் சந்தோஷ்,**
சுன்னாகம்.

திருச்சிற்றம்பலம்

**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தம் கை.**

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அபிஷேக பலன்

01. தைலாபிஷேகம் (எண்ணை) - சுகம் கொடுக்கும்.
02. மாப்பொடி - கடனைப் போக்கும்.
03. நெல்லி முள்ளிப் பொடி - வியாதியைப் போக்கும்.
04. மஞ்சள் பொடி - வசீகரணம்.
05. ஜலதிரவியம் - சௌபாக்கியம்.
06. பஞ்சகௌவியம் - தூய்மையுண்டாகும்.
07. பஞ்சாமிர்தம் - புஷ்டி அளிக்கும்.
08. நெய் - வெற்றியைத் தரும், மோட்சம் கிடைக்கும்.
09. பால் - ஆயுள் பொருக்கும்.
10. தயிர் - மக்கட்பேறு அளிக்கும்.
11. தேன் - சுகமளிக்கும்.
12. கரும்புச்சாறு - பிணி நீங்கும்.
13. சர்க்கரை - பகையை அழிக்கும்.
14. வாழைப்பழம் - பயிரை வளர்க்கும்.
15. மாம்பழம் - சந்தானத்தை அளிக்கும்.
16. மாதுளை - கோபத்தை நீக்கும்.
17. நாரத்தை - நேர்மை அளிக்கும்.
18. எலுமிச்சை - யமபயத்தை அழிக்கும்.
19. அன்னம் - சாம்ராஜ்யம் தரும்.
20. இளநீர் - போகம் அளிக்கும்.
21. அன்னாபிஷேகம் - சாம்ராயம் தரும்.
22. சந்தனம் - செல்வத்தை அளிக்கும்.
23. பத்ரோதகம் - பயத்தை நீக்கும்.
24. சங்குஜலம் - வெற்றி.
25. சஹஸ்ரதாரை - செழிப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கும்பாபிஷேக நிகழ்வுகள்




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கண்ட தெய்வம் பெரும்பரப்புப் பிள்ளையார்

எமது கிராமத்தின் மத்தியில் இரு கண்களாக இருந்து எம்மைக் காக்கும் குலதெய்வங்களாக ஆதிமயிலிட்டி காசிபூதராயரும், பெரும்பரப்புப் பிள்ளையாரும் விளங்குகின்றனர். விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்த நம் முன்னோர்கள் பிள்ளையாரை வணங்கியே எந்தக் காரியத்திலும் ஈடுபடுவது வழமையாகும். எமது எல்லா நல்ல காரியத்தின் போதும் பிள்ளையாரை வணங்கி, தடைகளை நீக்கியருள வேண்டியே அவற்றை ஆரம்பிப்போம்.

இடப்பெயர்வு வந்தபோதும் எமது ஊரவர்களைக் காத்து, அவர்கள் நாலாதிசையிலும் நல்ல வாழ்க்கை வாழ உதவிய தெய்வமான பெரும்பரப்பு பிள்ளையாருக்கு ஊர்கூடிக் கோவில் அமைத்து, கும்பாபிஷேகம் செய்து மகிழ்ந்துள்ளனர். அந்தக் கைங்கரியத்தில் செல்லையா பொன்னுப்பிள்ளை ஞாபகார்த்தமாக எமது குடும்பத்தினரும் இணைந்து கொண்டமை மகிழ்வையும், மனநிறைவையும் தருகிறது.

இந்தக் கும்பாபிஷேக நிகழ்வு இனிதே நிறைவு பெற்றுள்ள நிலையில் மண்டலாபிஷேகம் நடைபெற்று நிறைவு நாளில் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலருக்கு எமது குடும்பத்தினர் சார்பாக நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எம்பெருமானின் அருட்கடாட்சம் அடியவர்கள் மீது நிறையவும், எமது கிராமம் தழைத்தோங்கவும், மக்கள் வாழ்வு ஏற்றங் காணவும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானைத் தொழுது வேண்டுகிறேன்.

**செல்லையா பொன்னுப்பிள்ளை குடும்பம்,**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐங்கரன் அடிபணிந் தெழுந்திடுவீர்

ஐங்கரன் அடிபணிந் தெழுந்திடுவீர்
அல்லல றுத்தொளி மிகுபெறுவீர்
எங்குறை ஒட்டும் வழியறிவீர்
ஏக தந்தனின் அடிபணிவீர்

ஒற்றை மருப்புடன் ஒளிர்வோனே
ஓங்கார மெய்வடி வானவனே
அற்புதமானதோர் மெய்ப்பொருளே
அத்திமு கத்துயர் வித்தகனே!

மயிலைப் பெரும்பரப் புறைவோனே
மதகரி முகனெனும் சற்குருவே
தாயினும் இனிய தத்துவனே
தாள்பணிந் தெழுந்தே ஐங்கரனே

வேதியர் வேதம் மிகுபாட
வேழ முகத்தோன் அருள்கூட்ட
அதிகுண சௌந்தரியப் பெருமானே
ஆடும் கும்பநீ ராடியருள்வாய்

பண்ணும் விண்ணும் குளிர்ந்தாட
மங்கள கீதங்கள் தாம்முழங்க
ஏக தந்தவி நாயகனே
எங்கும் நிறைந்தொளி செய்வோனே
அகம்கு ளிர்ந்துன்னடி மலர்பணிந்தோம்
ஆடும் கும்பநீராடி யருள்வாய்.

கவிஞர்,
**குகன்,**
கொல்லங்கலட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கண்ணிற் பணிமின் கனிந்து"

ஈழத் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணம் ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிடேகப் பெருஞ்சாந்தி வைபவம் 01.04.2022 இல் ஆரம்பமாகி 06.04.2022 வரை இடம்பெற இறையருள் பாலித்தது. தொடர்ந்து நாற்பத்தெட்டுத் தினங்கள் மண்டலாபிஷேகமும் இடம்பெற்றவண்ணம் உள்ளது.

**'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கா வேண்டா'** என்ற தமிழ் மூதாட்டி ஒளவையாரின் வேண்டுதலுக்கு அமைய இவ்வூரின் சீர் அடியார்கள் எல்லோரும் இறையருளின் துணையோடு, செயற்கரிய செயலாக இவ்வாலயத்தை நிர்மாணித்தனர். கவின் மிகுந்த பொலிவுடன் கற்றளியாக உருவாக்கி, அந்தண சிரேஸ்டர்களின் ஆசியுடன் ஐம்பத்து நான்கு ஆண்டுகளின் பின்னர் குறித்த சுபதினத்தில் குடமுழுக்கு என்கின்ற பெருஞ்சாந்தி வைபவத்தைச் செய்து எம் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாகியுள்ளனர். ஆதிமயிலிட்டி மக்கள் கடின உழைப்பாளிகள், பெரும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். யுத்த காலத்தில் தம் உயிரைப் பணயமாக வைத்து எம்பெருமானின் திருவுருவங்களைக் காப்பாற்றி எடுத்துச் சென்று சுன்னாகம் சிவபூதவராயர் ஆலயத்தில் வைத்து முட்டாறாப் பூசை இடம்பெற வைத்து, இன்று இச்செயற்கரிய செயலைச் செய்துள்ளார்கள்.

**'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்**
**திண்ணியராகப் பெறின்'** - திருக்குறள் 666

என்ற திருக்குறளை இச்சீர் அடியாரின் திண்ணிய எண்ணத்தை, செயற்பாட்டை விளக்க உதாரணமாகக் கொள்ளலாம்.

சிறியேனும் இவ்வூர் ஆலயங்கள் இரண்டினதும் பெரும்சாந்தி வைபவத்தில் பங்கேற்கவும், அதனைக் கண்ணாரக் கண்டு தரிசிக்கவும் பேறுபெற்றேன். கையாரத் தொழுது, அருவி கண்ணாரச் சொரிந்து காணக் கண் அடியேன் பெற்றவாறே! என்ற திருமுறை வார்த்தைகளை எண்ணிப் பாடிப், பரவி, பணிய என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!

தைத் திங்களிலே ஆதிமயிலிட்டி காசிப்பூதவராயர் ஆலயம் குடமுழுக்கு கண்டது. தொடர்ந்து வந்த பங்குனித் திங்களில் பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலயமாகிய இவ்வாலயம் குடமுழுக்குக் காண்கிறது. இத்தனைக்கும் இன்னமும் இங்கு மக்கள் முழுமையாகக் குடியேறவில்லை. அப்படி இருந்தும் பெரும் அல்லல்களுக்கு மத்தியிலும் சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை ஆகிய ஊர்களில் இருந்த வண்ணமும், இக்காரியத்தை வண்ணமுற ஆற்ற எப்படி முடிந்தது இவர்களால்? அதற்கும் திருமுறை (திருஞானசம்பந்தர் தேவாரம்) இவ்வாறு விடை பகர்வதை நோக்கலாம்.

திருச்சிற்றம்பலம்

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில் நல்லஃதுறும் கழுமலவளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே**

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகலும் எண்ணியதனால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்கிறார்கள். வைகலும் எண்ணியதால் இப்படியான நல்லகாரியங்களை ஆற்றுகிறார்கள். வைகலும் எண்ணியதால் நல்ல கதியாகிய சிவகதி கிட்டும் எனச் சம்பந்தர் தம் ஞானத்தமிழால் விடை கூறியுள்ளார். எனவே நித்தியானந்தத்தில் திளைக்கும் இம்மக்களுடன் சேர்ந்து நானும் ஆனந்தம் அடைகின்றேன்.

பெரும்பரப்புப் பிள்ளையார், காசிப்பூதவராயர் ஆகிய இரு ஆலயங்களின் கும்பாபிடேகப் பிரதிஷ்டா பிரதம குருவாகக் கிரியைகளைச் சிவஸ்ரீ. சோ. தீபதர்சன சிவாசாரியார் சிறப்பாக ஆற்றினார். அவரே பிரதம குருவாக ஆலயப் பூசைகளையும் மேற்கொள்பவர். 1990 களில் தான் சிறுவனாக இருந்தபோது, கும்பாபிஷேகம் செய்வதற்கு ஆயத்தமாகிய வேளையில், நாடு யுத்த சூழலில் சிக்கி, இடப்பெயர்வுகளால் அல்லல் உற்று, ஐம்பத்து நான்கு ஆண்டுகளின் பின் இப்போது விண்ணுக்கும், மண்ணுக்கும் நாதனுமாகிய விநாயகனின் திருவருளால் கைகூடியுள்ளதாக சிவாச்சாரியார் அவர்கள் கூறினார். சிறியேனும், அந்தணப் பெருமக்களுடன் இணைந்து ஆறு நாட்களும் திருமுறை ஓத வாய்ப்பளித்த இவ்வூர் சீர் அடியார்க்கெல்லாம் சிரந்தாழ்த்தி வாழ்த்தி வணக்கம் செய்கிறேன்.தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே! ஒரு கும்பாபிடேகம் தரிசனம் செய்தால் எத்தனையோ ஆண்டுகள் தினமும் சிவாலய தரிசனம் செய்த பேறு உண்டு எனப் பெரியோர் கூறுவர்.

**'வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்'** - திருமந்திரம்
**'தேவாரம் வேதசாரம்'** - காசிவாசி செந்திநாத ஐயா

எனவே தான் இக்குடமுழுக்குக் கிரியைகளில் வேத ஆகமக்கிரியைகளின் போது பொருத்தமான இடங்களில் "சிவோகம்பாவனை" அந்தணப் பெரியோர் திருமுறைக்கும் உரிய இடத்தை வழங்கிக் கிரியை சிறப்புறுமாறு செய்வர்.

அந்தவகையில் கும்பாபிடேகக் கிரியைகள் இடம்பெறும் வேளையில் பொருத்தமான இடங்களில் அந்தணப் பெரியோர் ஓதும்படி பணிக்க அடியேனும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் வாக்குக்கமைய இவ்வாறு நாட்களும் திருமுறை ஓதும் பாக்கியம் பெற்றேன். இடையில் இரு நாட்கள் ஊரடங்குச் சட்டம் அமுலான வேளையிலும் எம்பெருமானின் திருவருளால் எவ்வித இடையூறும் இல்லாது எம்பணி தொடர முடிந்தது. இயந்திர ஸ்தாபனம், பிம்பஸ்தாபனம் நடைபெற்ற (03.04.2022) ஞாயிற்றுக் கிழமை வருண பகவான் திருவருள் மழை பொழிந்து ஆசிர்வதித்தார். மண்ணும் குளிர்ந்தது. மக்கள் மனமும் குளிர்ந்தது. கும்பாபிஷேக தினத்தன்று கலச அபிஷேகம் நடைபெற்ற வேளையில் கருட ஆழ்வார் வானிலே வட்டமிட்டு ஆசிர்வதித்தார். இது நல்ல சுப சகுனம் எனப் பெரியோர் கூறுவர்.

மேலும் சிவபதம் அடைந்த மாவை ஆதினகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து சண்முகநாதக் குருக்கள் அவர்கள் 1987இல் திருக்கார்த்திகை மகோற்சவ தினத்தன்று "தீபதர்சனம்" என்ற ஓர் அருமையான நூலை மாவையம்பதியில் வெளியிட்டார். தீப தரிசனம் பாப விமோசனம் என்ற பொருளிலே நல்ல கட்டுரையும் அமைந்து இருந்தது. இவ்வாலய பிரதம சிவாசாரியாரின் திருநாமமும் தீபதர்சன என்றே அமைந்துள்ளது. உங்கள் வாழ்வு சிறக்க பிரதம சிவாசாரியாராக இருந்து குடமுழுக்கின்போது காட்டிய தீப தர்சனம் எல்லோர் வாழ்விலும் உலப்பிலா ஒன்றாக அமையவும், சகலசெல்வ யோகமிக்க பெரு வாழ்வு கிட்டவும், மாவையம்பதியானின் நேரடிப்பார்வையில் இவ்வூர் அமைந்திருப்பதாலும் அவன் திருவருள் கிட்டவும் சிறியேன் வேண்டுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தப் பெருமான் குடமுழுக்கைப் பற்றி சிறப்பிக்கும் இடம் மிகவும் அற்புதமானது. இறந்த பூம்பாவையின் சாம்பரை மட்குடத்தில் பேணிய தந்தையார் சம்பந்தர் திருமுன்னிலையில் வைத்தபோது திருஞானசம்பந்தப் பிள்ளையார் "மட்டிட்ட புன்னை". எனத் தொடங்கும் பதிகம் பாடிப் பூம்பாவையை உயிர் பெற்றெழச் செய்தார். அப்பதிகத்தில் "தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்"

**'விளக்கீடு காணாது போதியோ பூம்பாவாய்'**
**'பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்'**

எனப் பாடுகின்றார். இங்கு பெருஞ்சாந்தி எனத் தன் தண்தமிழால் சிறப்பிப்பது இக்கும்பாபிஷேகத்தையே! எனவே இப்படியாக இவ்வூரில் ஓர் ஆண்டில் இரு பெருஞ்சாந்தியைக் காண வைத்த பெருமக்களுக்கு வாழ்த்த வார்த்தைகளில்லை. அவர்கள் பட்ட அல்லல் எல்லாம் தீர்ந்து

**'அல்ல லென்செயும் அருவினை யென்செயும்**
**தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்**
**தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்**
**கெல்லை யில்லாதோ ரடிமைபூண் டேனுக்கே'**

என ஐந்தாம் திருமுறையில் அப்பர் பெருமான் பாடியுள்ளார். நாவுக்கு அரசர் என்று சிவனார் அழைத்தவர் இப்படி உங்களை தன்னிலையாக வாழ்த்துவதாக வாழ்த்தி

**'கண்கள் இரண்டும் அவன் கழல்**
**கண்டு களிப்பன ஆகாதே'..** - திருவாசகம்

**'கண்காள் காண்மின் களோ'..** - திருவங்கமாலை

என்று கண் படைத்த பயனை யாம்பெற்றோம். அதற்கு என்னையும் ஒருவனாக அழைத்த அன்பர் சுகுமாரன் தம்பதியினர்க்கும், என்னைக் கௌரவித்த சீர் அடியார்கள் எல்லோருக்கும் இறவாத இன்ப அன்பு வேண்டி எல்லோரும் எல்லா நலனும் பெற வாழ்த்தி, வணங்கி அமைகின்றேன்.

**'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'**

இங்ஙனம்
**செல்லா பாலச்சந்திரன் (M.A,B.A,PGD.),**
அகில இலங்கைத் திருமுறை மன்றச் செயலாளர்,
இளைப்பாறிய ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் நூற்றாண்டில் ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயத்தின் தோற்றப் பொலிவு

## அறிமுகம்

ஈழஅன்னையின் சிவதர்மபூமியாகிய இலங்கை நாட்டின் "வீணாகானபுரம்" என வர்ணிக்கப்படும் இடம் யாழ்ப்பாணம் ஆகும். சைவத்தையும் தமிழையும் உயிராய்ப் போற்றுகின்ற யாழ் வலிகாமம் வடக்கில் பழம் பெரும் கிராமங்களுள் மயிலிட்டியும் ஒன்றாகும். மயிலிட்டி வடக்கு யா/246 எனும் கிராமசேவகர் பிரிவானது கிராமக்கோட்டடி, ஆதிமயிலிட்டி எனும் பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வேளாண்மையை அடிப்படையாக கொண்டு வாழ்ந்து வரும் மக்களுக்கு, அருள்பாலிக்கும் தெய்வங்கள் ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு விநாயகரும் ஆதிமயிலிட்டி காசிப்பூதராயப்பெருமானும் ஆகும்.

வலிகாமம் வடக்கு J/246 கிராமசேவகர் பிரிவில் ஆதிமயிலிட்டி கிராமக்கோட்டு சந்திக்கு 50m சற்றுமுன்பாக ஒருபுறம் பெரும்பரப்பு விநாயகர் ஆலயமும் மற்றையபுறம் காசிப்பூதராயப்பெருமானுடைய ஆலயமும் அமைந்துள்ளது.

பெரும்பரப்பானின் வரலாற்றினை சற்றுநோக்குவோமாயின் சுமார் 200 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் அரசமரத்தடியில் கொட்டிலில் இருந்த விநாயகருக்கு காலப்போக்கில் ஆலயம் கட்டப்பட்டு ஆகமவிதிக்கமைய அந்தண சிவாசாரியார்களினால் ஆலய பூஜைகள் மேற்கொள்ளப்பட்டு ஆவணிச் சதுர்த்தி, பெருங்கதை விநாயகர்விரதம் என்பன நடைபெற்றதுடன் சித்திரை வருடப்பிறப்பும் சிறப்பாக நடைபெற்றதை அறியக்கூடியதாகவுள்ளது.

பாதுகாப்பு வலயத்திலிருந்து 2018ம் ஆண்டு ஆலயம் மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டபோது ஆலயமும் கையளிக்கப்பட்டது. 13.04.2018 அன்று மயிலிட்டியைப் பார்ப்பதற்கு நானும் சென்றிருந்தேன். எல்லோரும் தத்தம் காணியை பார்த்தபின் பூதராயப்பெருமானுடைய ஆலயத்திற்கு சென்றிருந்தோம். அப்போது அங்கு வந்த தவிசாளர் வரைபடத்தின்படி இன்னொரு ஆலயம் விடுவிக்கப்பட்டிருக்கின்றது என்றபின் பிள்ளையார் கோவிலை நோக்கிச் சென்றோம். பற்றைக்காட்டுக்குள் வானுயரமதில்களுக்குள் இரு பரிவாரத்தெய்வங்கள் சூழ் மூலஸ்தானத்திற்குள் அரசமரம் முளைத்திருந்தது. இடிந்த நிலையில் வசந்த மண்டபமும், மணிக் கோபுரமும், காணப்பட்டது. நடுவே பாலாலயமும் அதனுள் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களும் இருந்ததோடு வாசற்கதவாக சிறியமரப்பலகைள் இணைத்துக் கட்டப்பட்டிருந்ததையும் காண முடிந்தது.

அரச மரத்தடியிலிருந்த இவ்வாலய ஆரம்பகால வழிபாடுகள் பின் ஆகமவிதிக்கமைய ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடற்றப்பட்டமையை விடயங்கள் ஆதாரமாக்குகின்றன. ஆலய மூலஸ்தானம், மகாமண்டபம், அர்த்தமண்டபம், ஸ்தம்பமண்டபம், வசந்தமண்டபம், மடைப்பள்ளி, களஞ்சிய அறை, பொலிகல்லினாலான மணிக்கோபுரம் என்பன காணப்பட்டன. அங்கே காணப்பட்ட மணி நல்லூரில் 1926ம் ஆண்டு செய்யப்பட்டது எனவும் அறியக் கிடைத்தது. ஆலயமுன்றலில் உக்கிய நிலையில் சகடை காணப்பட்டது. இவற்றிலிருந்து ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது என்பதை அறியமுடிகின்றது. மேலும் வருடாவருடம் உற்சவங்களும் விசேட விழாக்களும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21ம் நூற்றாண்டிற்கான ஆலய அடித்தளம்

ஆலயம் மக்களிடம் மீளக்கையளிக்கப்பட்டபின் ஆலய வெளிவீதி சுத்தம் செய்யப்பட்டு, 2019ம் ஆண்டு ஆவணிச்சதுர்த்தி நன்னாளில் பாலாலயதிற்கான அத்திவாரக்கல் நாட்டப்பட்டு பாலயம் கட்டப்பட்டது. அதன்பின் பொதுக் கூட்டம் நடைபெற்று ஆலயத்தை நிர்வகிக்க ஆலயபரிபாலன சபை நியமிக்கப்பட்டது. ஆலய கட்டுமானப்பணிக்காக, ஒன்பது கட்டட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பெறப்பட்ட மதிப்பீட்டறிக்கைக்கேற்ப, ஆலய கட்டடப்பணிகளை யாழ்ப்பாணம் அராலியைச் சேர்ந்த ஸ்ரீநாராயண சிற்பக்கலையக உரிமையாளர் திரு. சசிகரன் அவர்களிடம் ஏகமனதாக ஒப்படைத்தனர்.

02.07.2020 அன்று ஆனிச்சதுர்த்தி நன்னாளில் விநாயகப்பெருமானுக்கு விசேட பூஜைகள் நடைபெற்று விநாயகப்பெருமானுடைய கருங்கற் கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. தொடர்ந்து வரும் நன்நாட்களில் கஜலஷ்மி சந்நிதி, சந்தானகோபாலர் சந்நிதி, நாகதம்பிரான் சந்நிதி, முருகன் சந்நிதி, வசந்த மண்டபம், யாகசாலை, மணிக்கோபுரம், வைரவர் சந்நிதி, களஞ்சியஅறை, மடைப்பள்ளி, வாகனசாலை என்பவற்றுடன் ஆலயமுன்றலில் காணப்படும் அரசமரத்தடியில் வட்டவடிவ கட்டுகட்டப்பட்டு நான்கு திசைகளிலும் விநாயகப்பெருமானுடைய சிலைகள் வைப்பதற்குரிய கட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டு வெகுவிமர்சையாக ஆதிமயிலிட்டி வாழ் மக்களுடைய ஒத்துழைப்புடன் ஆலயம் நிமிரத் தொடங்கியது.

## 21ம் நூற்றாண்டிற்கு பின் ஆலய அமைப்பு

2018ஆம் ஆண்டுக்கு முன் ஆலய மூலஸ்தானம் வட்டப்பண்டிகை அமைப்புடன் சீமெந்தினாலேயே காணப்பட்டது. அத்துடன் இருபரிவாரத்தெய்வம், மூலஸ்தானம், மணிக் கோபுரம் கட்டப்பட்டன. 21ம் நூற்றாண்டிற்கு பின் ஆலயம் உத்தரமட்ட வேலைக்கமைய திட்டமிடப்பட்டது. மூலஸ்தானம் அடி நிலம் தாழ்ப்பத்தில் மண், காட்டுகல், கருங்கல், நீர் என்பன இட்டு உறுதியான அஸ்திவாரத்துடன் இடப்பட்டது. மூலஸ்தானமும் அர்த்த மண்டபமும் கருங்கல்லினால் அமைய பெரும்பரப்பானின் அருள் கிட்டியது. அதன்படியே வானம், செகரி, கண்டம், பட்டியல், பத்மசேகரி, அனுட்டானவரி, கால், உத்தரம், முதகம், கபோதகம், வியாழவரி என்ற அடுத்தமையும் படிகள் கருங்கற்களினாலும் வட்டபண்டிகை சீமெந்தினாலும் ஆக்கப்பட்டு கலசம் தரித்து நிமிர்ந்து காட்சியளித்தது. மேலும் தெற்குத்திசை நோக்கியவாறு தட்சணாமூர்த்தி பெருமானின் சிலையும் வடக்குத்திசை நோக்கியவாறு நடனப்பிள்ளையாரின் சிலையும் மேற்குத்திசை நோக்கியவாறு உட்கார்ந்த பிள்ளையாரின் சிலையும் அழகூட்டின. அர்த்தமண்டபத்தினையடுத்து மகாமண்டபம், தரிசனமண்டபம், ஸ்தம்பமண்டபம் என்பன சீமெந்தினால் அமைப்பெற்றன. மகாமண்டபம் மூன்று கலசங்களுடன் காணப்பட்டது. தரிசனமண்டபம், ஸ்தம்பமண்டபத்தில் மூஷிகம், பலிபீடம், கொடிமரம், ஸ்தம்ப பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டு கொட்டகை வேலையுடன் காணப்படுகிறது. மூலஸ்தானம் பட்டியல் வரிசையிலிருந்து கலசம் வரை 18 அடி உயரம் ஆகும். மூலஸ்தானத்திலிருந்து ஸ்தம்பமண்டபம் வரை 113 அடி நீளம் ஆகும்.

உள்வீதியில் முதலாவதாக கஜலஷ்மி சந்நிதி அமைந்துள்ளது. இருகஜ வாகனங்களுக்கு நடுவே கஜலஷ்மி அம்பாள் கருங்கல்லில் அமைய சந்நிதி கலசம் கொண்டு காட்சியளிக்கிறது. சதுரபண்டிகை அமைப்பில் நான்கு லட்சுமி சிலைகள் வைக்கப்பட்டதால் மேலும் அழகுபெற்றது. அமைந்தது. அடுத்ததாக சந்தானகோபாலர் சந்நிதி அமைந்துள்ளது. கருங்கல்லில் சந்தானகோபாலர் அமைய எண்கோணப்பண்டிகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பில் கிருஷ்ணனின் சிலைகள் வைக்கப்பட்டு கலசம் தரித்து காணப்படுகின்றது. அடுத்ததாக நாகதம்பிரான் அமைய சதுர அமைப்பில் நாகதம்பிரானின் சிலைகள் வைக்கப்பட்டு கலசம் தரித்து காணப்படுகின்றது. அடுத்ததாக முருகன் சந்நிதி அமைந்துள்ளது. வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான் கருங்கல்லில் அமைய அறுகோணவடிவ பண்டிகை அமைப்பில் முருகப்பெருமானின் சிலைகள் வைக்கப்பட்டு கலசம் தரித்து காணப்படுகின்றது.

வசந்த மண்டபம் பண்டிகையில் சித்தி, புத்தியுடன் விநாயகப்பெருமானுடைய சிலையும் அமைய 05 கலசங்களுடன் காட்சியளிக்கின்றது. வைரவப்பெருமானுடைய சந்நிதி சதுரபண்டிகையுடன் கருங்கல் வைரவர் சிலையுடன் கலசம் தரித்து காணப்படுகின்றது. சண்டேஸ்வரர் சந்நிதி சதுரபண்டிகையுடன் கருங்கற்சிலையுடன் கலசம் தரித்து காணப்படுகின்றது.

மேலும் சுமார் 40 அடி ஆழம் கொண்ட திருமஞ்சனக்கிணறு ஆலய உள்வீதியில் காணப்படுகின்றது. யாகசாலை, மடப்பள்ளி, களஞ்சியஅறை, அலுவலகம், வாகனசாலை என்பன அதற்குரிய அளவு பிரமாணத்தில் கட்டப்பட்டுள்ளது. ஆலயமுன்றலில் காணப்படும் அரசமரத்தடியினை சுற்றி வட்டவடிவ பண்டிகை கட்டப்பட்டு நான்கு ஆலயங்களுள் ஒன்றில் கருங்கற் பிள்ளையாரும் மற்றைய மூன்று ஆலயங்களுள் சீமெந்துப்பிள்ளையாரும் வைக்கப்பட்டு ஆலயம் தெய்வீக சூழலை பெற்றிருக்கின்றது. ஆலய பிரதான வாசலில் மேலே சிறியதொரு அழகான முகப்பில் பிள்ளையாரும் சிறிய இரு மூஷிகவாகனங்களும் வைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தை சுற்றி வெளிப்பிரகார மதில் கட்டப்பட்டுள்ளது.

### ஆலய பூஜை வழிபாடுகள் மற்றும் கிரியைகள்

2021ஆம் ஆண்டு எம்பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெற இருந்தவேளை நாட்டின் சூழ்நிலை காரணமாக தடைப்பட்டது. 2022ஆம் ஆண்டு கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழாவினை நடாத்த எம்பெருமானின் திருவருளும் எமது ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. சோ. தீபதர்சனக்குருக்களின் குருவருளும் கூடியது. அதன்படி கும்பாபிஷேகத்தினையிட்டு முகூர்த்தகால் நாட்டும் வைபவம் 23.03.2022 அன்று புதன்கிழமை காலை 09.17 மணி முதல் 10.45 மணி வரையுள்ள நேரத்தில் நாட்டப்பட்டு கும்பாபிஷேக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

01.04.2022 அன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.45 மணியளவில் அனுக்ஞை மற்றும் கணபதி ஓமத்துடன் கும்பாபிஷேக கிரியைகள் பூர்வாங்கமாக ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து ஐந்து நாட்கள் கிரியையின் பின் பத்துக்கால யாகசாலை பூஜைகள் நடைபெற்று 06.04.2022 அன்று புதன்கிழமை காலை 09.12 மணி முதல் 10.27 மணி வரையுள்ள குருஹோரையில் 54 வருடங்களின் பின் எம்பெருமானுக்கு கும்பநீராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றமை பெருமைக்குரிய விடயம்.

மேலும் எங்கள் ஆலயத்தை உத்தரமட்ட வேலைக்கமைய நிர்மாணித்து வேண்டிய உதவிகள் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து தந்தவர் ஸ்ரீநாராயணன் சிற்பக்கலையக உரிமையாளர் திரு. சி. சசிகரன் ஐயா என்பது வரலாற்றில் குறிப்பிடவேண்டிய விடயமாகும். கும்பாபிஷேக தினத்தன்று, இவரது சேவையை நயந்து ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய அடியார்கள் சார்பில் "ஆகம கலைச்செம்மல்" என்ற பட்டத்தினை அந்தணர்கள், பெரியோர்கள், அடியார்கள் நிறைந்த சபையில் ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு. ம. சுகுமாரன் ஐயாவினால் கலைஞர் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மீள்குடியேற்றத்தின் பின் ஆலய திருமஞ்சனக்கிணறு தூர்வாரப்பட்டு கிணற்றுப்பொங்கல் நடைபெற்று எம்பெருமானுக்கு (பாலாலயத்தில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையாருக்கு) திருமஞ்சனக்கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீரினால் அபிஷேகம் நடைபெற்றது.

02.04.2022 அன்று நண்பகல் 12.00 மணியளவில் சுன்னாகம் பூதவராயர் ஆலயத்தில் 32 வருடங்களாக வைத்து வழிபாடு செய்யப்பட்ட விநாயகர் அபிஷேகம், பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து சிறிய ரக வாகனத்தில் நந்திக்கொடி பறக்க மங்கள வாத்தியத்துடன் ஆதிமயிலிட்டிக்கு எழுந்தருளினார்.

2019ம் ஆண்டு பாலயத்தில் பெரும்பரப்பு விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின் நித்தியபூஜையும் தைப்பொங்கல் தினத்தன்று அபிஷேகம், பொங்கல், பூஜைவழிபாடுகள் நடைபெற்று வந்தன. ஆவணி சதுர்த்தி, மார்கழி பெருங்கதை வழிபாடுகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

"ஆலயம்" என்பது ஆன்மா ஒன்றினையும் இடம் ஆகும். ஒவ்வொரு மனிதனையும் அவனது வினைப்பயனும் ஆன்மாவும் தான் செயல்படுத்துகின்றது. உடம்பு/ உடல் என்பது ஆன்மா பயணிக்க தேர்ந்தெடுத்த ஒரு கருவி. உடல் என்பது அழகானதாகவோ கருமைநிறமாகவோ இருக்கலாம் ஆனால் அதனால் எந்தவொரு பயனுமில்லை. ஆலயத்தில்தான் எங்களுக்குள் காணப்படும் ஆன்மா இறைவனுடன் ஒன்றிணைகின்றது. ஒன்றிணைகின்ற போது ஆலயத்தில் காணப்படும் நேர் அயன்கள் எங்களை நோக்கி வந்தடைகின்றன. அதற்குத்தான் கருங்கற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை மின்னைக்கடத்துமியல்புள்ளவை. ஆலயத்தில் காணப்படும் பலிபீடம் நாங்கள் செய்கின்ற பாவங்களை மன்னித்து புண்ணியத்தை தருகின்ற பீடமாக காணப்படுகின்றது. அங்கு சென்று எங்கள் பாவங்களை இறக்கி மோட்சத்தை வேண்டவேண்டுமே. ஒரு ஊருக்கு ஒரு கோயிலாவது இருக்கவேண்டும். ஆலயங்களில் கட்டப்படும் தூபி ஒவ்வொன்றிலும் கலசங்கள் பொருத்தப்படுகின்றன. செப்பு கலசத்தில் வரகரிசி இட்டு கருங்காலித்தடி பொருத்தப்படுகின்றது அவை மின்னல்மின்னும் போது மின்னைக் கடத்தி மின்தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றது. ஆலயங்களில் காணப்படும் மணி பஞ்சஉலோகங்களால் செய்யப்பட்டது. அவை ஒலிக்கின்றபோது ஐம்புலங்களும் ஒருமிக்கின்றது. இவ்வாறு அறிவியலும் மெய்யியலும் ஒன்றித்துக் காணப்படுகின்றது. எவற்றையும் நாம் உதாசீனப்படுத்தக்கூடாது. கிரியை ஒவ்வொன்றும் ஏதோவொரு தேவையைக் கருதியே செய்யப்படுகின்றது. எங்கள் ஆலயத்தில் மூலஸ்தானத்தில் விநாயகப்பெருமானும் சபை மண்டபத்தில் பஞ்சமுக விநாயகரும் ஆதிமயிலிட்டி வாழ் மக்களின் துயர்துடைக்க எழுந்தருளியுள்ளனர். அவர்களை வணங்கினால் எம்துயர் அகலும். நாம் கலியுகத்திலேயே வாழ்கின்றோம் அதர்மம் தர்மமாகும் தர்மம் அதர்மமாகும் ஆசாரமற்ற செயல்பாடுகள் அதிகரிக்கும். எனவே எல்லாம்வல்ல இறைவனே என அவரை நம்பி வழிபடுவோம் நலமுடன் வாழ்வோம்.

**'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'**

**ஜெயக்குமார் ஜெயவினோதனன்,**
உயிரியல் பிரிவு 2021,
யா/சென்ஜோன்ஸ் கல்லூரி,
**மாணவன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில்களில் மணி அடிப்பதும் சங்கு ஊதுவதும் ஏன்?

கடந்த கால வரலாற்றில் சங்கு ஊதுவதும் மணியடிப்பதும் சுப சகுனமே தவிர அபசகுனம் அல்ல. சங்கு ஊதுவது என்பது தற்காலப் பேச்சு வழக்கில் அபசகுனம் போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆனால் கோவில்களிலும், வீடுகளிலும் பூஜை செய்யும்போது சங்கை ஊதுவது பலகாலமாக நம் நாட்டில் இருந்து வருகிறது. பூஜையின்போது மட்டுமல்லாமல் மங்கல நிகழ்ச்சிகளின்போதும், போர் துவங்குவதைக் குறிக்கவும் போரில் ஒருபடை வெற்றியடைந்ததை அறிவிக்கவும் சங்கு ஊதப்படுகிறது. மகாகவி பாரதியாரும் "சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே" என்று பாடிப் வெற்றியைப் பறைச்சாற்றும் பொருளாகச் சங்கைக் காண்பித்தார். மகாபாரதப் போரின்போது காலையில் போர் ஆரம்பிக்கும் போதும் மாலை சூரியாஸ்தமனம் ஆனவுடன் போரை முடிக்கும் போதும் சங்கு ஊதியதாக நாம் கேள்வி பட்டிருக்கின்றோம்.

பஞ்சபாண்டவர்களும், கிருஷ்ண பரமாத்மாவும் வைத்திருந்த சங்குகளுக்குத் தனித்தனி பெயர்கள் இருந்தன. தருமரிடம் இருந்த சங்கின் பெயர் அனந்தவிஜயம். வீமனிடம் இருந்த சங்கு பௌண்ட்ரம். அர்ச்சுனனிடம் இருந்த சங்கு தேவதத்தம். நகுலனது சங்கின் பெயர் சுகோஷம். சகாதேவனது சங்கு மணிப்புஷ்பகம். ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்தது பாஞ்சஜன்யம் என்ற பிரபல சங்கு.

சங்கு தோன்றியதைப் பற்றி புராணங்களில் ஒரு கதை சொல்லப்படுகிறது. சங்காசுரன் என்னும் அசுரன் தேவர்களைப் போரில் வெற்றிகொண்டு அவர்களிடம் இருந்து வேதங்களைத் திருடிக்கொண்டு கடலுக்கு அடியில் பதுங்கிக் கொண்டான். தேவர்கள் மகா விஷ்ணுவிடம் போய் முறையிட அவர் மத்ஸ்ய (மீன்) அவதாரம் எடுத்து சங்காசுரனைக் கொன்றார். அப்போது சங்காசுரனின் தலை மற்றும் காதில் இருந்து, சங்கைப் போன்ற தோற்றம் உள்ள எலும்பினை எடுத்து ஊத அதில் இருந்து "ஓம்" என்ற ஓசை எழுந்தது என்றும் அந்த ஓசையில் இருந்து வேதங்கள் வெளிப்பட்டன என்றும் சொல்லப்படுகிறது. சங்காசுரனிடமிருந்து தோன்றியதால் தான் அதற்கு சங்கு என்ற பெயர் ஏற்பட்டது. மகாவிஷ்ணு தன் நான்கு கைகளில் ஒன்றில் பாஞ்சஜன்யம் என்ற அந்த சங்கை எப்போதும் ஏந்திக் கொண்டிருக்கிறார். தர்மம் என்கிற உயர் அம்சத்தை சங்கு குறிப்பதாகவும் எனவே தர்மத்தை நிலைநாட்டும் இறைவன் சங்கைத் தன் கையில் எப்போதும் ஏந்திக் கொண்டிருக்கிறார், என்றும் பெரியோர் கூறுகிறார்கள்.

சங்கையும் சக்கரத்தையும் ஏந்திக் கொண்டிருப்பதால் அவருக்கு "சங்கு சக்ரதாரி" என்ற பெயர் உண்டு. இவ்வாறு சங்கு உருவானதால் சங்கொலி அதர்மத்தின் அழிவையும், தர்மத்தின் வெற்றியையும் காட்டுகிறது. சங்கு பிறந்த கதைக்கேற்ப சங்கை காதருகில் வைத்துக் கேட்டால் கடல் அலைகளின் ஓசையை நம்மால் கேட்க முடியும். வேதங்களின் பொருளான ஓம்கார மந்திரத்தைத் தருவதாலும், தர்மத்தை நிலைநாட்டும் பொருளைத் தருவதாலும் பூஜையறையில் இறைவன் முன்பு வைத்து வணங்கப்படும் அளவு சங்கிற்கு சிறப்பு உண்டு.

மங்கலகரமான பூஜை நேரங்களில் அமங்கலமான வார்த்தைகளோ, பேச்சுக்களோ பக்தர்களின் காதில் விழுந்து பக்தி மனோபாவத்தைக் குறைத்து விடாதிருக்கவும் சங்கு ஊதுவது உதவுகிறது. மேலும் சங்கு ஊதுவது ஆன்மிக ரீதியாக அல்லாமல், ஆரோக்கிய ரீதியாகவும் உதவுகிறது. சங்கு ஊதும்போது நாதமானது மூலாதாரத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து எழுகிறது. அதனால் சங்கு ஊதுவதன் மூலம் மூலாதார சக்கரம் நன்றாக செயலாக்கம் பெறுகிறது. மேலும் சங்கு ஊதுவதினால் மூச்சு ஆழப்பட்டு, நுரையீரல் செயல்படுவதும் சீராகிறது. சங்கிற்கு உடலைப் பாதிக்கும் நுண்கிருமிகளை அழிக்கும் தன்மை உள்ளது என்று நம் முன்னோர் நம்பினார்கள். அதனால்தான் தீர்த்தம் சங்கில் தரப்படுவது விசேஷமாகக் கருதப்பட்டது. குழந்தைகளுக்கும் அக்காலத்தில் மருந்தையும், பாலையும் சங்கில் ஊற்றித் தரும் வழக்கம் நம் வீடுகளில் இருந்தது.

கோயில்களிலும், வீடுகளிலும் பூஜை செய்யும் போது மணி அடிப்பதும் கூட சங்கு ஊதுவதைப் போன்றே மங்கல ஒலியாகக் கருதப்படுகிறது. மணி அடிக்கும் போதும் ஓம்கார ஒலி ஒலிக்கிறது. பூஜை நேரங்களில் தெய்வீக சூழ்நிலைக்கு பொருந்தாத ஓசைகளை மூழ்கடித்து இறைவனிடம் மனம் லயிக்க மணி அடிப்பதும் உதவுகிறது. கோயில்களில் பெரிய பெரிய மணிகள் தொங்கவிடப்பட்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அவற்றை அடிப்பதில் பெரியோர் முதல் சிறியோர் வரை ஆர்வம் காட்டுவதுண்டு. அந்த மணிகளை அடிப்பதன் காரணம் குறித்து சிலர் தான்தோன்றித்தனமாக ஏதேதோ சொல்வது உண்டு. இறைவனை உறக்கத்தில் இருந்து எழுப்புவதற்காக மணி அடிப்பதாகவும், தங்கள் வருகையை இறைவனுக்குத் தெரியப்படுத்துவதற்காக மணி அடிப்பதாகவும் சிலர் அறியாமையால் சொல்வதுண்டு. எழுப்பி தெரியப்படுத்த வேண்டிய அவசியம் இறைவனுக்கு இல்லை மணி அடிப்பது அறியாமை உறக்கத்தில் ஆழ்ந்து இருக்கின்ற நம்மை அதில் இருந்து தட்டி எழுப்பத்தான். அந்த ஓங்கார ஒலியைக் கேட்டவுடன் இறையுணர்வு எழும்பி நம் மனதினை ஒருநிலைப்படுத்த நாம் செய்யும் ஆயத்தம் தான் மணியை அடிப்பதன் உண்மைப் பொருள். பண்டைய காலங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பிரதான கோயில் இருக்கும்.

இறைவனுக்குச் செய்யப்படும் பூஜைகளின் போது கோயில்களில் இருக்கும் பெரிய மணிகள் அடிக்கப்படும். சங்கு ஊதப்படும். அந்த ஒலி அந்தக் கிராமம் முழுவதும் கேட்கும். பூஜையில் கலந்து கொள்ள ஆலயத்திற்கு நேரில் செல்லும் சூழ்நிலை எல்லோருக்கும் இருக்கும் என்று சொல்ல முடியாது. வேலை உள்ளவர்கள், உடல் நலம் குன்றியவர்கள் போன்றவர்கள் பூஜையில் பங்கேற்க முடியாது. கோயில் மணியின் பலத்த ஒலியும், சங்கொலியும் கேட்கும்போது வேலை செய்பவர்கள் தங்கள் வேலையை அப்படியே நிறுத்தி விட்டு தாங்கள் இருக்கும் இடத்திலேயே இறைவனை கணநேரம் தொழுவார்கள். அதே போல் உடல் நலம் குன்றியவர்களும் அந்த நேரத்தில் வீட்டில் இருந்தபடியே கணநேரம் இறைவனை வணங்குவார்கள். இப்படி மானசிகமாக இருக்கும் இடத்திலேயே இறைவனைத் தொழும் மங்கலமான சூழ்நிலையை மணிஒலியும், சங்கொலியும் ஏற்படுத்தித் தருகிறது. ஊருக்கே கேட்கும் வண்ணம் பெரிய பெரிய ஆலய மணிகளை அடிப்பதன் உள்ளார்ந்த அர்த்தம் மிக உன்னதமானது. கிராமமானாலும் நகரமானாலும் நீங்கள் இப்படிக்கோயில் மணியோசையும், சங்கொலியும் கேட்க நேர்ந்தால் மேலே சொன்ன காரணத்தை நினைவு கொள்ளுங்கள். இறைவனை நினைக்க நல்ல சந்தர்ப்பமாக அதை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இருக்கும் இடமே கோயில். அந்த மணியோசையும், சங்கொலியும் உங்களுக்காகவே ஒலிக்கின்றன.

எல்லாவற்றையும் ஒரு கணம் ஒதுக்கி வைத்து விட்டு எல்லாம் வல்ல இறைவனை ஒரு கணம் மானசிகமாக வணங்குங்கள். எத்தனையோ விதங்களில் நேரத்தை நாம் வீணாக்குகிறோம். அப்படி இருக்கையில் அந்த ஒரு கணத்தில் மனதை இறைவனிடம் திருப்புவதால் நம் நேரம் பெரிதாக வீணாகி விடப்போவதில்லை. மாறாக கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்கிப்பெறும் பயனை நாம் அந்தக் கணத்தில் பெற்று விடுகிறோம் என்பதை நினைவில் வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் வழிபாடு

வைரவரை வழிபட்டால் நிச்சயம் உடனே கைமேல் பலன்கள் கிடைக்கும். காலம், காலமாக உள்ள இந்த உண்மையை சமீபகாலமாகத்தான் மக்கள் முழுமையாக உணர்ந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர். வைரவர் என்றால் பக்தர்களின் பயத்தை நீக்குபவர் என்று பொருள். எல்லா கிரகங்களையும், நட்சத்திரங்களையும் கட்டுப்படுத்துபவர் இவர்தான். சிவபெருமானின் அம்சமாக வைரவர் கருதப்படுகிறார்.

ஈசனின் மகனாகவும் புராணங்கள் இவரை குறிப்பிடுகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்து கோடானு கோடி மக்களை இவர் காத்துவருகிறார். இதற்காகத்தான் இவருக்கு திரிசூலம் ஆயுதமாக வழங்கப்பட்டுள்ளது. இதனால்தான் வைரவர் வழிபாடு கைமேல் பலன் என்ற பழமொழி ஏற்பட்டது.

வைரவா ....” என்று மனதுக்குள் நினைத்த பாத்திரத்தில் அவர் நம்முன் வந்து நிற்பார். அவருக்கு நாம் பூஜை செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, கஷ்டமான நேரங்களில் நாம் மனதை ஒருமுகப்படுத்தி நினைத்தாலே போதும், வைரவர் ஓடோடி வந்து உதவுவார். வைரவர் பற்றற்ற நிலையில் நிர்வாணமாக, நீல நிற உடலமைப்புடன் இருப்பவர்.

எனவே எல்லாரும் அவரைத் தொட்டு வணங்கக் கூடாது. அவர் பாதங்களில் பூக்களைப் போட்டு வழிபடலாம் வைரவர் மொத்தம் 64 வடிவங்களில் மக்களுக்கு அருள்பாலித்து வருகிறார். அந்த 64 வடிவங்களில் கால வைரவர் தனித்துவம் கொண்டவராகக் கருதப்படுகிறார்.

கால வைரவருக்கு தனிக்கோவில் கட்டக்கூடாது என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. அதனால் சில தலங்களில் மட்டுமே கால வைரவ வழிபாடு உள்ளது. அஷ்டமி நாள் வைரவரை வணங்க உகந்த நாளாகும்.

பீட்ரூட்டை வெட்டி வேகவைத்து அந்த தண்ணீரில் கலந்த சாதம், தேனில் ஊறவைத்த உளுந்து வடையை மாலையாக சாற்றுதல் மற்றும் வெண் பூசணிக்காய் வெட்டி பலியிடுதல், எலுமிச்சை சாதம் படைத்தல் போன்றவைகள் வைரவருக்கு மிகவும் பிடித்தமான விஷயங்கள் ஆகும்.

இவரின் அருள் இருந்தால் அஷ்ட சித்தியும் கைகூடும். வைரவரின் உடம்பில் நவக்கிரகங்களும், அனைத்து ராசிகளும் அடங்கியுள்ளன. எனவே மேஷ ராசிக்காரர்கள் இவர் சிரசினை பார்த்து கும்பிட்டால் தோஷம் தீரும்.

ரிஷபம் கழுத்து; மிதுனம் தோள், புஜம்; கடகம் மார்பு; சிம்மம் வயிறு; கன்னி குறி; துலாம் தொடை; விருச்சிகம் முழங்கால்; தனுசு, மகரம் முழங்காலின் கீழ்பகுதி; கும்பம் கணுக்கால்; மீனம் பாதம் ஆகிய பகுதிகளை பார்த்து கும்பிட்டால் தோஷம் தீரும். நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற வேண்டுமானால் சாம்பல் பூசணி விளக்கினை கால வைரவர் சன்னதியில் ஏற்றிவிட்டு கோவிலினை 18 சுற்றுகள் அல்லது 9 சுற்றுகள் சுற்றிவர வேண்டும். இந்த வழிமுறையினை 12 ஞாயிற்று கிழமை, 3 தேய்பிறை அஷ்டமி தினங்களில் செய்து வந்தால் நீங்கள் நினைத்த காரியம் விரைவில் நிறைவேறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பாக்கியம் இல்லாத கணவன் மனைவியர் ஆறு தேய்பிறை அஷ்டமியில் பைரவருக்கு சிகப்பு அரளியால் பைரவ சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் விரைவில் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பைரவர் திருமேனியின் முன்னால் மிளகை சிறுதுணியில் சிறுமூட்டையாக கட்டி அகல் விளக்கில் வைத்து நல்லெண்ணெய் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்தால் இழந்த பொருளும் சொத்துக்களும் திரும்பக் கிடைக்கும்.

வளர்பிறை அஷ்டமியில் சதுர்கால வைரவருக்கு சொர்ண புஷ்பம் அல்லது 108 ஒரு ரூபாய் காசுகள் வைத்து அர்ச்சனை செய்து அந்த காசுகளை அலுவலகம் அல்லது வீட்டில் உள்ள பணப்பெட்டியில் வைத்து பூஜித்து வந்தால் செல்வம் குறையாது செழிக்கும்.

சனீஸ்வரரின் குரு வைரவர் என்பதால், பைரவரை வணங்கினால், சனிபகவான் மகிழ்ந்து நமக்கு அதிக துன்பங்களைத் தரமாட்டார். எனவே நாம் சனிக்கிழமைகளில் வைரவரை வணங்கினால் சனி பகவானால் உண்டாகும் இன்னல்கள் எல்லாம் உடனே நீங்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் ராகுகால நேரத்தில் வைரவரை வணங்க வேண்டும். அதனால் உடனே நன்மை உண்டாகும்.

6 சனிக்கிழமைகளில் 6 எண்ணெய் தீபம் ஏற்றி வழிபட்டால் தடைப்பட்ட அனைத்து காரியங்களும் நிறைவேறும்தடைப்பட்ட திருமணம் கைகூடும். குடும்ப ஒற்றுமை நிலைக்கும். இவ்வளவு பெருமைகளையும் அருட்திறனும் கொண்டு விளங்கும் வைரவரை சிவாலயங்களிலும் தனி ஆலயங்களிலும் கண்டு வழிபடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இந்துசமய செல்நெறியில் இளைஞர்களின் பங்கும், பணியும்.

**அறிமுகம்**

தொன்மையும், சிறப்பும் மிக்க சனாதனதர்மம் எனப்படும் இந்துசமயம் சமகாலத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலையில் காணப்படுகின்றது. மாறிவரும் உலகில் சமய, சமூக விழுமியங்கள் பல இன்று கேள்விக்குரியதாக விளங்குகின்றன. இத்தகைய சூழ்நிலையில் இந்துசமயத்தை மேம்பாடு பெறச்செய்வதற்கு இந்து சமுதாயத்தில் இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பங்கு பற்றியும்,அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இந்து சமயம் - ஒரு விளக்கம்**

சமயம் என்பது ஒரு வாழ்க்கை நெறியாகும். மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ சிறந்த பண்பாட்டு விழுமியங்களை இந்து சமயம் எடுத்துரைக்கின்றது. தென்னாசியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல்வகைப்பட்ட இனங்கள் மத்தியில் நிலவிவந்த பல வழிபாட்டு முறைகளும் தத்துவங்களும் காலப்போக்கில் இணைந்து இந்து மதம் எனும் பெயரைப்பெற்றது.

01. இந்துசமயம் ஏறக்குறைய 850 மில்லியன் இந்துக்களை கொண்ட உலகின் மூன்றாவது பெரிய மதமாகும்.

02. தனிநாயகம் அடிகளார் இந்து சமயத்திற்கும், தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்பினை,

03. "இந்துமத முனிவர்களும், புலவர்களும் இல்லாமல் இருந்தால் தமிழ் மொழி என்றோ மறைந்து போயிருக்கும்.

எனக் குறிப்பிடுவது இங்கு நோக்கற்பாலதாகும்..

**இளமைப்பருவம் - ஒரு விளக்கம்.**

இளமைப் பருவம் எதிர்கால வாழ்வியலின் சிறப்புக்கான அடித்தளமான செயற்பாடுகளைச் செய்யும் பருவம். இங்கு இளமைப்பருவம் என்பது ஆண், பெண் இருபாலரையும் குறித்து நிற்கின்றது. நாலடியார் எனும் தமிழ் நூலுக்கு உரை வகுத்த தருமர் எனும் தமிழ் அறிஞர் இளமைப் பருவத்தை வருமாறு விளக்கிக்கூறுகிறார்.

"பதினாறு வயதுக்கு மேல் முப்பத்திரண்டு வயதுக்குள் விடயங்களிலே முயங்கப்பட்ட காமர் குழவிப்பருவம்.[4]

இக்குறிப்பிட்ட வயதெல்லையுள் மனிதவாழ்வியலுக்கான சிறந்த பயிற்சி ஒன்று நடைபெறுகின்றது. உயர் கல்வி, தொழில்பேறு, மணவாழ்வு, குழந்தைப்பேறு எனும் பல பேறுகளைப் பெறும் காலமும் இதுவாகும். "வறியவன் இளமை போல் வாடிய சினை" எனும் கலித்தொகைத்தொடர் இளமைக்காலத்தில் வறுமை, இன்னல்தரும் என்பதை உணர்த்துகின்றது. ஔவைப்பிராட்டியும், "கொடிது கொடிது இளமையில் வறுமை" எனக்கூறியுள்ளார்.

இன்றைய நவீன உலகில் இளமைப்பருவம் என்பது விடலைப்பருவத்தினை அடுத்துவரும் பருவத்தைக் குறிக்கின்றது. உலக சுகாதார நிறுவனம் விடலைப்பருவம் என்பதனை 10 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட பருவத்தினர் என்றும், இளமைப்பருவம் என்பதனை பொதுவாக 19 வயதுக்கும் 24 வயது அல்லது 29


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுக்கும் இடைப்பட்ட வயதினர் என்றும் வரையரை செய்துள்ளது.[5] இவர்கள் ஏனைய பருவ வயதினரைவிட குறிப்பிடத்தக்க பண்புகளை கொண்டு விளங்குவார்கள். அதாவது, மனிதன் தனது குறிக்கோள், இலட்சியம் என்பவற்றையும் தனது அந்தஸ்து, கௌரவம், உயர்வு என்பவற்றையும் வளர்த்துக்கொள்ளும் ஓர் ஆரோக்கியமான பருவகாலமாக இளமைப்பருவம் விளங்குகின்றது. எனவே சென்றால் திரும்பாத இந்த இளமைப்பருவத்தை நாம் எமக்கு சாதகமானதாகவும், எதிர்கால சந்ததியினரின் வாழ்விற்கு பிரகாசிக்கக்கூடியதுமான வழியில் பயன்படுத்திக்கொள்ள முனையவேண்டும்.

**இந்துசமயத்தில் இளைஞர்களின் பங்களிப்பு**

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய இந்துசமயத்தின் தனித்துவமான இறை, ஆன்மா, உலகு பற்றிய சிந்தனைகள், சடங்காசாரங்கள், சிறப்பியல்புகள் என்பன காலத்திற்கேற்ப மாறியே வந்துள்ளன. இவ்வாறான வளர்ச்சிப் பாதையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் இளமைப்பருவத்தினர் மிககுறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியுள்ளதை காணமுடிகின்றது. இவற்றினை இலக்கியங்களிலிருந்தும், வரலாறுகளிலிருந்தும், சமகாலசெல்நெறிகளிலிருந்தும் எடுத்து நோக்கலாம்.

இந்து சமய முதல் நூல்களாகிய வேத இலக்கியங்களில் ஞான காண்டம் எனப்படும் உபநிடதங்களைக் கற்போராக இளைஞர்களே குறிப்பிடப்படுகின்றனர். உபநிடதங்களில் இடம்பெறுகின்ற ஸ்வேதகேது, நஷிகேதன் போன்றோர் இதற்கு சான்றாவர். இதிகாசங்களைப் பொறுத்தவரையிலும் பாட்டுடைத் தலைவர்களாகப் பேசப்படும் இராமன், பாண்டவர்கள், கௌரவர்கள் போன்றோரும் இளைஞர்களாகவே சித்தரிக்கப்படுகின்றனர். மேலும் பகவத்கீதை கூட இளைஞர்களாகிய அர்ச்சுனனிற்கே குருஷேத்திர பூமியில் உபதேசிக்கப்பட்டுள்ளதையும் நோக்க வேண்டும். புராணங்களில் மார்க்கண்டேய புராணத்தில் மார்க்கண்டேயரும், ஸ்காந்த புராணத்தில் முருகனும் இளைஞர்களாக சித்தரிக்கப்படுகின்றார்கள். இவை யாவும் இந்து சமய வளர்ச்சிப் போக்கில் இளைஞர்களுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பு உள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

பல்லவர் காலத்தில் பக்தி இயக்கங்களுக்கு தலைமை தாங்கிய திருஞானசம்பந்தரும், சுந்ததரரும், இளைஞர்களாவே சித்தரிக்கப்படுகின்றார்கள். இவர்களது இளமைத் தலைமைத்துவத்தால் பக்தி என்ற விருட்சம் வளர்ந்தது மட்டுமன்றி இந்து சமயத்தில் நிறுவனத்தன்மையும், விழிப்புணர்வும் ஏற்பட்டது. நவீன சீர்திருத்த இயக்கத்தை முன்னெடுத்துச் சென்ற ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி போன்றோரும் இளைஞர்களாக இருந்து சமயத்தை வளர்த்தெடுத்துள்ளனர். இந்து இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்த விவேகானந்தரும் ஓர் இளைஞனே என்பது நோக்கற்பாலதாகும். அந்தவகையில் இந்து சமய வளர்ச்சியில் காலத்திற்குக் காலம் பல்வேறு சமய விழிப்புணர்வை ஏற்படுத்திய பெருமை இளைஞர்களுக்கே உரியதாக அமைகின்றது.

**சமகாலத்தில் இளைஞர்களின் நிலை**

முன்னைய காலங்களை விட, சமீப காலங்களில் இளம் சமுதாயத்தினர் மத்தியில் பல்வேறு சவால்களும், பிரச்சினைகளும் புதிய வடிவில் எழுந்துள்ளன. கடந்த மூன்று தசாப்தகாலமாக நிலவிய யுத்தம், அகதி வாழ்க்கை, பட்டினிச்சுமை, அதிர்ச்சி, சோகம், பயம், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம், ஆகியவற்றால் நலிவடைந்துள்ள இந்துக்களது வாழ்வியல் அவலங்கள், அதன் விளைவாக இந்துக்களது சிந்தனைத் தெளிவின்மை போன்ற காரணங்களினால் சமூகப் பெறுமானங்கள், விழுமியங்கள் வலுவிழக்கப்படவும், மீறப்படவும் தூண்டுதல் அளித்தன. இவ்வாறான நலிந்த சமூக, பண்பாட்டு சூழ்நிலையில் தான் இளம் சமுதாயத்தினர் திசைமாற வழியேற்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நேரத்தில் இந்து சமய வளர்ச்சியில் இன்றைய இளைய தலைமுறையினரின் பங்களிப்பு அருகி வருவதற்குரிய நடைமுறைசார் விடயங்களை சிந்திப்பது காலத்தின் தேவையாகும்.

**சமகால இந்துசமுதாயத்தில் இளைஞர்களின் பங்கு**

இன்று இளையதலைமுறையினர் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று நவீன கல்வித்திட்டத்தின் தவறான கல்விச்சிந்தனைகள் ஆகும். சமயபாடத்தின் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடானது வெறும் போதனையாகவும், பரீட்சையை நோக்கமாகவும் கொண்டு அமைகின்றதேயொழிய மனிதமேம்பாட்டை அறிவியல் ரிதியாக வளம்படுத்துவதாக அமையவில்லை.

ஆளுமையையும், பண்பாடுகளையும் வளர்க்க வேண்டிய கல்வித்திட்டம் இன்று வெறும் தகவல் தரும் ஒன்றாகவே உருவாகியுள்ளது. கல்வியின் நோக்கம் ஒழுக்கமும் ஆளுமையும் திறனும் கொண்ட தனிமனிதனை உருவாக்குவதாகும். ஆனால் இன்று பொருளாதாரம் ஒன்றையே பிரதான இலக்காக கொண்ட கல்விக் கொள்கையைக் கொண்டிருப்பது கவலை தரும் அம்சமாகும். இதனால் இளைஞர்களும் பொருளாதாரத்தையே குறிக்கோளாக கொண்டு திசைமாற்றப்படுகின்றார்கள்.

இளைய தலைமுறையினரிடையே இந்து சமய விழுமியங்களுடன் இணைந்த சமயக் கல்வியை போதிப்பது மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. பாடசாலைக்கல்வியிலும் சிறப்பாக சிரேஷ்ட இடைநிலை மட்டத்தில் மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் இந்து சமயக்கல்வி மிக மிக முக்கியமானது. சிரேஷ்ட இடைநிலைமட்டப் பருவத்தினரை குமரப்பருவம், கட்டிளமைப்பருவம் என்று உளவியலாளர் அழைப்பர். சிரேஷ்ட இடைநிலை மட்டப் பிள்ளைகளது விருத்தி உடல், உள வளர்ச்சியை மையப்படுத்தியதாகும். அதன் விளையாக உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள் மலிந்து காணப்படலாம். இப்பருவத்தினரை மையப்படுத்தி நடைமுறைசார் சமய, ஒழுக்க கல்வியை போதிக்க தவறியமை எமது இளம் தலைமுறையினரின் வளர்ச்சிக்குத் தடையாக அமைகின்றது. குறிப்பாக, யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் வெளியிடப்பட்ட பள்ளிப்பருவ பெண்களின் கருத்தரிப்பு புள்ளிவிபரங்களின் பிரகாரம், 2011 ஜனவரி - 2011 மே மாதம் வரையிலான காலப்பகுதியில் பள்ளிப்பருவ பெண்களின் கருத்தரிப்பு எண்ணிக்கை 211ஆக காணப்படுகின்றது. இது கடந்த 03 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் சுமார் 61% அதிகரிப்பினை காட்டுகின்றது.[6] இது எமது பிரதேச ஒட்டுமொத்த சீரழிவை எடுத்துக்காட்டுகின்றது.

இந்துசமயத்தில் ஆழமாகக்காணப்படும் வாழ்வியல் உண்மைகள் விஞ்ஞான ரீதியில் தெளிவுபடுத்தப்படுவதில்லை. இதனால் இளைஞர்கள் மத்தியில் இவையாவும் மூடநம்பிக்கைகள் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. இதனால் சமய வளர்ச்சியில் இளம்பருவத்தினர் பங்களிப்பு அருகிவருகின்றது.

ஒய்வு நேரத்தை பயனுள்ள மகிழ்ச்சியான வழிகளில் செலவிட மாணவர்களுக்கு கல்விக்கூடங்கள் பயிற்சி அளிக்க வேண்டும். அது தவறினால் ஒய்வுநேரம் சலிப்பூட்டும் சுமையாக அமைவதுடன், சமூக சிதைவுகளுக்கும், காரணமாக அது அமைந்துவிடுகின்றது. ஆலயங்கள் "சமுதாய மையங்கள்" என்பதனைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் அவசியமாகும். அதாவது, வழிபாட்டுத் தலங்களாக மட்டுமன்றி சமுகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு நிறுவனமாக வளர வேண்டும். ஆனால் இன்று கட்டிடங்கள் பெருகுகின்றனவே தவிர கருணைகள் பெருகவில்லை. இதனால் ஆலயங்களின் ஊடாக சமுக செயற்பாடுகளை செய்யத் துடிக்கும் இளம்தலைமுறையினர் ஆலயத்திற்கு செல்ல பின்நிற்கின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் வியக்கவேண்டும் என்பதற்காக பயனற்ற செயல்கள் செய்யும் இளமையின் குணஇயல்பு காரணமாக உடை, சிகையலங்காரம் முதற்கொண்டு கொள்கை, கோட்பாடுகள் வரை மேற்கு கலாசாரத்தைத் தெய்வமாக வழிபடும் ஒரு சில இளம்தலைமுறையினரின் செயற்பாடு ஆன்மிக பிறழ்வுக்கு வழிவகுக்கின்றது.

ஆலய உற்சவங்களுக்கு செல்லும் இளம் தலைமுறையினர் சமய, கலாசார உடைகள் அணியாது செல்வது கவலைக்குரிய விடயமாகும். பல ஆலயங்களில் "ஆலயத்திற்கு வருகை தருவோர் கலாசார உடைகளுடன் வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்," எனக்குறிப்பு எழுதும் நிலைக்கு எமது இளம் சமுதாயத்தினர் மத்தியில் சமய விழுமியங்கள் தேய்வடைந்துள்ளதைக் காணலாம்.

மகோற்சவ காலங்களில் தீர்த்த உற்சவத்தன்று தீர்த்த கேணியில் இளைஞர்களால் செய்யப்படும் களியாட்டங்கள் கீழ்த்தரமான செயல்பாடுகளாகும். "தீர்த்த தண்ணீரை பக்தர்களுக்கு ஊற்றும் செயற்பாட்டிற்கு தீர்வு காணவேண்டும்"[7] என நல்லை ஆதின முதல்வரின் கோரிக்கை சிந்திக்கத்தக்கது. இந்நிகழ்வு இளைஞர்களின் ஆன்மிக பிறழ்வை எடுத்துக்காட்டுகின்றது.

இறைவனுக்கு செய்யப்படுகின்ற சோடச உபசாரங்களில் முக்கிய இடம் வகிக்கும் கலைகள் இன்று கீழ்நிலைக்கு செல்கின்றன. நவசந்திக் கிரியைகளில் ஒவ்வொரு சந்திகளிலும் என்ன வேதம், ராகம், தாளம், பண், நிருத்தம், வாத்தியம் இடம்பெறவேண்டும் என்பதனை ஆகமங்கள் விதித்துள்ளன. ஆனால் இன்று வெளிவீதி சுற்றிவரும் போது இடம்பெறும் தவில் நாதஸ்வர கச்சேரியின் போது இளம்தலைமுறையினரின் வேண்டுதலுக்கினங்க சினிமாப்பாடல்கள் வாசிக்கப்படுகின்றன. இந்நிகழ்வைக் கண்டித்து இந்து அபிமானிகள் கூட்டாக சேர்ந்து "இந்துக்கோயில்களில் சினிமாப்பாடல்கள் ஒலிபரப்புவது தடைசெய்யப்பட வேண்டும்."[8] என ஊடகங்களில் கோரிக்கை விடுத்துள்ளமை இன்றைய நிலையில் ஆலயங்களில் இடம்பெறும் சீர்கேடுகளை காட்டுகின்றது.

ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்காலத்தில் இளைஞர்களின் பக்தி சிரத்தைக்கு மேலாக களியாட்ட உணர்வே மேலோங்கி இருப்பதைக் காணமுடிகின்றது. வாணவேடிக்கைகள், அதிக சத்ததுடன் கூடிய ஒலிபெருக்கி, பாட்டுக்கச்சேரி போன்ற நிகழ்வுகளில் அதீத நாட்டம் கொள்ளப்படுவதினால் ஆன்மிக செயற்பாடு குறைவடைகின்றது. ஆலயங்களில் மெய்யடியார்கள் போல கோலங்காட்டி நடைமுறை வாழ்வில் பொய்யுடையவராய் நடந்து கொள்ளும் சிலரின் செயற்பாடு இளம் தலைமுறையினரிடம் நம்பிக்கையீனத்தையும், கோபத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்துகின்றது.

ஆலயங்களில் கிரியைகளும், வழிபாடும் பெறும் முக்கியத்துவம் ஆன்மஞான உபதேசங்களுக்கு வழங்கப்படுவதில்லை. பிரசங்க மரபு, கதாப்பிரசங்கம், வில்லிசை, நடன, நாடக கூத்துக்கள், புராண படல மரபு, என்பன அருகி வருகின்றன. கிரியைகளின் பின்னர் "பஞ்சபுராணம் ஓதுக" என சிவாசாரியர் கூறுகின்ற நேரத்தில் இளம் தலைமுறையினர் பாடுவதற்கு தயங்கும் நிலை காணப்படுகின்றது. பாடுபவர்களும் பஞ்சபுராணத்தில் பண், பொருள் விளங்காது பாடுகின்றார்கள். ஆத்மிக உள நலத்திற்கான செயல்பாடுகளான பிரசங்க மரபு, நற்சிந்தனை, கூட்டுப்பிரார்த்தனை என்பன ஆலயங்களில் அருகிவருகின்றன.

அறிவையும், அன்பையும், மனிதப்பண்பாடுகளையும் வளர்க்கவேண்டிய சமகால ஊடக கலாசாரம் பொருளாதாரத்தை ஈட்டுவதையே பிரதான நோக்காக கொண்டு விளங்குகின்றது. இளைஞர்களின் மூளையையும், உணர்வுகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிக்கும் சாதனமாக இன்றைய நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் காணப்படுகின்றன. தொலைக்காட்சியும், தொலைபேசியும், வலையமைப்பும் வழிநடத்தும் தொலைநோக்கற்ற நிலை இன்றைய இளம் சமுதயத்தினரிடையே சமய உணர்வைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. குறிப்பாக பெரும்பாலான இளம்சமுகத்தினர் தமது நேரத்தின் பெரும்பகுதியினை இவற்றிற்கு செலவிட்டு வருவதினால் சமய வளர்ச்சியில் இவர்களினால் அதிக பங்களிப்பு செய்ய முடியாது உள்ளது.

இளமையின் தேவைகளை சரியான முறையில் நிறைவுசெய்யப்படாதபோதும், குடும்பச்சூழல், அன்பான அரவனைப்பு, இதமான கவனிப்பு கிடைக்கப்பெறாதபோதும், இளைஞர்களின் மனம் சமுதாய வேரினையே செல்லரித்துவிடும். இன்று குடும்ப செலவுக்கான வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் நோக்கில் தாயும், தந்தையும் வேலைக்கு செல்ல பிள்ளைகள் தனிமையாக இருக்கும் போது தொலைக்காட்சி அலைவரிசைகளை பார்க்க அனுமதிக்கப்படுகின்றார்கள். இந்நிலையில் அவர்கள் பார்த்த விடயங்களை தமது நடைமுறைவாழ்விலும் செயற்படுத்த முனைவதினால், ஆக்கத்திற்குத் துணைபோகவேண்டிய இளைஞர்கள் சமுகவிரோத செயற்பாடுகளான மது, விபச்சாரம், கொலை, கொள்ளை, வன்புணர்ச்சிச்சம்பவங்களில் இளைஞர்கள் கையே மேலோங்க காரணமாக அமைகின்றது. இதனால் இளைஞர்கள் மத்தியில் ஆன்மிக நாட்டம் குறைவடைகின்றது.

தற்கால முதுமை இளமையிடம் பொறுப்புக்களை கையளிக்க விரும்பாது தானே தலைமைத்துவம் பேணமுயல்கின்றது. ஆலய நிர்வாகம், சமய நிறுவனங்கள் என்பவற்றின் தலைமைத்துவப் பொறுப்புக்களை இளம் சமுதாயத்தினரிடம் கொடுப்பதற்கு முதியவர்கள் தயங்கும் நிலை காணப்படுகின்றது.

எமது பிரதேசத்தில் கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற முரண்பாடுகள் முடிவுற்ற போதிலும், அவற்றின் தாக்கங்கள் இன்றும் மறைமுகமாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதில் அதிகமாக பதிக்கப்பட்டவர்கள் எம்பிரதேச இளம்தலைமுறையினரே ஆவார்கள். இவர்கள் எமது சமுகத்திலிருந்து புறந்தள்ளப்பட்டுக் கொண்டிருப்பது மிகவும் வேதனைதரும் விடயமாக உள்ளது. இதனால் சமய வளர்ச்சியில் பங்குகொள்ள இவ்விளைஞர்கள் தயக்கம் காட்டுகின்றார்கள்.

இன்றைய இளைஞர்கள் மத்தியில் சமய அனுஷ்டானங்களின் விதிமுறைகள், விரதங்கள் அருகிவருவதுடன், அவ்வாறு கடைப்பிடிக்கப்படும் விரதங்கள் கூட உரிய முறையில் நடைபெறுவதில்லை. விரதங்களை அனுஷ்டிக்கும் இளம்தலைமுறையினரில் ஒருசிலர் நாகரிகத்திற்காக விரதங்களை அனுஷ்டிப்பதும் கண்கூடு.

பெரும்பாலான அபரக்கிரியைகள் சமய விதிமுறைகளை தாண்டிச் செயற்படுகின்றது. பொருளாதார பலத்தைக்காட்டுவதற்கு "பாண்ட்வாத்திய இசைக்குழுவை" அழைப்பதும், வானவேடிக்கைளை செய்வதும், குளிர்பாணம் கொடுப்பதும் அவதானிக்க முடிகிறது. மண்டபங்களில் நிகழ்வுகளை நடாத்துவது, ஒருவருக்குப் பயன்படுத்திய கிரியை பொருட்களை மற்றவர்களுக்கும் பயன்படுத்துவது, அபரக்கிரியை செயற்பாடுகளை செய்யும் ஒருசிலர் மது அருந்துவது போன்ற நிகழ்வுகள் மனிதமனங்களைப் புண்படுத்திக்கொள்ளும் களியாட்ட செயற்பாடுகளாகும்.

இன்று பூர்வக்கிரியைகளில் சமய சடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது இளையவர்களின் விருப்பத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நிலை காணப்படுகின்றது. குறிப்பாக, புகைப்படம், வீடியோ எடுத்தல், விருந்தோம்பல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நிகழ்வுகள் சமய கிரியைகளை பின்தள்ளுகின்றது. முன்னைய காலங்களில் சிவாச்சாரியார்கள் ஊர்ப்பெரியவர்கள், அறிவுடையோர் முன்நிகழ்த்தி வைத்த திருமணம் இன்று வீடியோ எடுப்பவராலேயே நடாத்தப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது. திருமணங்களில் முன்னைய காலங்களில் போலல்லாது தற்பொழுது மணமகன், மணமகள் அலங்காரம் மாற்றமடைந்துள்ளது. சினிமா மோகத்தில் மூழ்கியுள்ள இளம்சமுதாயம் நடிப்பிற்காக அணியும் ஆடைகளை திருமணத்திற்கு அணியும் நிலை காணப்படுகின்றது. இதனால் சமய வளர்ச்சியினை முன்னெடுத்து செல்லவேண்டிய இளம் தலைமுறையினர் பூரணமான சமய, ஒழுக்க அறிவின்மையினால் தடம்புரளுகின்றமையைக் காணலாம்.

நம் இளைய தலைமுறையினர் எதிர்நோக்கும் மேலும் ஒரு பிரச்சனை "மதச்சார்பின்மை" என்ற சிந்தனை சதியாகும். அறிவியல், தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியினால் மதநம்பிக்கையின் செல்வாக்கு மறைந்து, பகுத்தறிவு என்ற பெயரில் இறைமறுப்புக்கு மட்டும் முதலிடம் வழங்கப்படும் இந்த நிலை ஆரோக்கியமற்றதாகும். இதனால் இளைஞர்கள் மத்தியில் ஆன்மிக உணர்வு சிதைவடைந்துவிடுகின்றது. பண்பாட்டு, கலாசார ஒழுக்க விழுமியங்களை உடைத்தெறிகின்ற இந்த சடவாத சிந்தனை இளைஞர் சமூகத்தை ஆட்டிப்படைக்கின்றது. சிற்றின்ப ஆசைகளை வளர்த்து, மனித மனங்களில் கொடூரத்தையும், காழ்ப்புணர்வையும் வளர்க்கும் இச்சிந்தனையின் தாக்குதலினால் நிலைகுலைந்து நிற்கும் இளைஞர் சமூகத்தின் போக்கு கண்டனத்திற்குரியது.

மேற்கூறிய பிரச்சினைகள் இந்துசமய வளர்ச்சியில் இளைஞர்கள் எதிர்கொள்வது ஆய்வின் மூலம் தெளிவாகின்றது. இனம்காணப்பட்ட இப்பிரச்சினைகளுக்கான தீர்வுத் தேடலையும் இந்நேரத்தில் சிந்திப்பது பொருத்தமானது.

**தீர்வும், முன்மொழிவுகளும்**

இளையதலைமுறையினரை நல்வழிப்படுத்தும் சிறந்த மார்க்கமாக கல்வி அமைகின்றது. தனிநாயகம் அடிகளாரும், "நிறையும் நீதியும் சங்ககாலத்தில் நிறைந்து நிலவுவதற்குக் கல்வி அறிவே அடிப்படைக்காரணம்". என்கிறார்.[9]

நல்லொழுக்கத்திற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிவகுப்பதே கல்வியின் நோக்கம் என்பது நாவலரின் திட்டவட்டமான முடிவாகும். "சமயமே குழந்தையை நல்லவனாக உருவாக்குவதில் அதிக பங்கை செலுத்துகின்றது. குழந்தையின் சமய நம்பிக்கைக்கு தீங்கு வரக்கூடிய வகையில் கல்வி அமையுமானல் கல்வியின் பயன் அற்றுவிடும்." [10] என்று ஆணித்தரமாக நாவலர் குறிப்பிடுகின்றார்.

அதுபோல ஸ்ரீ அரவிந்தரும் தேசியக் கல்விக் கொள்கையை வகுக்கும் பொழுது சமயக் கல்வி, ஒழுக்கக் கல்வி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றார். ஒழுக்க, சமயக் கல்வி முழுமையாக கல்வித்திட்டத்தில் இடம்பெற வேண்டும் இத்தகைய கல்வி குழந்தையின் இளம் பருவத்தில் இருந்து தொடங்கப் பெற வேண்டும்[11]

ஆகவே உயர்ந்த உள்ளத்திற்கு இளமையில் இருந்தே பயிற்சி பெறுவது கல்வியின் இறுதி இலட்சியமாக அமையவேண்டும். ஒழுக்கத்தின் அடிப்படையில், சமயத்தின் அடிப்படையில் அமைந்த கல்வித்திட்டத்தினாலேயே இவற்றை அடைய முடியும்.

மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் கலந்த சமயமாக எமது இந்துசமயம் விளங்குகின்றது. ஆதலினால் சமயம்சார் கருத்துக்கள் விஞ்ஞான நிலையில் முன்வைக்கப்படும் போது எமது வாழ்வியல் நீரோட்டத்திற்கு நம்பிக்கையுடன் கூடிய பிணைப்பு ஏற்பட வாய்ப்புண்டு. நாம் வாழும் சூழலை எதிரியாக நோக்காது, நட்புடன் கூடிய ஒரு சூழலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தக்கூடிய ஒரு மார்க்கமாக இந்துசமயம் விளங்குகின்றது. இச்சந்தர்ப்பத்திலே கலாநிதி அல்பேட் ஜன்ஸ்ரைன் அவர்களது கருத்தை நோக்கினால் "விஞ்ஞானம் கலவாத சமயம் நொண்டி, சமயம் இல்லாத விஞ்ஞானம் குருடு" [12] என்கிறார். எனவே, இந்துசமயத்தில் ஆழமாக காணப்படும் வாழ்வியல் உண்மைகளை விஞ்ஞான ரீதியில் தெளிவுபடுத்துவதன் மூலம் மாணவர்கள் மத்தியில் சமய விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிறந்த ஆரோக்கியமிக்க மனித வாழ்வை கட்டியெழுப்ப முடியும். அந்தவகையில் பாடசாலை மாணவர்களின் இந்துசமய பாடப்புத்தகங்கள் யாவும் சமய அறிவியல், சமய விழுமியம் சார் கருத்துக்களைக் கொண்டதாக சீர்திருத்தம் செய்யவேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஒய்வுநேரத்திற்கான கல்வியில் பயனுள்ள பல்வேறு ஒய்வுநேர செயல்களுக்கான கவர்ச்சிகளை மாணவர்களிடையே தோற்றுவிக்க வேண்டும். பிறஉயிர்கள் மீது அன்பு காட்டுதல், சேவை செய்தல், சூழல் மாசடையாது பேணல் போன்ற மனிதனை மனிதனாக்குகின்ற சமய விழுமியக்கல்வியை மாணவர்களுக்கு உரிய முறைப்படி புகட்டுவோமேயானல் சமீப காலங்களில் எம்மத்தியில் நிகழ்கின்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்தல், போரினால் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுதல், நோய்களிலிருந்து மக்களை பாதுகாத்தல், முதியோர் இல்லங்களுக்கு சென்று அவர்களுக்குத் தேவையான பராமரிப்புக்களை செய்தல் போன்ற செயற்பாடுகளை செய்து ஒய்வு நேரத்தை பயனுள்ள பொழுதாக மாற்றுவார். இதன்மூலம் நாகரிகமுள்ள சிறந்த சமூகத்தை உருவாக்கிக்கொள்ளமுடியும்.

1989ஆம் தொடக்கம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாடு பூராவாகவும் அறநெறி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படுகின்றமை வரவேற்க்கத்தக்க அம்சமாகும். பாடசாலைகளில் கற்ப்பிக்கத்தவறிய நடைமுறைசார் சமயக்கல்வியை போதித்த பெருமை கிராமங்கள் தோறும் உருவாக்கப்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு உரியதாக அமைந்துள்ளது. எனினும் பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள் சமயத்தைக் கற்பிப்பதற்கு முதல் பிள்ளைகளின் சமய வளர்ச்சிக்கான கல்வி வீட்டில் பெற்றோரால் ஆரம்பிக்கப்பட வேண்டும். காலை, மாலை இறைவழிபாடு, வீட்டுக்கிரியை, விழாக்கள், விரதங்கள், பெற்றோர், மூத்தோர், குரு போன்றவர்களை கனம்பண்ணுதல் போன்ற விழுமியங்களைப்பயில்வதற்கு பெற்றோர்கள் அடித்தளம் இட்டிருத்தல் வேண்டும். இதனைத் தனிநாயகம் அடிகளாரும், "நம்பண்பாட்டின் பழக்கவழக்கங்கள் குடும்பங்களில் கைவிடாது வளர்க்க வேண்டும்."[13] என்று கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கது.

இந்து சமய நம்பிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும். சிறந்த ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றை வலுப்படுத்தும் நோக்கிலும் விழிப்புணர்வு கருத்தரங்குகள், ஆன்மீக சொற்பொழிவுகள் மற்றும் சமய பயிற்சிப்பட்டறைகள் போன்றவற்றை நடாத்துதல் வேண்டும்.

இளம் சமுதாயத்தின் உரமான கைகளிலே வழிபாட்டு நெறியைப்பரப்பும் பொறுப்பைக் கொடுத்து, முதுமை பக்கபலமாக அருகிலே நின்று இணைந்து பணி செய்ய வேண்டும். இந்து சமய பெரியார்கள், இந்து சமய நிறுவனங்கள் மற்றும் இந்து சமய கல்விமான்கள் ஆகியோரின் முறையான வழிகாட்டலின் கீழ் இளம் சமுதாயத்தினர் இயங்கும்போது சிறந்ததொரு சமுதாயம் உருவாக வழியேற்படும். முதியவர்கள் தமது கடமையைச் செய்யத்தவறுமிடத்து, பெரியவர்களின் அங்கிகாரம் கிடைக்க வேண்டும் என ஏங்குவதிலும் பார்க்க அதை எவ்வாறு பெறலாம் என்பதை சிந்தித்து செயல்வடிவம் கொடுக்கவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தைக் கலைகளுடன் இணைத்துக் கற்பித்தல் இளம் சமுதாயத்தினரிடம் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் செயற்பாடாக அமையும். பண்ணுடன் பக்தி தோத்திரங்களை கற்கும் போது இலகுவில் பாடலின் பொருளை விளங்கவும், மனிதில் பதிய வைக்கவும் முடிகிறது. தனிநாயகம் அடிகளார். "தாய்லாந்தின் முடிசூட்டு விழாக்களிலும், ஊஞ்சல் விழாக்களிலும் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்களையே திரித்துப்பாடுகிறார்கள்."14

என்ற உண்மையை தனிநாயகம் அடிகள் வெளியிட்டுள்ளமை தோத்திரப் பாடலின் பொருளைவிளங்கிப்பாட வேண்டும்என்ற கருத்தை வலியுறுத்துகின்றது.இணையத்தின்மூலம் சமயக்கருத்துக்கள் பரவவேண்டும். இணையத்தில் வெளிவரும் நவீன சக்திகளால் பாதிக்கப்படும் இளம் சமுதாயத்தினரைக் காப்பாற்றும் வகையில் இணையத்தில் இந்துசமய அறிவுத்தளங்கள் பெருக வேண்டும். இதற்கு அறிவியல் துறையில் நிபுணத்துவம் பெறும் இளைஞர்கள் பணியாற்ற முன்வரவேண்டும்.

சமய வாழ்வு பலத்தையும், விடுதலையையும் அளிக்கின்றது. வாழும் நாள் அளவிட்டுக் கூறமுடியாதாயினும் வாழும்வரை நல்வழியில் கழிப்பதே அறிவுக்கு உகந்ததாகும் என்பதனை அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். இக்கருத்துக்களை இளஞர்கள் மனதில் நிலைநிறுத்துவது காலத்தின் தேவையாகும். ஆறுமுகநாவலர் "இந்த சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் இன்னகாலத்தில் இந்தசரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்" என்று குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது அன்று விவேகானந்தர் கூறிய அறைகூவலான

"எனது இளைஞர்களே! வேலையைச் செய்யத் தொடங்குங்கள். அதற்கான வேகத்தீ உங்களை வந்தடையும். வாழ்நாள் குறுகிய அளவானது. பெரும்காரியம் ஒன்றின் பொருட்டு அதைத் தியாகம் செய்துவிடுவீர்களாக! பணிபுரிவீர்களாக! என்று கூறியது இன்றைய இளைய தலைமுறையினருக்கும் உயிர்துடிப்புள்ள வேண்டுகோளாக அமைகின்றது.

இன்றைய இளம்தலை முறையினரே வருங்கால சமுதாயத்தை உருவாக்கவேண்டியவர்கள். அவர்களுக்கு "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற மனப்பாங்கு உருவாக வேண்டும். "ஒன்றே குலம். ஒருவனே தேவன்" என்ற உயர்ந்த நோக்கு ஏற்பட வேண்டும். "எவ்வுயிரும் தன்னுயிர் போல எண்ணி இரங்கும் அருள்நெறி" தோன்ற வேண்டும். மனிதன் மனிதானக வாழவேண்டுமாயின் சமயம் அவசியம் என்பதை இளம் சமுதாயம் உணரவேண்டும். அதுதான் சுவாமி விவேகானந்தரும், "சமயத்தை சமுதாயத்திலிருந்து எடுத்துவிட்டால் மிஞ்சுவது காட்டுமிராண்டிகளின் கூட்டமே" என்கின்றார். இதை இளம்சமுதாயம் உணர்ந்து செயல் வடிவம் கொடுப்ப காலத்தின் தேவையாகும்.

**முடிவுரை**

யாழ்ப்பாண இந்து சமய செல்நெறியில் இளைஞர்களின் பங்கும், பணியும் மிகவும் காத்திரமான இடத்தினைப் பெற்று விளங்குவது தெளிவாகின்றது. இளைய தலைமுறையினரிடம் காணப்படுகின்ற பிரச்சனைகள் அல்லது குறைபாடுகளை நீக்கி முறையான கட்டுக்கோப்புடன் கூடிய ஒழுங்கமைப்புடைய ஒருதுடிப்புள்ள இளைய தலைமுறையினர் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். இதன் மூலம் நலிந்து போன எமது பிரதேசத்தை மீண்டும் கட்டியெழுப்பிக்கொள்ள முடியும். கடந்த காலங்களில் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட போரினால் இழந்தவை சொல்லில் அடங்காதவை. ஆனாலும் இந்துசமயம் சார்ந்த வாழ்வு எம்மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை மனத்துணிவுடனும், உறுதியுடனும், வீரத்துடனும் அணுகும் பக்குவத்தை அளித்துள்ளது. நாட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தகாலத்தில் ஏற்பட்ட துன்ப, துயரங்கள் மறைந்து சாந்தி, சமாதானம் ஏற்பட்டு, என்றும் நிலைத்திருக்கும் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின் சமயவளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பு சிறப்பாசீக அமைய வேண்டும். எமது சமூகத்தின் எதிர்காலம் தூரநோக்குக் கொண்டதும், ஆழமானதுமான அடித்தளத்தினை மனித விழுமியங்களுடன் கூடிய இளம்தலைமுறையினரை உருவாக்குவதன் மூலம் ஏற்படுதிக்கொள்ளலாம் என்பது இவ்வாய்வு மூலம் பெறப்படுகின்றது.

**அடிக்குறிப்புகள்**

01. இந்திரபாலா,கா., (1978), ஆதி இலங்கையில் இந்து மதம், ஜயரத்தினம் உருவச்சிலை திறப்பு விழாச் சிறப்பு மலர், தெல்லிப்பழை, ப.15.

02. http://ta.wikipedia.org

03. தம்பையா, எச்.டபிள்யு. (1981), "தனிப்பெரும் அறிஞர் தனிநாயகம் அடிகள்".தனிநாயகம் அடிகளார் நினைவு மலர், மக்கள் குரல் வெளியீடு, யாழ்ப்பாணம், ப.இல்லை.

04. மனோன்மணி சண்முகதாஸ்., (2012), வழிபாட்டுக்கோலங்கள், வலிகிழக்கு சைவசமய அருள்நெறி மன்ற வெளியீடு, ப.79.

05. http://ta.wikipedia.org

06. http://tamilwin.com

07. உதயன் நாளேடு, 31.05.2012, ப.07.

08. தினக்குரல் நாளேடு, 10.07.2012, ப.06.

09. அமுதன் அடிகளார், (1993), தனிநாயகம் அடிகளார், உலகதமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.140.

10. ஆறுமுகநாவலர், நாலாம் பாலபாடம்.

11. இராமலிங்கம்,சி,. (1976), அண்மைக்காலத்து இந்திய மெய்ப்பொருளியல், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், அண்ணாமலை நகர், ப.172.

12. Hart Jeevan Arnikar, (2000), Essentails of occult Chemistry and Modern Science, The Theosephical publishing House, Chanai, P.Forward XV.

13. தனிநாயகம்அடிகள், வண.பிதா, (1980), தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும், செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவுகள், தந்தை செல்வா அறங்காவலர் குழு, யாழ்ப்பாணம், ப.32.

14. தேவராசன், ஆ, (1980), தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளார், கிறிஸ்தவர் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை வெளியீடு 01, கொழும்பு, ப. இல்லை.


**திருமதி. சுகந்தினி சிறிமுரளிதரன்,**
பீடாதிபதி,
இந்துக் கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய ஆலயத்தில் இருந்து கிடைக்க பெற்ற பொருட்கள்





## ஆலய சகடை மற்றும் வாகனங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஆதி மயிலிட்டி அருள்மிகு

# பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய

# திருப்பணி நிதி

# விஞ்ஞாபனம்

"புல்லினுற் பத்துக்கோடி புவிமண்ணினுல் நூறுகோடி
சொல்லுமாங் காலந்தன்னிற் செங்கல்லாயிரமாங்கோடி
அல்லியங் குழலாய் கேண்மோ ஆலய மடாலயங்கள்
கல்லினுற் சமைத்த பேர்கள் கைலை விட்டகலார்தாமே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் அடியார்களே!

பூர்வத்தில் மயிலைநகர் என வழங்கப்பட்ட ஆதிமயிலிட்டியில் கோயில் கொண்டு நண்ணினர்க் கெல்லாம் எண்ணியன ஈந்தருளும் அருள்மிகு பெரும் பரப்பு விநாயகப் பெருமானுக்கு; 1987 பங்குனித் திங்களில் எமது கிராமத்தில் ஏற்பட்ட இராணுவ அனர்த்தங்களினால் தடைப்பட்ட நித்திய நைமித்தியங்கள் இற்றை வரை இன்னமும் இல்லாதிருப்பதை மெய்யடியீர் நீவிர் அறிவீர்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. கோயில் மட்டும் இருந்தாற் போதாது. நித்திய நைமித்தியங்கள் நிறைவுடன் நடைபெற வேண்டும்; நாடும் மக்களும் நலம்பெற இவற்றின் இன்றியமையாமை கண்ட எமது கிராம மக்கள் எம்பெருமானுக்குத் தடைப்பட்ட நித்திய நைமித்தியங்கள் தங்கு தடையின்றித் தொடர்ந்து நடாத்தத் திருவருள் துணை கொண்டு பின் வருவோரைக் கொண்ட திருப்பணிச்சபை ஒன்றை 21-11-88-ல் அமைத்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| காப்பாளர்கள்: | — | திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன் |
| | — | திரு. இ. மகேசன் |
| | — | திரு. அ. இலங்கைநாயகம் |
| தலைவர்: | — | திரு. ந. நடராசா |
| துணைத்தலைவர்: | — | திரு. இ. நடராசா |
| கௌரவ செயலாளர்: | — | திரு. ச. அருணாசலம் |
| கௌரவ துணைச்செயலாளர்: | — | திரு. செ. அன்னராசா |
| பொருளாளர்: | — | திரு. இ. திருநாவுக்கரசு |
| நிர்வாகசபை உறுப்பினர்கள்: | — | திரு. சு. தர்மதாசன் |
| | — | திரு. நி. சின்னத்தம்பி |
| | — | திரு. கா. கணேசலிங்கம் |
| | — | திரு. க. சுவாமிநாதன் |
| | — | திரு. செ. கனகரத்தினம் |
| | — | திரு. ம. இரத்தினவடிவேல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமான வாழ்வு வாழ்ந்த எமது கிராம மக்கள் வருமானங் குன்றி வகையறியாது இடர்ப்படும் இவ் வேளையில் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இப்பாரிய பணியை இனிதுற இயற்றுவதென்பது அத்துணைச் சுலபமன்று. வேதாகம வல்லாரின் கருத்தும் சுவாமி பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் செய்யப் பட வேண்டும் என்பதே. எதிர் வரும் தை மாதத்தில் பாலஸ்தாபனம் செய்வதற்கு எண்ணியுள்ளோம்.

புனருத்தாரணத் திருப்பணிகளுக்கு ஆகும் செலவு பற்றி கலை வல்லாரின் விலை மதிப்பு ரூபா ஒரு இலட்சத்து எண்பத்து ஒன்பதினாயிரத்து முன்னூறு (ரூபா 1,89,300/- ஆகக் கணிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பாலஸ்தாபனம் | 5000 - 00 |
| வயிரவு சுவாமி செய்ய | 3000 - 00 |
| வசந்த மண்டபத்துக்கும் பிரதான மண்டபத்துக்கும் இடையில் கூரை கூலி உட்பட | 65000 - 00 |
| தூபி 4 நான்கிற்கு பெயின்ற் அடிக்க | 35000 - 00 |
| வசந்த மண்டபத்தைத் திருத்த | 3500 - 00 |
| நில வேலை முன் தெற்கு மண்டபம் | 17100 - 00 |
| கோயில் எழுந்தருளி | 4850 - 00 |
| உள்வெளி மதில் வேலை வெள்ளையடிக்க | 5850 - 00 |
| கும்பாபிஷேகம் செய்ய | 50000 - 00 |
| | 189300 - 00 |

மேற்படி திருப்பணிகளை இனிது நிறைவேற்றி, எம் பெருமானைப் பிரீதி பண்ணி இஷ்டசித்திகளை எல்லோரும் பெற்றுய்ய தங்களின் அன்பான தார்மீக சரீர பொருளாதார உதவிகளை வேண்டி நிற்கின்றோம். 'கொடுத்தார்க்குக் குறைவில்லை'' ''ஆம் பொருள் நுமதேயானுல் அறம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர்க்காவதுண்டோ'' எம்பெருமான் திருப்பணிக்காக நீவிர் மனங்கோணாமல் மனமுவந்து கொடுக்கும் ஒவ்வொரு செப்புக் காசும் பல கோடி பொற் காசாக எம்பெருமான் திருவருளால் உங்களை வந்தடையும். ஆகவே, எம்பெருமான் திருப்பணி நிதிக்கு வாரி வழங்குங்கள்.

பொருள் மிகுந்தவர் பொற்குவை தாரீர்
பொருள் குறைந்தவர் காசுகள் தாரீர்.

ஆதிமயிலிட்டி,
காங்கேசன்துறை.
1988-12-20

இங்஡னம்
ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்புப்
பிள்ளையார் ஆலய திருப்பணிச் சபையினர்

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 24175


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07-12-2019 இல் தெரிவு செய்யப்பட்ட
## பரிபாலன சபையினர் விபரம்

| | |
|---|---|
| தலைவர் | :- திரு. மகேசன் சுகுமாரன் சுகுமாரன் |
| உபதலைவர் | :- திரு. செல்லத்துரை ஜெயக்குமார் |
| செயலாளர் | :- திரு. சிவபாதசுந்தரம் சண்முகானந்தன் |
| உபசெயலாளர் | :- திரு. திருப்பரங்கிரிநாதன் திருத்தணிகைநாதன் |
| பொருளாளர் | :- திரு. இராமநாதன் பிரபாகரன் |
| உபபொருளாளர் | :- திரு. சங்கரப்பிள்ளை ஜெயராஜசிங்கம் |

## நிர்வாக உறுப்பினர்கள்

திரு. வல்லிபுரம் அருளானந்த குமாரசுவாமி

திரு. இராசகோபால் கேதீஸ்வரன்

திரு. இரத்தினம் குமாரசூரியர்

திருமதி. கலாவதி பாலகிருஷணன்

திருமதி. பானுமதி குருபரன்

திரு. அம்பிகைபாலன் சுஜன்

திரு. திருநாவுக்கரசு நிருசன்

திரு. முருகதாஸ் கஜன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஆதிமயிலிட்டி

# அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை

## ATHIMYLIDDY ARULMIKU PERUMPARAPPU PILLAYAR ALLYA PARIPALANA SAPAI

Athimyliddy,
Myliddy north,
Kankesanthurai.

ஆதிமயிலிட்டி,
மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை.

---

பிரதேச செயலாளர்
வலி வடக்கு
தெல்லிப்பளை

கிராமசேவையாளர்
மயிலிட்டி வடக்கு
J/246

மதிப்பிற்குரிய ஐயா!

**<u>ஆதி மயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய மீள் நிர்மாணம்</u>**

மேற்படி ஆலயம் 13-10-2018ஆம் திகதி இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து சுமார் 30 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டபோது சுமார் இரண்டு கோடி ரூபா (20,000,000/=) பெறுமதியான ஆலய கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

மேற்படி ஆலயம் முற்றாகச் சேதமடைந்துள்ளது என்பதை உறுதிப்படுத்தித்தரும்படி தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கடிதம் காவல்துறையில் முறைப்பாடு செய்வதற்கும், இந்து கலாசார அமைச்சில் பதிவு செய்வதற்கும் தேவைப்படுகின்றது.

இப்படிக்கு

..............................

ம. சுகுமாரன்

02/03/20

ம.சுகுமாரன்
(தலைவர்)
ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு
பிள்ளையார் ஆலய பரிபாலன சபை
மயிலிட்டி வடக்கு
காங்கேசன்துறை

மேற்படி ஆதி மயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் கோவில்
மயிலிட்டி வடக்கில் பகுதியில் அமைந்துள்ளது

02.03.2020
A.Nishanthan
Grama Niladhari/Justice of peace
J/246, Myliddy North
Divisional Secretariat
Valikamam North
Tellippalai

The report of the Grama Sevaka
myliddy North J/246
Division is counter signed
..............................
Asst. Divi. Secretary/Admin. Officer
Divisional Secretariat Tellippalai.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පොලිස් 424
Police

...................... පොලිස් ස්ථානයේ තොරතුරු සටහන් පොතේ සත්‍ය පිටපතකි

காங்கேசந்துறை பொலிஸ் நிலைய தகவல் புத்தகத்தின் உண்மைப்பிரதி.

Extract from the Information Book of ...................................... Police Station

| තොරතුරු පොත / தகவல் புத்தகம் / Information Book | දිනය / திகதி / Date | වේලාව / நேரம் / Time | පිටුව / பக்கம் / Page | ඡේදය / பந்தி / Para |
|---|---|---|---|---|
| CIB | 2020/03/06 | 12.00 | 15 | 49 |

கோவில் சேதமடைந்தது தொடர்பாக

இல 82 [illegible] 06 [illegible] m' [illegible]

[illegible]

[illegible]

[illegible] 89437 [illegible]

[illegible] 1 [illegible]

[illegible] 60, [illegible]

[illegible] 06 [illegible]

1959161013 13 T.P - 0718098045 [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

30 [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] (x x x x) [illegible]

[illegible] m' [illegible]

89437 [illegible]

[illegible] ஒ/ப [illegible]

x x x x x x x x x x x x x x x x

[illegible] 89437 [illegible]

[illegible] ஒ/ப [illegible]

ඉහත උධෘත මා භාරයේ ඇති තොරතුරු සටහන් පොතෙන් උපුටා ගත් සත්‍ය පිටපතක් බවට මම සහතික කරමි.

எனது பாதுகாப்பில் உள்ள, இத்தகவல் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்ட மேற்படி பிரதி சரியானது என நான் உறுதிப்படுத்துகிறேன்.

This is to certify that this is a true extract taken from the Information Book, mentioned above which is in my custody.

..................................

ස්ථානාධිපති / பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

2020/06/23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஆதிமயிலிட்டி

# அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை

## ATHIMYLIDDY ARULMIKU PERUMPARAPPU PILLAYAR ALLYA PARIPALANA SAPAI

Athimyliddy,
Myliddy north,
Kankesanthurai.

ஆதிமயிலிட்டி,
மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை.

தலைவர்,
வலிவடக்கு பிரதேச சபை.

கனம் ஐயா,

இம்மாதம் 01.04.2022 இலிருந்து 06.04.2022 வரை நடைபெற்ற அருள்மிகு ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேகத்தின் போது தங்களால் செய்து தரப்பட்ட சகல வசதிகளுக்கும், கும்பாபிஷேக நிகழ்வில் தாங்கள் கலந்து கொண்டதற்கும், எமது ஆலயத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்பொழுது எமது ஆலயத்திற்கு அருகில் (எனது பாட்டனாரினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட) உள்ள காணியில் மீண்டும் உங்கள் பிரதேச சபை அலுவலகம் வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். வருங்காலத்திலும் எமது ஆலயத்திற்கு தேவையான சகல உதவிகளையும், ஆலய சுகாதார பராமரிப்புக்களையும் தங்கள் பிரதேச சபையால் செய்து தருமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இத்துடன் 23.05.2022 காலை நடைபெறும் மண்டலாபிஷேக பூர்த்தியிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் கும்பாபிஷேக மலர் வெளியீட்டிலும் தாங்கள் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

இப்படிக்கு,

27/0

ம.சுகுமாரன்
தலைவர்
ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு
பிள்ளையார் ஆலய பரிபாலன சபை
மயிலிட்டி வடக்கு
காங்கேசன்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.கபிலன் வில்லவராஜன் BSc, LLB, LLM
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
சத்தியப்பிரமாண ஆணையாளரும்
இல. 86/1-2/1, பசில்ஸ் ஒழுங்கை,
வெள்ளவத்தை, கொழும்பு -06
தொ. பே. இல. 0112367969/ 0777558340



# கோயில் கட்டுமான உடன்படிக்கை

## இல.138

**இத்தால் சகலருமறிக** பெரும்பரப்பு பிள்ளையார் ஆதிமயிலிட்டி ஆலய நிர்வாகத்தினர் சார்பாக அதன் தலைவர் கொழும்பு - 06, பசில்ஸ் ஒழுங்கை இல. 82 என்ற முகவரியைச் சேர்ந்த **மகேசன் சுகுமாரன்** (தேசிய அடையாள அட்டை இல.195916101313) ஆகிய நான் **முதலாம் பகுதியாகவும்,**

ஸ்ரீ நாராயணன் சிற்பக் கலையக உரிமையாளரான அராலி, அராலி தெற்கு என்ற முகவரியைச் சேர்ந்த **சிவபாதசுந்தரம் சசிகரன்** (தேசிய அடையாள அட்டை இல.763664368V) ஆகிய நான் **இரண்டாம்** பகுதியாகவும்

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு பங்குனி மாதம் பத்தாம் திகதி (10.03.2020) அன்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பில் இணங்கி எழுதிக்கொள்ளும் கோயில் கட்டுமான உடன்படிக்கையாவது.

பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயத்தை புனரமைப்பு செய்வதற்கு ஆலய நிர்வாகசபை தீர்மானித்துள்ளது. குறித்த புனரமைப்பினை **இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு** பங்குனி **மாதம் இருபத்தேழாம் திகதியில்** (27.03.2020) இருந்து **இரண்டாயிரத்து இருபத்தொராம் ஆண்டு பங்குனி மாதம் பதினைந்தாம் திகதி** (15.03.2021) வரையான காலப்பகுதிக்குள் கட்டுமானப் பணியைச் செய்வதற்கு பின்வரும் நிபந்தனைகள் கட்டுப்பாடுகளுக்கு அமைய இரண்டாம் பகுதியாருக்கு கொடுக்க முதலாம் பகுதியார் உடன்படுவதுடன் இரண்டாம் பகுதியினர் குறித்த நிபந்தனைகள் கட்டுப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவதாகவும் உடன்படுகின்றார்கள்.

### குறித்த நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும்

1. இக்கோயில் கட்டுமான உடன்படிக்கை காலம் **இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தேழாம் திகதியில்** (27.03.2020) இருந்து **இரண்டாயிரத்து இருபத்தொராம் ஆண்டு பங்குனி மாதம் பதினைந்தாம் திகதி** (15.03.2021) வரை அமுலில் இருக்கும்.

2. இக்கட்டுமானப்பணிக்கான முழுத்தொகையானது ஐந்து கட்டங்களாகப் பிரித்து முதலாம் பகுதியாரால் கீழ்வருமாறு வழங்கப்படும்

    1. வேலைத்திட்டம் ஆரம்பிக்கும்போது
    2. அறுட்டான வரி கட்டும்போது
    3. பிளாற்போடும் போது
    4. பண்டிகை கட்டி பூச்சுவேலை ஆரம்பிக்கும் போது
    5. வயறிங் மற்றும் வர்ணவேலை முடித்து திறப்பு கையளிக்கும் போது

குறித்த 2ம், 3ம், 4ம், 5ம் கட்டங்கள் குறித்த தரநியமங்கள் உரிய வடிவமைப்புக்கள் உரிய பரிமாணங்களிற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றதா என்பதனை சுயாதீன துறைசார்நிபுணர்களால் ஒவ்வொரு கட்டத்தின் போதும் உறுதி செய்யப்பட்ட பின்னரே முதலாம் பகுதியாரால் இரண்டாம் பகுதியாரிற்கு பணம் செலுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த 2ம், 3ம், 4ம், 5ம் கட்டங்களில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படின் அவை உரிய முறையில் இரண்டாம் பகுதியாரால் உரிய வேளையில் செய்யப்படல் வேண்டும்.

குறித்த 2ம், 3ம், 4ம், 5ம் ஒவ்வொன்றும் முழுமையாக நிறைவு செய்யாது இரண்டாம் பகுதியார் அக்கட்டங்களிற்குரிய பணத்தை எக்காரணம்கொண்டும் கோர முடியாது.

குறித்த ஐந்து கட்டங்களாக பணததை பெற்றுக்கொள்ளவும் முதலாம் பகுதியாரின் தேவைப்பாட்டினை உரிய முறையில் நிறைவேற்றிக்கொடுப்பேனென்றும் இரண்டாம் பகுதியார் உடன்பட்டுக்கொள்கின்றார்.

3. இரண்டாம் பகுதியாரால் வழங்கப்பட்ட கட்டிடத்திட்டமானது முதலாம் பகுதியினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கட்டிடத்திட்டத்தின் விபரங்கள் கீழ்வரும் பிரிவுகளில் உள்ளக்கப்பட்டுள்ளது.

4. பிள்ளையார் ஆலயம் இடித்து துப்பரவு செய்து 13 ½ அடி நீளம் 9 அடி 9 இஞ்சி அகலம் 5 அடி ஆழ அத்திவாரம் வெட்டி நிரவி 4 இஞ்சி கொங்கிறீட்போட்டு, பாய் கட்டி 9 அடி 5 இஞ்சி கால் பிறவாயில் உத்திர மட்ட வேலை செய்து கழுத்து பண்டிகை அமைத்து விக்கிரகங்களான பிள்ளையார்- 4, எலி – 8, பூதம் - 4, கதவு - 4, கலசம் - 4 இவற்றுடன் ஆசனம், வயறிங், மாபிள் மற்றும் வர்ணம் இவற்றிற்கான பொருட்களுடன் கூலி அத்துடன் தரிசன மண்டப சொக்கட்டான் அமைப்பதற்கு பிளாற்றுக்குரிய பொருட்களுடன் கூலி அடங்கலாக மொத்த தொகை ( இவ் ஆலய கட்டிடத்தினுள் மூலஸ்தானம், கழுத்து பண்டிகை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், சபை பண்டிகை, தரிசன மண்டபம் இவற்றுக்கு பிளற், . தம்ப மண்டபம் 8 தூண் கூரை இவற்றுடனான பொருட்களுடன் கூலி ஆகியன கட்டிடவிபரத்தினுள் உள்ளக்கப்பட்டுள்ளது) **ரூபா ஐம்பத்தைந்து இலட்சம் (ரூ.5,500,000.00)** ஆகும். இரண்டாம் பகுதியார் மேற்குறித்த அளவுப்பிரமாணங்களிற்கு அமையவும் குறித்த தொகைக்கும் நிர்மாணப்பணிகளை நேர்தியாகவும் செவ்வனேயும் செய்து முடித்தல் வேண்டும். இரண்டாம் பகுதியார் குறித்த அளவுப்பிரமாணங்களில் எதுவித மாற்றத்தினையோ குறைப்பையோ செய்ய முடியாது. குறித்த கட்டுமாண பணிகளின்போது ஏதேனும் பிரயோக ரீதியான சிக்கல்கள் ஏற்படும்போதோ கட்டுமாணப்பணியின் செம்மை கருதியோ ஏதேனும் மாற்றங்களோ சேர்கைகளோ செய்வதாயின் குறித்த முதலாம் பகுதியாரின் எழுத்து மூலமான அனுமதியை பெற்றே ஏதேனும் மாற்றங்களையோ அல்லது சேர்புக்களையோ செய்ய முடியும். மேலும் பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கமைய குறித்த ரூபா ஐம்பத்தைந்து இலட்சத்தை (ரூ.5,500,000.00) 5 கட்டங்களாக முதலாம் பகுதியாரால் செலுத்தப்படும்.

5. வசந்த மண்டபம் இடித்து துப்பரவு செய்து 18 அடி நீளம், 12 அடி அகலம் 5 அடி அழ அத்திவாரம் வெட்டி அத்திவாரம் நிரவி 4 இஞ்சி கொங்கிறீட்போட்டு பாய் கட்டி 13 அடி 6 ¾ இஞ்சி 9 அடி 4 ½ இஞ்சி அகலம் கால் பிறவாயில் உத்திர மட்ட வேலை செய்து கழுத்து பண்டிகை அமைத்து விக்கிரகங்களான பிள்ளையார்- 3, பஞ்ச முக பிள்ளையார் - 1, எலி – 8, கதவு - 1, கலசம் - 5 இவற்றுடன் வயறிங், மாபிள் மற்றும் வர்ணம் இவற்றிற்கான பொருட்களுடன் கூலி **ரூபா இருபத்தொரு இலட்சத்து எழுபத்தையாயிரம் (ரூ.2,175,000.00)** ஆகும். இரண்டாம் பகுதியார் மேற்குறித்த அளவுப்பிரமாணங்களிற்கு அமையவும் குறித்த தொகைக்கும் நிர்மாணப்பணிகளை நேர்தியாகவும் செவ்வனேயும் செய்து முடித்தல் வேண்டும். இரண்டாம் பகுதியார் குறித்த அளவுப்பிரமாணங்களில் எதுவித மாற்றத்தினையோ குறைப்பையோ செய்ய முடியாது. குறித்த கட்டுமாண பணிகளின்போது ஏதேனும் பிரயோக ரீதியான சிக்கல்கள் ஏற்படும்போதோ கட்டுமாணப்பணியின் செம்மை கருதியோ ஏதேனும் மாற்றங்களோ சேர்கைகளோ செய்வதாயின் குறித்த முதலாம் பகுதியாரின் எழுத்து மூலமான அனுமதியை பெற்றே ஏதேனும் மாற்றங்களையோ அல்லது சேர்புக்களையோ செய்ய முடியும். மேலும் பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கமைய குறித்த ரூபா இருபத்தொரு இலட்சத்து எழுபத்தையாயிரத்தை (ரூ.2,175,000.00) 5 கட்டங்களாக முதலாம் பகுதியாரால் செலுத்தப்படும்.

